


# தமிழரசு

மார்ச் 1.1973 விலை 40 காசு





# சிறு தொழிலுக்கோர் உறுதுணை...... எல் & டி மோட்டார் ஸ்டார்ட்டர்



அரிசிமில், மாவுமில், ஆயில் மில், மர அறுவைத் தொழில் போன்ற சிறு தொழில் நிறுவனங்களில் இயங்கும் மோட்டார்களைச் சீராகச் செலுத்த, சிறந்த ஒரு சாதனம் எல் & டி ஸ்டார்ட்டர். எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸ்டார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

உங்கள் நலனை மனதில் கொண்டு லார்ஸன் & டூப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

- பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று, வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்விஸ் வசதிகள் செய்துகொடுக்கின்றனர்.
- சிறிய ஊர்களில் கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

CONTROL POWER WITH **L&T Switchgear**

**ஸ்விட்ச்கியர் டிவிஷன்,**
**லார்ஸன் அண்டு டூப்ரோ லிமிடெட்**

P.O. Box 8922, பம்பாய் 72 □ P.O. Box 323, புது டில்லி 1.
P.O. Box 619, கல்கத்தா 16 □ Post Bag 5247, சென்னை 2.

LT. 3856

# தமிழரசு


மலர். 3] 1·3·1973 [இதழ் 17.

உள்ளே
முதல்வர் கலைஞர் தரும்
நிதிநிலை அறிக்கை

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களின் வானொலி உரை.

மற்றும் வழக்கமான பகுதிகள் அனைத்தும் உண்டு


குடியரசுத் தலைவர் திரு. வி. வி. கிரி அவர்கள் ராஜாஜி நினைவாலயத்திற்கு அடிக்கல் நாட்டுகிறார்கள்




சந்தர்

# செய்திச் சித்திரம்


தினக்கூலி அடிப்படையில் பணிபுரியும் மின்வாரியத் தொழிலாளர்கள் 9000 பேர், உடனடியாக நிரந்தரமாக்கப்படுவர்.
மின்வாரிய ஊழியர்களுக்கு அடுத்த ஆண்டு முதல் வீட்டு வசதித் திட்டம் செயல்படும்


பள்ளி மாணவர்களுக்கு இலவச வைத்தியப் பரிசோதனைத் திட்டம் முதன் முதலாக, செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள காஞ்சிபுரத்தில் துவக்கப்பட்டுள்ளது.


ஒரு கோடி ரூபாய் முதலீட்டில் பால் பவுடர் தொழிற்சாலை ஒன்றினை மதுரையில் நிறுவ இருக்கிறது தமிழ்நாடு அரசு.
அரசு பால்பவுடர் தொழிற்சாலை
சாமி !!!


பிச்சைக்காரர்
மறுவாழ்வு இல்லம்
மனையேரிப்பட்டி
தஞ்சை மாவட்டத்தில்
மனையேரிப்பட்டியில் 10 இலட்ச
ரூபாய் செலவில் தொழுநோய்ப்
பிச்சைக்காரர்களுக்கு
மறுவாழ்வு இல்லத்தை
17-2-1973-ல் முதல்வர்
கலைஞர் அவர்கள்
திறந்து வைத்தார்கள்


அரிசி ஆலைகளுக்கும்
மாவு ஆலைகளுக்கும்
மின்வெட்டு 75 சத
விகிதத்திலிருந்து
25 சத விகிதமாகக்
குறைக்கப்படும் என்று
முதல்வர் கலைஞர்
அறிவித்திருக்கிறார்.
25%


நலத்துறை
பல்லாண்டுக் காலமாக
நிரந்தரம் செய்யப்படாமல்
பணியாற்றி வந்த சுமார்
1500 நலத்துறை
ஆய்வாளர்கள் நிரந்தரமாக்கப்
படுவதற்குரிய ஆணையைத்
தமிழ்நாடு அரசு
பிறப்பித்துள்ளது.

சாமி...

# சமுதாயத்திற்கு வாழ்வு தரும் பணி

இன்று நாட்டில் எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன. பட்டம் பெற்ற மாணவர்களுக்கு வேலை வாய்ப்புப் பிரச்சினை இருக்கிறது.

வேலை வாய்ப்புப் பிரச்சினையைத் தீர்க்க ஒரு மாநில அரசு தன் அதிகாரத்திற்கும்—நிதி ஆதாரத்திற்கும் உட்பட்டு, எவ்வளவு முயற்சி செய்ய வேண்டுமோ அந்த அளவுக்கு இந்த அரசு முயற்சி செய்து வருகிறது. மருத்துவத்துறைக்கு அரசு ஆண்டுக்காண்டு எவ்வளவு செலவு செய்கிறது என்பதை அனைவரும் அறிவீர்கள்.

மருத்துவக் கல்லூரி சம்பந்தப்பட்ட கருவிகள் வாங்கிடச் சென்ற ஆண்டு 100 இலட்சம் ரூபாயும், இந்த ஆண்டு 110 இலட்சம் ரூபாயும் செலவிடப்பட்டிருக்கிறது.

நமது தமிழ்நாட்டிலுள்ள 8 மருத்துவக் கல்லூரிகளில் 8,000 பேர் படிக்கிறார்கள். ஆண்டு தோறும் பட்டம் பெறுகிறவர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டிருக்கிறது. கடந்த ஆண்டு ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் தேறியிருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் பட்டம் பெறுகிறவர்களின் தொகை அதிகமாகுமே தவிரக் குறையாது. இவர்களின் பிரச்சினைக்குத் தக்கது செய்ய வேண்டியது அரசின் கடமை. ஆனால் அந்தக் கடமையை நிறைவேற்ற அரசுக்குள்ள பொறுப்பையும்— சங்கடங்களையும் அனைவரும் உணர்ந்து, ஒத்துழைக்க வேண்டும்.

மருந்தியல் துறையில் பட்டம் பெற்றவர்கள், பல் மருத்துவத் துறை மாணவர்கள் ஆகியோரின் வேலை வாய்ப்பைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இந்தப் பிரச்சினை அலட்சியப்படுத்தப் படக்கூடியதல்ல—ஆனால் இதனை எந்த அளவு தீர்க்கலாம் என்பதற்கு, அரசுக்கு அவகாசம் தர வேண்டும்.

பல் மருத்துவத் துறையில் பட்டம் பெற்றவர்களுக்கு என்ன செய்யலாம் என்று யோசித்துப் பார்த்தோம். கூடுமான வரை, இன்றுள்ள நிதி நிலையைப் பொறுத்து 40 படுக்கைகளும்—அதற்கு மேலும் இருக்கின்ற மருத்துவ மனைகளில் இந்த வேலைப்பிரிவுகளை ஏற்படுத்தலாம் என்று அரசு முடிவெடுத்திருக்கிறது.

அதைப் போலவே, மருந்தியல் துறையில் பட்டம் பெற்றவர்களின் கோரிக்கையைப் பொறுத்து சென்னை அரசாங்கப் பொது மருத்துவமனை—மதுரை எர்ஸ்கின் அரசு மருத்துவ மனை ஆகியவற்றில் மருந்து தயாரிக்கும் பணி துவங்கினால் ஓரளவு வேலை வாய்ப்புக் கிடைக்கும். இதனை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. இந்தப் பணி துவங்கியதும் சென்னை—மதுரை மருத்துவ மனைகளில் மருந்தியல் மாணவர்களை அரசு ஈடுபடுத்தும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாணவ நண்பர்கள் தங்களது கடமையைச் செய்ய முன்வந்து அமைதியாகப் பிரச்சினையை அணுகினால் நல்ல நடவடிக்கைகளை அரசு எடுக்க முடியும்.

தனிப்பட்டவர்களிடையே எழும் மாச்சரியங்கள்—காழ்ப்புகள் காரணமாக வேண்டத்தகாத—விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடந்துவிடுகின்றன.

அரசு இன்னின்ன செய்ய வேண்டும் என்று கோரிக்கை எழுப்பப்பட்டு, அரசு அது சம்பந்தமாக என்னென்ன செய்கிறது என்பதைப் பற்றியும் காத்திருந்து பார்க்காமல் நடவடிக்கைகளில் ஈடுபடும்போது பிரச்சினைக்கே கொஞ்சமும் சம்பந்தமில்லாத பொதுமக்கள் பாதிக்கப்பட்டுவிடுகிறார்கள்.

ஒரு டாக்டருக்கும் கடைநிலை ஊழியர் ஒருவருக்கும் தகராறு என்றால் அது தமிழ் நாட்டிலுள்ள எல்லா டாக்டர்களுக்கும் கடைநிலை ஊழியர்களுக்கும் இடையிலே ஏற்பட்ட தகராறு என்று கருதிவிடக்கூடாது.

ஒரு ஆசிரியருக்கும்—போலீஸ்காரருக்கும், தகராறு வந்தால் அது தமிழகம் முழுவதுமுள்ள ஆசிரியர்—போலீஸ்காரர் தகராறு அல்ல.

சமுதாயத்திற்கு வாழ்வு தரக்கூடிய—ஒளியை ஏற்படுத்தக்கூடிய பணியைப் பட்டிதொட்டி எங்கும் செய்ய இருக்கின்ற உங்கள் அனைவரையும் நான் வாழ்த்துகிறேன்.

**முதல்வர் கலைஞர்**

**[சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு மண்டபத்தில் நடைபெற்ற மருத்துவக் கல்லூரிப் புதிய பட்டதாரிகளுக்கு வரவேற்பு விழாவில் முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை.]**

# கதர்-கைத்தொழில் பொருட்களில் எத்தனை எத்தனை வளர்ச்சி இங்கே!

காந்தியடிகள் கனவை நனவாக்கும் பணிகளில் தமிழ்நாடு என்றும முன்னணியில் திகழ்கிறது.

அந்தப் பணியின் சிறப்பை எடுத்துக் காட்டுவது போல அமைந்திருந்தது கடந்த 13-2-73 அன்று சென்னையில் அரசினர் தோட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்ட கதர் இயக்கப் பொன் விழாப் பொருட்காட்சி.

முதலில் பொருட்காட்சியைச் சுற்றி வருவோம்.

அரசினர் தோட்டத்தில் ராஜாஜி மன்றத்திற்குச் செல்லும் தலைவாயில் வழியாகச் செல்கிறோம். நமது வலப் பக்கம் அண்ணல் காந்தியடிகள் நூற்றாண்டு விழாவை ஒட்டி அமைக்கப்பட்டிருக்கும் காந்தி இல்லத்தின் வெளிப்புறம் இருக்கிறது.

கோவைச் சிறையில் கப்பலோட்டிய தமிழன் வீர சிதம்பரனார் இழுத்த செக்கு.

அதற்குப் பக்கத்தில் புதிதாக இன்னொரு செக்கு—கதர் இயக்கப் பொன்விழாப் பொருட்காட்சி, தொடக்கமாக நம் கண்களில் படுகிறது.

நாட்டுச் செக்கு—ஆனால் விசைச் செக்கு இது.

கிராமக் கைத்தொழில் வளர்ச்சிக்கு அடையாளமாகத் திகழ்கிறது. மாட்டுச் செலவைக் குறைத்து—நல்ல நயமான எண்ணெய் கிடைக்க வழி வகுக்கிறது.

இடப் பக்கம் பொருட்காட்சி அங்காடிகள் வரிசையாக அமைந்துள்ளன.

முதலில் உள்ள கடை—கைவண்ணப் பொருட்களின் களஞ்சியமாகத் திகழும் குறளகத்தின் ஒரு பகுதி.

சிறப்புக்குக் கேட்க வேண்டுமா ?

தமிழகத்தின் சிறப்பை எடுத்துக் காட்டும் கைவினைப் பொருட்கள் ஏராளம்.

இரண்டாவதாக இருப்பது செங்கற்பட்டு மாவட்டம் செவ்வாய்ப்பேட்டை மண்பாண்டத் தொழிற்கூடத்தைச் சேர்ந்த கடை.

மண்பாண்டங்களிலே தான் எத்தனை வகை. எத்தனை விதம்,

ஒரு புதிய பானை குளிர் சாதனப் பானை, மூடியுள்ள இந்தப் பானையில் ஒரு வாரத்திற்குக் காய்கறிகள், முட்டைகள் போன்றவை கெடாமல் வைத்திருக்கலாம். அடியில் உள்ள அடுக்கில் மட்டும் இரண்டு நாளைக்கு ஒருமுறை நீரை மாற்றலாம். கொள்ளை மலிவு; விலை ரூபாய் 4.42 தான். இது ஏழைகளின் '' ஃபிரிஜிடைர்''.

கண்ணைக் கவரும் இன்னொன்று—மாஜிக் ஜாடி.

மண்ணால் ஆகிய இந்த ஜாடியின் அடிப்புறத்தில் தண்ணீர் ஊற்றி நிரப்பலாம். ஆனால், நாம் தலைகீழாகக் கவிழ்த்தால் கீழே தண்ணீர் ஊற்றாது. சாய்த்தால் அதன் வாய் வழியாகத் தண்ணீர் ஊற்றும். ரூபாய் 5, 7 ஆகிய விலைகளில் மாஜிக் ஜாடி கிடைக்கிறது.

தென்னார்க்காடு மாவட்டம் கடலூர் அருகிலுள்ள வண்டிப்பாளையத்திலிருந்து செய்து வந்த பொம்மைகள் உள்ளன.

அடுத்து மோகனாம்பாள் மோல்டிங் ஒர்க்ஸ்—காகிதப் பொம்மைகள். ஆளுயரப் பொம்மைகள் கண்ணைக் கவர்கின்றன.

தாயும் குழந்தையும், வள்ளுவர் போன்றவை மறக்க முடியாதவை.

பார்ப்பவர்களில் ஒருவர் கேட்கிறார் ''இந்தப் பொம்மைகள் எவ்வளவு காலம் இந்த அழகுடன் இருக்கும்?''

''எவ்வளவு காலம் பாதுகாப்பாக நாம் வைத்திருக்கிறோமோ அவ்வளவு காலம் இருக்கும்''—இது பதில்.

அடுத்து நம்மைக் கவர்ந்து இழுப்பது தோல் பொருட்கள் அங்காடி. எல்லாவிதமான தோல் பொருட்கள்—பலவகையில், நவீன நாகரிகங்களுக்கு ஏற்ற வகையில் காலணிகள், பெட்டிகள்.

சென்னை பெரியமேடு, வேலூர் மதுரை, திண்டுக்கல் ஆகிய இடங்களிலிருந்து வந்த தோல் பொருட்கள்.

அடுத்தது காஞ்சிபுரம் மண் பொம்மைக் கடை. இங்கே 25 காசு முதல் 125 ரூபாய் வரை விலையுள்ள பொம்மைகள் உள்ளன. காண்போர் அனைவரையும் கவரத்தக்க இந்த மண்பொம்மைகள் மிகமிக அழகானவை.


அடுத்துள்ளது திருக்கழுக்குன்றத்திலுள்ள 'கோபுரம்' சோப்புப் பிரிவு. திருத்தணியில் உள்ள வி.ஐ.பி. தீக்குச்சிப் பிரிவு.

பார்த்துக் கொண்டிருப்பவர்களில் ஒருவர் உரக்கச் சொல்கிறார். ''இதைப் பற்றியெல்லாம் விவரமா தமிழரசிலே போட்டிருக்கிறாங்க.... நான் படிச்சிருக்கேன்....''

''ஆமாம், விசைச் செக்குப் பற்றியும் போட்டிருந்தாங்க.... நல்லா விவரமா இருந்தது..''

அடுத்து, தேனீ வளர்ப்பு....


உண்மையிலேயே அங்கே தேனீ வளர்ப்பு நடைபெற்றது.


# கதர் கிராமத் தொழில்கள்

கதர் கிராமத்
தொழில்களை
ஆதரிப்பது
புனிதத் தொண்டு

கதர் கிராமத்
தொழில்களை ஆதரிப்பது
கிராம மக்களுக்குச்
செய்யும் பேருதவி

கதர்: கதர்ப் பட்டு
சோப்பு, தேன்
தோல் பொருள்கள்
பனை வெல்லம்.
பனைப் பொருள்கள்
வார்ப்படங்கள்
மற்றும் பல்வேறு கைநுட்பப்
பொருள்கள் கதர் கிராமத் தொழில்
விற்பனை நிலையங்களில் கிடைக்கும்




## கதர் கிராமத் தொழில் துறை

2. சர் தேசிகாச்சாரி சாலை
சென்னை-4

சந்தர்

தேனடை மரத்தில் தொங்குகிறது.

மண்பானையில் தேனீ வளர்ப்பது முதல் தேனீப் பெட்டிகள் பலவற்றையும் வைத்திருக்கிறார்கள். தேனீக்கு எதிரிகள் எவை என்பதையும் அங்கே புரிய வைத்திருக்கிறார்கள். இராணி ஈயை வளர்ப்பது முதல் எல்லா விவரங்களையும் இங்கே நாம் தெரிந்து கொள்ளலாம்.

அங்கே தேன்களில் பலவகைகள். பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன. எத்தனை வகைத் தேன்கள்.

கம்புத்தேன்
காரைப் பூத்தேன்
குறிஞ்சிப் பூத்தேன்
மாம் பூத்தேன்
வாதமடக்கிப் பூத்தேன்
நொச்சிப் பூத்தேன்
பேய் எள்ளுத் தேன்
மிளகாய்ப்பூத் தேன்
தென்னம்பூத் தேன்
மக்காச் சோளத்தேன்
வாழைப் பூத்தேன்
சந்தனப் பூத்தேன்
எட்டி மரத்தேன்
ஓணான் கொடிப் பூத்தேன்
புல்தடுக்கிப் பூத்தேன்
பருத்திப் பூத்தேன்
புங்கப் பூத்தேன்
வேப்பம் பூத்தேன்

இப்படிப் பல வகையான தேன்களை அங்கே காணமுடிகிறது.

அடுத்து இருப்பது திருநெல்வேலி மாவட்டம் கோயில்பட்டி அருகிலுள்ள ஏரல் தச்சு கொல்லுப் பட்டறைப் பிரிவு.



இங்கே லைசென்ஸ் பட்டைகள் போன்ற சிறிய சிறிய பொருள்கள் தயாராகின்றன.

அடுத்து, கிண்டி தச்சுப் பட்டறைப் பிரிவில் செய்த மரச் சாமான்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

நவீன வாழ்க்கைக்கு வேண்டிய எல்லா நாகரிகப் பொருள்களையும் இங்கே காணலாம். வெளியில் விற்கும் மரச் சாமான்களைவிட மலிவாகவே உள்ளது.

அடுத்து மரப் பொம்மைகள் கடை.

சிறிய சந்தன யானையின் விலை எட்டரை ரூபாய் தான்.

இடையே செங்கற்பட்டு மாவட்டப் பனைப்பொருள் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கத்தின் பல கடைகள், பனை ஓலைப் பொருளிலிருந்து பனைமட்டை, தும்பு, நார் முதலிய பொருள்களைப் பயன்படுத்திப் பல விதப் பொருட்கள்.

எந்த நேரத்திலும் பதநீர் கிடைக்கும் கடை.

கோவை மாவட்டம் திருப்பூர் அருகிலுள்ள பெருமாநல்லூர் தறிப் பிரிவு அமைந்துள்ள பகுதி. கதர்த் துணியில் விசைத் தறியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை விளக்குகிறது.


கோவை அவினாசியில் அமைக்கப்பட்டிருக்கும் ஜக்கார்டு டிசைன் பிரிவின் பகுதி. பலவிதமான தோற்றங்களில் படுக்கை விரிப்பு, போர்வைகள் உள்ளன.

அடுத்து இருப்பது கத்தாழை நார்ப்பகுதி.

திருநெல்வேலி காருண்யபுரத்திலுள்ள கத்தாழை நார்ப் பிரிவில் செய்யும் பணிகளைச் செய்து காட்டுகிறார்கள்.

ரூபாய் ஆயிரம் மூலதனம் இருந்தால் போதும். இது போன்ற பிரிவுகளைத் தொடங்கலாம்.

கத்தாழை நாரில் செய்யப்படும் கயிறுகளை வாங்கி வெளிநாடுகளில் தோல் ஏற்றுமதி செய்பவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள். சென்னை பெரிய மேட்டிலுள்ள தோல் பொருட்கள் ஏற்றுமதிக் கிடங்குகள்



இந்தக் கத்தாழைக் கயிற்றைப் பயன்படுத்துகின்றன.

கத்தாழை நாரினால் தடுக்குகள், மிதியடிகள் இப்படிப் பல பொருட்கள் இங்கே விற்பனை செய்யப்படுகின்றன.

திண்டுக்கல் பழச்சாறுப்பிரிவில்—பழரசங்கள், பழக்குழம்பு முதலியன கிடைக்கின்றன.

கதர்த் துணி அங்காடிகள்.

இவைகளைத் தாண்டினால் இறுதியில் மார்த்தாண்டம் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்.

அங்கே தேன் சாப்பிடுவதால் என்னென்ன நன்மைகள் உண்டு என்பதை அச்சிட்டுத் தருகிறார்கள். மலிவான விலையில் சுத்தமான தேனையும் விற்கிறார்கள். அதுமட்டுமல்ல, தேன் சர்பத் விற்கிறார்கள்.

பொருட்காட்சியைச் சுற்றி வந்த களைப்பு நீங்குகிறது.

தமிழகத்தில் கதர்—கிராம கைத்தொழில்கள்வளர்ந்து இருக்கும் விதம் நம் நெஞ்சை நிறைக்கிறது.

சென்னை மாநகர மக்கள், இப் பொருட் காட்சியைக் கண்டு பயன்பெற வாய்ப்பளித்தவர்களுக்கு நன்றி தெரிவித்துப் பேசிக் கொண்டு செல்கிறார்கள்.

நமக்குப் பெருமையாக இருக்கிறது.

இந்தப் பெருமைஅனைத்துக்கும் காரணம் யார்?

நமது அரசு—அரசின் சார்பில் இயங்கிவரும்—

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்,

கதர், சோப்புத் தயாரித்தல், தீப்பெட்டித் தயாரித்தல், தோல் பொருள்கள் தயாரித்தல், தச்சுக்கொல்லுப் பொருள்களைத் தயாரித்தல், கரும்பு வெல்லம்—பழுப்புச் சர்க்கரைத் தயாரித்தல், எண்ணெய் தயாரித்தல், கைக்குத்தலரிசி தயாரித்தல், தேனீ வளர்த்தல், மண்பாண்டம் செய்தல், கைக் காகிதம் தயாரித்தல், சுண்ணாம்பு தயாரித்தல், பழம் பதம் படுத்தும் தொழில், சாண எரிவாயு, பிரம்பு மூங்கில் பொருள்கள் தயாரித்தல், அலுமினியப் பொருள்கள் தயாரித்தல், நார்த் தொழில் ஆகிய தொழில்களுக்கு ஊக்கம் அளித்து வளர்ந்து வருகிறது.

கதர்த் திட்டத்தைத் தமிழ்நாடு அரசு, அகில இந்தியாவிலேயே முதல் முறையாக 1947-ஆம் ஆண்டு அரசுத் துறை மூலமும் மற்றவை கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும் செயல்படுத்தி வருகின்றது.

அகில இந்திய கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணைக்குழு மானியமாகவும், கடனாகவும் நிதி வசதி அளிக்கின்றது. தமிழ்நாடு அரசும் நிதி வசதியளிக்கிறது. இவைகளைக் கொண்டும், வாரியத்தின் நிதியைக் கொண்டும், மேற்சொன்ன கிராமத் தொழில்கள் செயல்பட்டு வருகின்றன. இத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் கிராமியத் தொழிலாளர்களுக்குக் கருவிகள் வாங்க மான்யமாகவும், கடனாகவும், மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பங்குத் தொகைகள் கடன், மூலதனக் கடன் போன்ற நிதி வசதிகளும் அளிக்கப்பட்டு உற்பத்தியைப் பெருக்கித் தன்னிறைவு பெற உதவி செய்யப்படுகிறது.

இத்தொழில்களில் முன்னேற்றம் காண நவீன நுட்பங்களை உபயோகப்படுத்தி இதில் உட்பட்டுள்ளோரின் கவனத்தைச் சீரிய முறையில் திருத்தி மறுமலர்ச்சி காண ஆவன செய்யப்படுகிறது. எடுத்துக் காட்டாகப் பண்டைக்காலத்திலிருந்து உபயோகித்து வரும் நாட்டுச் செக்கினை மாற்றிக் குறைந்த மூலதனத்தில் நாட்டுச் செக்கைவிட அதிக அளவு வருவாய் தரக் கூடிய வகையில் விசைச் செக்குகள் உருவாக்கப்படுகிறது. (மேலும் கிராமியத் தொழிலாளர்களுக்குத் தொழில் நுண்ணறிவுப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.) அதே போன்று கதர் உற்பத்தியில் கைராட்டைக்குப் பதிலாக 12 கதிர்களுடன் இயங்கும் அம்பர் ராட்டைகளும், அதற்கு மேலும் விசையுடன் இயங்கும் நூற்பு ராட்டைகளும், தறிகளும் புழக்கத்தில் கொண்டுவரப்பட்டுள்ளன. சாயமிடுதல் மற்றும் அச்சிடுதல் முதலியவைகளில்கூட நவீன முறை கையாளப்பட்டு வருகிறது. இதன் பயனாகக் கதர் கிராமத் தொழிலில் மக்கள் மறுமலர்ச்சி கண்டு பயனடைந்து வருகிறார்கள்.

**தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் ஆதரவில் நடைபெறும் சிறு தொழில்கள்**

கதர்
கரும்பு வெல்லம்
பழுப்புச் சர்க்கரை
பனைத் தொழில்
எண்ணெத் தொழில்
கைக் குத்தல் அரிசி
தேனீ வளர்த்தல்
மண்பாண்டத் தொழில்
உண்ணா எண்ணை
சோப்புத் தயாரித்தல்
தோல் தொழில்
தச்சு-கொல்லுத் தொழில்
கைக் காகிதம் தயாரித்தல்
சுண்ணாம்புத் தொழில்
தீப்பெட்டித் தொழில்
நார்த் தொழில்
பழம் பதனிடும் தொழில்
சாண எரி வாயு
பிரம்பு மூங்கில் தொழில்
அலுமினியப் பாத்திரம்

தமிழ்நாட்டில் கதர்த்தொழில் ஒரு கதிரிலிருந்து 12 கதிர் ராட்டைவரை மாற்றம் கண்டு தற்போது கோயம்புத்தூர் மாவட்டத்தில் பெருமாநல்லூர் என்ற இடத்தில் இயந்திர விசைச் சக்தி மூலம் இயங்கிவரும் கிராமிய நெசவு-மையம், சுமார் 42 பேருக்கு வேலை கொடுத்து வருகிறது. இதே போன்று 375 நிலையங்களை அமைக்கத் திட்டமிடப்பட்டிருக்கின்றது.

தமிழ் நாட்டில், வாரியத்தின் சார்பில், ஆண்டொன்றுக்குசுமார் ரூ. 2·50 கோடி மதிப்புள்ள கதர் பருத்தி ரகங்கள், புதிய தினுசுகள் கண்ணைக்கவரும் ரகங்களில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் ஆங்காங்குள்ள 15 நிலையங்கள் மூலம் கதர்ப்பட்டு ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 65 இலட்சம் மதிப்பிற்கு உற்பத்தி செய்யப்படுகிறது. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் பருத்தி மற்றும் பட்டு ரகங்கள் எல்லாம் பொது மக்களுக்கு எல்லாக்காலங்களிலும் விற்பனைசெய்யப்படுகின்றன. தீபாவளி, மற்றும் பொங்கலில் எல்லாக் கதர் ரகங்களுக்கும் 10 சதவிகிதம் சிறப்புத்தள்ளுபடியும் அளிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு சிறப்புத் தள்ளுபடி காலத்தில் மட்டும் சுமார் ரூ. 262 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டிருப்பது பெருமைப் படுதற்குரியது. தமிழ் நாட்டில் இத்தொழிலின் மூலம் சுமார் ரூ. 1·18 கோடி கூலியாகக் கொடுக்கப்பட்டு வருகின்றது.

கிராமத் தொழில்களில் மட்டும் 325 வாரிய அலகுகளும் 2,420 தொழில் கூட்டுறவுச் சங்கங்களும் ஈடுபட்டிருக்கின்றன. கிராமத் தொழில் உற்பத்தி மதிப்பு சுமார் ரூ. 7 கோடி ஆகும். ஆண்டு விற்பனை மதிப்பு ரூ 8 கோடி ஆகும். கிராமத் தொழில்களில் ஈடுபட்டிருக்கும் 4 இலட்சம் கிராமியத் தொழிலாளர்களுக்கு சுமார் 3·10 கோடி ஊதியம் ஆண்டொன்றுக்கு அளிக்கப்படுகிறது. இவைகளில் முக்கியமானது, பனை குளிர்பான வகைத் திட்டம், மற்றும் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுத்தல், நார்த் தொழில் அலகுகள் முதலியவைகள். உற்பத்தியாகும் பொருட்கள் கதர் விற்பனை நிலையங்கள் மற்றும் நகரங்களிலுள்ள கதர் அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இந்தச் செய்திகள், அண்ணாவின் கனவை நமது அரசு நனவாக்கி வருவதன் அடையாளமே ஆகும்.

—மா.

# கதர் இயக்கப் பொன் விழாப் பொருட்காட்சி






கதர் இயக்கப் பொன் விழாப் பொருட் காட்சியை உணவு அமைச்சர் திரு. மன்னை நாராயணசாமி அவர்களின் தலைமையில் முதல்வர் கலைஞர் அவர்கள் துவக்கி வைத்தார்.


கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்களும், மின்துறை அமைச்சர் திரு. ஓ. பி. இராமன் அவர்களும் இந்த விழாவில் கலந்து கொண்டனர்.


கதர் வாரியம் புதிதாக உருவாக்கியுள்ள துணி ஒன்றினுக்கு 'முகில்' என்ற பெயரை முதல்வர் கலைஞர் சூட்டினார்கள்.

சாமி...







பன்னிரண்டு கதிர் ராட்டை


கிராமக் கைத் தொழில்கள்
வேலை வாய்ப்புகளைக் கொடுத்து
வருவதோடு, நமது நாட்டின்
பழம் பெரும் சிறப்பையும்
எடுத்துரைக்கின்றன.




சாமி...






ஜக்கார்டு தறி



கை அச்சு








கைத்திறனுல், களிமண் கவின்மிகு
பாத்திரமாக மாறுகிறது

சாமி

# தொழுநோய் நீங்கிடத் தொண்டுகள் புரிவோம்!




தொழு நோய்த் தடுப்பு வாரத்தை நாடெங்கும் நடத்தி வரும் இந்நாட்களிலேனும், ஒவ்வொரு ஆணும் பெண்ணும் அந்நோய் பற்றி அறிந்திட வேண்டும்.


தொழுநோய் உடலை உருக்குலைத்துக் குறையுண்டாக்கும் குட்ட நோய் ஆகும். தொன்மையான காலந்தொட்டு இந்தியாவிலும், ஆப்பிரிக்காவிலும், பலவகைகளிலும் மக்களை இந்நோய் கொடுமைக்கு ஆளாக்கி வருகிறது.

தொழு நோய் கொண்டோர் பார்ப்பதற்கு அருவருப்பாகவும், அச்சந்தரும் தோற்றத்துடனும் காணப்படுவதாலேயே இந்நோய் பற்றிய அறிவு பெறாத மக்கள் அவர்களை ஒதுக்கி வைக்கவும், வெறுக்கவும் தலைப்படுகின்றனர். மக்கள் இந்நோயைப் பற்றி அறிவார்களானால் நோயுடையோரை வெறுக்கக் காரணமில்லை; புறக்கணிக்கவும் மாட்டார்கள். மற்ற நோயாளிகளிடம் காட்டும் பரிவும், இரக்கமும் இந்நோயாளிகளிடமும் காண்பிக்க மக்கள் முன் வருவார்கள்.

இந்தியாவில் ஏறத்தாழ 31 இலட்சம் மக்கள் இந்நோயினால் பாதிக்கப்பட்டு உள்ளனர். தமிழ் நாட்டில் மட்டும்—வாழ்கின்ற 411 இலட்சம் மக்களில் ஏழரை இலட்சத்துக்கும் மேற்பட்டோர் தொழுநோயால் துன்பத்திற்கும், துயரத்திற்கும் ஆட்பட்டுள்ளனர். அவர்களது குடும்பமும் இதனால் பாதிக்கப்படும் நிலையிலேயே இன்றுள்ளது.

'மனித குலப்பணியே மகேசன் பணி' என்ற உள்ளங்கொண்ட உத்தமர்களான பாதிரிமார்களும், மேல்நாட்டுச் சமய, சமூகத் தொண்டர்களுமே இவர்தம் நிலைக்கு இரங்கி, இவர்கட்கென்றே தொண்டு பூண்டு பல்வேறு மருத்துவ நிலையங்களையும், இவர்களை வாழவைக்கும் இல்லங்களையும் தொடங்கி நடத்த முன் வந்தனர். இந்தியாவில் அவர்களது திருப்பணியே முதலில் தொடங்கப்பட்டது. தொழுநோயாளிகட்கும் 'வாழ்வு உண்டு' என்னும் உண்மையை நிலை நாட்டிய பெருமை அவர்கட்கே உரியது.

இந்திய மக்களில் மிகச் சிலரே இப்பணியில் ஆர்வம் காட்டினர். அந்நிலையில் உத்தமர் காந்தியடிகளின் உள்ளத்தில் இந்நோயாளிகளின் நிலை பற்றிய சிந்தனை பிறந்தது. அவரது பெரிய உள்ளத்தில், கடவுளைப் பற்றிய உணர்வு முழுமை பெற்றது, இந்தச் சிந்தனையினாலேதான் என்று கூறலாம். அவரது உள்ளம் இவர்களது துயரத்தை எண்ணி உருகியது. அவர்கட்கு ஆற்றும் பணியிலே தனது மனச்சான்று அகிம்சைக் கொள்கையின் வழியில் ஒரு நிறைவு காண்பதை உணர்ந்தார். உலகத்தாருக்கும் உரைத்தார். தம் நாட்டவர், தமது உடன் பிறப்புகள், தொழுநோயினால் துன்பப்படுவது கண்டும் அவர்களுக்குத் தொண்டு செய்ய, அவர்கட்கு வாழ்வளிக்க முற்படாமல் விலகி நிற்பதும், வெறுப்பதும், பிறரது உடலில் காணப்படும் குட்ட நோயை விடக் கடுமையான குட்ட நோய் தம்முடைய மனத்துக்கு ஏற்பட்டுள்ளதைக் காட்டுவதாகும் என்று எடுத்துக் காட்டினார்.



மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர்-

**க. அன்பழகன்**

எனவேதான், நமது மக்கள் தொழு நோயாளிகளிடம் பரிவு காட்டும் மனப்பக்குவத்தைப் பெற முடியாதவாறு, அவர்களிடம் நிரம்பியுள்ள அறியாமையும், அச்சமும் விலக- அவர்களிடம் இந்நோய் பற்றிய அறிவுத் தெளிவும் கருணையும் உண்டாக - கடமை உணர்வு பிறக்க-இந்நோய் பற்றிய அறிவைப் பரப்புவது அரசின் கடமையாகிறது.

'அறிவுடையார் எல்லாம் உடையார்-அறிவிலார் என்னுடையரேனும் இலர்' என்னும் குறள் இதற்கு முற்றும் பொருந்தும். தொழுநோய் பற்றிய அறிவுடையார் தாம் அந்நோய்க்கு ஆளாகாது தடுத்துக் கொள்வதேயன்றிப் பிறருக்கும் அந்நோய் பற்றாது தடுக்கும் வல்லமை உடையாரும் ஆவர். இதனை அறியாதார் தாம் பிறருக்கு உதவ இயலாதவராவதன்றித் தாமே அந்த நோய்க்கு ஆட்பட்டு அல்லலுற்றுத் துன்புறவும் நேரிடலாம் அன்றோ!

தொழு நோய் தீராத வியாதி என்றோ விதியால் வந்த வினையென்றோ எண்ணி, நம் மக்கள் வாளா இருந்து விடுகிறார்கள். முறையான மருத்துவத்தினாலே குணப்படுத்தக் கூடிய நோய் தான் குட்டநோய் என்று அழைக்கப்படும் தொழு நோய்.

இந்த வியாதியை மதியாலும், மருத்துவத்தாலும் வெல்லலாம். தமிழக மக்கள் தொகைக்கணிப்புப்படி ஆயிரம் பேர்களில் பத்தொன்பது பேர் இந்நோய் கண்டு இன்னலுறுகின்றனர்.

தொழுநோய் ஒரு குடும்பத்தில் பரம்பரையாக வரக் கூடிய நோய் அல்ல. நோய்

உள்ளவர்களிடமிருந்து அவர்களுடைய குழந்தைகளைப் பிரித்துத் தனியாக வளர்த்தால், அக்குழந்தைகளுக்குத் தொழுநோய் வருவதற்கு வாய்ப்பில்லை. தொழுநோய் மேக நோய் போன்றது மல்ல. ஆண்-பெண் உறவால் இந்நோய் பரவுவதாகவோ, நோயுள்ள கணவனிடமிருந்து மனைவிக்கோ, நோயுள்ள மனைவியிடமிருந்து கணவனுக்கோ இத்தொழுநோய் பரவும் என்றோ கூறக் காரணமில்லை.

இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்னர், தொழுநோய்களின் துயர் துடைக்கும் பணியைத் தனியார் நிறுவனங்கள்—குறிப்பாகக் கிறித்துவப் பாதிரிமார் சங்கங்களே ஏற்றுக் கொண்டிருந்தன. கோக்ரேன் என்பவர் தமிழ்நாட்டில் தொழுநோய் தீர்க்கும் பணியைத் தொடங்கினார்.

1935-ஆம் ஆண்டில் அவர் பொலம்பாக்கத்தில் நிறுவிய நிலையமே பின்னர் 'பெல்ஜியத் தொழுநோய் நிலைய'மாக டாக்டர் ஹேமரிஜிக் அவர்களால் 1955-ல் அமைக்கப்பட்டது. மருத்துவக் கல்லூரிகளில் தொழுநோய்த்துறைகள் துவக்கப்படுவதற்கு அவரது பணி அடிப்படையாய் அமைந்தது.

இந்தியா விடுதலையடைந்த பிறகு, நம் நாட்டு மக்கள் நலத்தோடு வாழ்வதற்கான வழிவகைகளை வகுப்பதில் மத்திய அரசும், மாநில அரசுகளும் ஈடுபட்டுத் திட்டங்கள் தீட்டி வருகின்றன.

முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தேசியத் தொழுநோய்த் தடுப்புத் திட்டத்தின் கீழ் இரண்டு இலட்சத்து நாற்பதாயிரம் தொழு நோயாளிகள் சிகிச்சை பெற்றனர். 2-வது திட்டக் காலத்தில் அரசாங்க உதவி பெறும் தொழு நோய் நிலையங்கள் 11 நிறுவப்பட்டன. இத்திட்ட இறுதியில் 11 இலட்சத்து இருபதாயிரம் நோயாளிகள் சிகிச்சையளிக்கப்பட்டனர். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில்தான் நமது அரசு மாநிலத் தொழு நோய் அலுவலர் ஒருவரை நியமித்துப் பயிற்சி நிலையங்கள் பல திறக்க ஏற்பாடு செய்தது.

பொலம்பாக்கம் பெல்ஜியத் தொழுநோய் நிலையத்தை அரசாங்கமே ஏற்றுக் கொண்டது. 1972—73-ஆம் ஆண்டுகளில் 10 தொழுநோய் நிலையங்கள் திறக்கப்படுகின்றன. நான்காவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் 196 இலட்ச மக்கள் கண்காணிக்கப்படுவார்கள். நகர்ப்புறங்களில், குறிப்பாகச் சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில், 8 இலட்சம் பேர்களைப் பரிசோதிக்க ஜெர்மன் தொழுநோய் தீர்க்கும் சங்கம் ஏற்பாடு செய்து வருகிறது.

இந்த நோயினை அகற்றிவிடவும், அழித்துவிடவும், அரசினர் நிலையங்களும், தனியார் நிலையங்களும் பணிபுரிந்து வருகின்றன. தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலும் 28 பெரிய மருத்துவ நிலையங்களும், 122 சிறிய நிலையங்களும் ஓர் ஆராய்ச்சி நிலையமும் அரசினரால் நடத்தப்பட்டு வருகின்றன. தனியாரால் 32 நிலையங்கள் நடைபெற்று வருகின்றன. தமிழகத்தில் 281 இலட்சம் மக்கள் கிராமத்தில் வாழ்பவர்களாக இருக்கிறார்கள். அவர்களில் 138 இலட்சம் மக்கள் வாழும் பகுதியில் தொழுநோய்த் தடுப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சிறப்பாகச் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென்னார்க்காடு பூராவும் கவனிக்கப்பட்டு வருகின்றன. திருச்சி, சேலம், மதுரை, ஆகிய மாவட்டங்களில் ஓரிரு தாலுக்காக்களைத் தவிர மற்ற இடங்களில், நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. விரைவில் எல்லா மாவட்டங்களிலும் ஒவ்வொரு கிராமத்தில் உள்ள மக்களும் அரசினர் தொழுநோய் நிலையங்களால் கண்காணிக்கப்பட்டு வர முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது.

தமிழ் நாட்டில் தொழுநோயினால் கைகால் ஊனமுற்றோரின் எண்ணிக்கை சுமார் 50,000 என்று கணக்கிடப்பட்டுள்ளது. இவர்களில், 5,000 பேர் இன்று இரந்துண்போராக மாறியுள்ளனர். தொழுநோயாளிகள் எப்படிப் பிச்சைக்காரர்களாக மாறுகின்றனர் என்பது பற்றி ஆராயப்பட்டது.

தொடக்கக் காலத்தில் நோயினைக் கண்டு அறியாமல், நோய் முற்றிய பிறகு தொழுநோய் விடுதியில் சேர்ந்து , பல காலம் அங்கே தங்கள் வாழ்நாளைக் கழித்து வெளியேறும் தொழு நோயாளிகள்தாம் பிச்சைக்காரர்களாக மாறுகின்றார்கள். உறவினர்களிடம் இருந்து நீண்ட காலம் பிரிந்து வாழ்வதனால் குடும்பத்தாரின் தொடர்பு இல்லாமல் போய் விடுகிறது. இவர்கள் குணமடைந்து திரும்பும் போது உறவினர்களும், அவர்களைத் தங்களுடன் தங்கி வாழ அனுமதிப்பதில்லை.

இதற்கு மாறாக வீட்டிலேயே தங்கிச் சிகிச்சை பெறுகின்ற தொழுநோயாளிகள் பிச்சைக்காரர்களாக மாறுவதில்லை. பொலம்பாக்கம் நிலையத்தில் சுமார் 15,000 நோயாளிகளுக்கு அவர்களது கிராமங்களுக்கு அருகில் சென்று மருத்துவ வசதி அளித்து வந்ததில், 5 நபர்கள் தான் பிச்சைக்காரர்களாக மாறியிருக்கின்றனர்.

இந்த நோயாளிகளிடம் பரிவும் பாசமும், காட்டாது வெறுத்து ஒதுக்கியதால் அவர்கள் வாழ்க்கையை நடத்த வேறு எந்த வழியும் இன்றிப் பிச்சை எடுக்கும் தொழிலை மேற்கொண்டனர்.

நமது தமிழக அரசு தொழுநோயால் பாதிக்கப்பட்டோர் பிரச்சினைகளை அனுதாபத்தோடு அணுகி ஆவன செய்து வருகின்றது. பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம், தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்குக் கிடைத்த பெரும் பேறாக அமைந்திருப்பதை நாடு நன்கறியும். அவர்களுக்கென்று இருக்கை ஏற்பாடும் சிகிச்சை பெறுவதோடு, சிறு தொழில் செய்து பழக வாய்ப்பும் கிடைப்பதற்கு நமது அரசு வழி செய்கின்றது.

தொழு நோய்ப் பிச்சைக்காரர்களின் துயர் துடைப்பதில் இந்தியத் துணைக்கண்டத்திலேயே தமிழகம்தான் முன்னோடியாகவும் முன் மாதிரியாகவும் திகழ்கின்றது. தமிழகத்தில் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கென 10 பராமரிப்பு இல்லங்கள் எழ இருக்கின்றன. ஏற்கெனவே 4 இல்லங்கள் அமைக்கப்பட்டுச் செயல்படத் தொடங்கிவிட்டன.

தொழு நோய் எப்படிப் பரவுகிறது என்பதை உறுதியாகக் கூற இயலாதெனினும், தொற்றும்வகைத் தொழுநோயாளியோடு நீண்ட நாட்களுக்குத் தொடர்ந்து நெருங்கி இருந்தால் இந்நோய் பரவ வாய்ப்புள்ளது. கிருமிகள் உடலில் நுழைந்து, வளர்ந்து நோயின் அறிகுறிகளை வெளிப்படுத்தும் காலத்தைத் திட்டவட்டமாக அறுதியிட்டுக் கூற இயலாதென்ற போதிலும், தொற்று ஏற்பட்டு மூன்று முதல் ஐந்து ஆண்டுகளுக்குள் நோயின் அறிகுறிகளைப் பலரிடம் காண முடிகிறது.

டாப்சோன், தயோசெமிகார்ப்பசோன் முதலிய மருந்து

கள் மூலம் தொழுநோயினைக் குணப்படுத்திவிடலாம். தொழுநோயினின்றும் முழுதும் விடுபெறத் துவக்கத்திலேயே நோயினைக் கண்டறிந்து, முறையான மருத்துவம் செய்து வருதல் வேண்டும். தொழுநோய் கண்டவர்கள் தங்கள் கவனக் குறைவால் கால்களையும், கரங்களையும் வீணாக இழந்து வருகின்றனர். உணர்ச்சி இழந்துவிடும் அவர்தம் கால்களையும், கரங்களையும், விரல்களையும் காக்க முடியும் என்பதைக் கூடச் சில நோயாளிகள் அறியவில்லை.

உணர்ச்சி இல்லாத தன்மையால் தங்கள் உறுப்புக்களை நெருப்பில் சுட்டுவிடவும், சூடான வெந்நீரைத் தொட்டு வேக வைத்துக்கொள்ளவும், புண் ஏற்பட்டால் அதைப் பொருட்படுத்தாதிருக்கவும் நேரிடுவதால் தொழு நோயாளிகள் தமக்கே பெருந்தீங்கு செய்து கொள்ளுகின்றனர். சூடான பொருள்களைத் தொடும் போது, சுடு காயங்கள் ஏற்படுகின்றன.

இக்காயங்கள் சீழ்பிடித்து, விரல் எலும்புகள் பாதிக்கப்பட்டு இற்றுப் போய் விரல்கள் குறைந்து விடுகின்றன. மருத்துவர்கள் நோயாளிகளைக் கவனத்துடன் கண்காணித்தால் இத்தகைய உறுப்புக் குறைவுகளைத் தவிர்க்கலாம். அறுவைச் சிகிச்சை மூலமும் இவற்றைச் சீர் செய்யலாம்.

ஆண்டுதோறும் தொழுநோய் எதிர்ப்பு நாள் சனவரித் திங்கள் 30-ஆம் நாளில் கொண்டாடப்படுகிறது. இந்நாளில் தொழுநோய் பற்றிய உண்மைகளை மக்களுக்கு உணர்த்துவதற்காக ஆங்காங்கே திரைப்படங்கள் வாயிலாகவும், பொருட்காட்சிகள் மூலமாகவும், கூட்டங்கள் வாயிலாகவும், ஆக்கப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இது தொடர்பாக, கல்லூரி, பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியும் கட்டுரைப் போட்டியும் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

பெரும் அளவில் மக்களனைவரையும், மருத்துவப் பரிசோதனை செய்து, நோயுள்ளதா என்பதைக் கண்டறிதலும், கிராமப்புறங்களில் வாழும் மக்களிடம் நேரில் சென்று அணுகி, நோய் தீர்க்கும் மருந்துகள் வழங்குதலும் தொழுநோய்த் தடுப்புத் திட்டத்தின் பயன்கள்.

நோயாளி தனது குடும்பத்தினருடனேயே தங்கியிருந்து அவர்களுக்கும் உதவியாக இருக்கலாம். தான் கற்றறிந்த தொழிலினைத் தொடர்ந்து செய்யலாம். சமூக விலக்கு இன்றி வீடு தேடிவரும் சிகிச்சையின் முழுப்பலனையும் பெற்று, நோயாளி தன் குடும்பத்தை விட்டுப் பிரியாமலும், தொழிலைக் கைவிடாமலும், இருந்து 'மறுவாழ்வு' பெற்று நன்கு வாழலாம்.

தொடக்கத்திலேயே நோயினைக் கண்டறிதல் வேண்டும். யாருக்கேனும் நோய் இருப்பதாகத் தெரிந்தால் தான் தங்கியிருக்கும் இடத்திற்கு அருகிலிருக்கும் நிலையத்தில்முறையான சிகிச்சை பெறச்செய்யவேண்டும். இப்போதையத் தலைமுறையினர் ஒழுங்காகச் சிகிச்சை செய்து கொண்டால் தான் வரும் தலைமுறையை நாம் காப்பாற்றலாம்.

தொழுநோய் நமது நாட்டிலிருந்து அறவே நீங்குகின்ற நாளே நன்னாள். அந்நோயும், பிற நோயும் இல்லாமல் மக்களெல்லாம் வாழ அறிவும்-ஆற்றலும் பெறுவதே நமது அரசின் குறிக்கோள்.

[வானொலி உரை—8-2-1973]

---



இந்திய அஞ்சல்-தந்தி இலாகா ஒவ்வொரு நாளும் 1 கோடியே 80 இலட்சத்துக்கும் மேற்பட்ட அஞ்சல் பொருட்களையும், 1இலட்சத்து 60 ஆயிரம் தந்திகளையும் அனுப்பி வைக்கிறது.

இது தவிர, நாள்தோறும் 60 இலட்சம் உள்ளூர் தொலைபேசிக் கால்களையும், 2 இலட்சத்து 60 ஆயிரம் டிரங்க்கால்களையும் கவனித்துக்கொள்கிறது.

நாடு விடுதலையடைந்த சமயத்தில் இந்தியாவில் 20 ஆயிரம் அஞ்சல் நிலையங்கள் மட்டுமே இருந்தன. இன்று நாட்டில் 1 இலட்சத்து 12 ஆயிரம் அஞ்சல் நிலையங்கள் உள்ளன. அதாவது, இன்று 5 ஆயிரம் மக்களுக்கு ஓர் அஞ்சல் நிலையம் வீதம் உள்ளது. 25 ஆண்டுகளுக்கு முன்பு 16 ஆயிரம் பேருக்கு ஒரு அஞ்சல் நிலையம் என்ற விகிதத்திலேயே இருந்தது. நாட்டின் மக்கள் தொகை 80 சதவிகிதம் அதிகரித்திருந்தும் கூட இந்த வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இந்த 25 ஆண்டுகளில் ஆண்டுதோறும் அஞ்சல் அலுவலகங்கள் அனுப்பி வைக்கும் அஞ்சல் பொருட்களின் எண்ணிக்கை 230 கோடியிலிருந்து 667 கோடியாக, அதாவது மும்மடங்கு அதிகரித்திருக்கிறது.

நாட்டில் மொத்தமுள்ள அஞ்சல் நிலையங்களில் 90 சதவிகிதம் கிராமப் பகுதிகளில் உள்ளன. 10 சதவிகிதம் மட்டுமே நகரங்களில் அமைந்திருக்கின்றன. நாடு விடுதலையடைந்த சமயத்தில் சுமார் 150 சதுர கிலோ மீட்டர் பகுதிக்கு ஒரு அஞ்சல் நிலையம் வீதம் இருந்தது. இன்று 30 சதுர கிலோ மீட்டர் பகுதிக்கு ஒரு அஞ்சல் நிலையம் வீதம் உள்ளது. இந்தியாவில் மொத்தம் சுமார் 6 இலட்சம் கிராமங்கள் உள்ளன. இவற்றுள் 55 சதவிகித கிராமங்களுக்கு நாள் தோறும் அஞ்சல் பட்டுவாடா செய்யப்படுகிறது.

1947-48-ல் இந்நாட்டில் மொத்தம் 3 ஆயிரத்து 324 தந்தி அலுவலகங்கள் மட்டுமே இருந்தன. இன்று இந்த எண்ணிக்கை 16 ஆயிரமாக உயர்ந்திருக்கிறது. ஆண்டுதோறும் அனுப்பப்படும் தந்திகளின் எண்ணிக்கை 2 கோடியே 70 இலட்சத்திலிருந்து, 5 கோடியே 80 இலட்சமாக அதிகரித்திருக்கிறது.



வாழ்க்கைக்கு
ஒரு பாடம்!
எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!
• சேமிப்புப் பழக்கமே
எதிர் காலத்திற்கு ஆக்கம் தரும்
சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச்சேமிப்புத் திட்டமும் ஆகும்.
| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
| --- | --- | --- |
| ரெகரிங் டிபாசிட் | ரூ. 5 | ரூ. 355 |
| | ரூ. 10 | ரூ. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு | ரூ. 5 | ரூ. 337.50 |
| | ரூ. 10 | ரூ. 675.00 |
தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது. சிறுசேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.
இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை,
இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.
-சிறுசேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு
தமிழரசு



# உலகில் இரண்டு சில்பகள்

## 3. தாவும் குதிரைகளும் தங்கரதக் குழந்தைகளும்.

உயரே போகப் போக வெம்மை குறையும்; தண்மை நிறையும். உயரத்தில் இருக்கும் ஊருக்கு மட்டுமல்ல; உயரத் துடிக்கும் உள்ளங்களுக்கும் இது பொருந்தும்.

ஊட்டியில்—

அதிகாலை நேரத்துக் கடுங் குளிரையும் பொருட்படுத்தாமல் பச்சைப் பசிய புல்வெளியில் ஆணும் பெண்ணுமாக வண்ண வண்ண உடையில் உலாவிக் கொண்டிருக்கிறார்கள். அதிகாலை என்றால் மணி ஏழு ஏழரையைத் தாண்டிய காலைப் பொழுது. கதிரவனின் முதற் கிரணங்களுக்காகக் காத்துநின்ற பனித்துளிகள், கல்லூரி மாணவ மணிகளின் காலடிபட்டுக் கதி மோட்சம் பெற்றுக் கொண்டிருந்த காலைப் பொழுது—

குதிரைக்காரக் கோவிந்தன் நிரம்பவும் உற்சாகமாக ஓடியாடித் திரிந்து கொண்டிருக்கிறான். சவாரிக் குதிரை என்றுபெருமைப்படக்கூடிய ரகத்திலே நாலும், குதிரை என்ற பெயரோடு கூடிய ரகத்திலே நாலைந்துமாக, வைத்துக் கொண்டு, ''ஊட்டியின் சீசனை'' விலை பண்ணிக் கொண்டிருக்கும் காலம் இது. பயணிகளின் பணப்பை—பரபரப்பு — இரண்டிற்கும் முடிச்சுப் போட்டு, தன் பணப்பையைப் பரபரப்பாக நிரப்பும் நேரம்........

நர்மதா—மருத்துவக் கல்லூரி மாணவி நர்மதா — கைகளைக் குறுக்காகக் கட்டியபடி பூஞ்செடிகளின் வரிசையை ஒட்டி நடைபழகிக் கொண்டிருக்கிறாள். காலைப் பனியின் குளுமையும் மலரின் மென்மையும் எந்நேரமும் அவள் முகத்தில் குடி கொண்டிருக்கும். அப்படிப் பட்ட முகத்தில் இன்று வழக்கத்திற்கு மாறாகச் சிடுசிடுப்பு. அவள் கொண்ட பிடிவாதத்தின் பிரதிபலிப்பு. ஆனால் அவளைப் பொறுத்தவரையில் கோபம் கூட ஒரு தனியான அழகைத் தான் தந்து கொண்டிருக்கிறது.

குதிரைக்காரக் கோவிந்தன் இரண்டு விநாடிகளுக்கு ஒரு முறை, '' இதோ........ ரெண்டு நிமிஷத்திலே தந்திட றேனுங்க........ '' என்று பாவலாக் காட்டியபடியே மற்றப் பயணிகளைக் கவனிக்க ஓடிக் கொண்டிருக்கிறான். அவன் தொழில் நுணுக்கம் தெரிந்தவன்!

நர்மதையின் கோபத்துக்குக் காரணமிருக்கிறது.

முதல் நாள் மாலை—

மறுநாள் குதிரைச்சவாரி செய்வதற்காகக் கோவிந்தனிடம் முன்பணம் கட்டவேண்டிய நேரம். ஓய்வாக நிறுத்தி வைத்திருந்த குதிரைகளை ஒவ்வொன்றாகப் பார்த்துவிட்டு, மிகவும் ஆசையுடன் வெள்ளைக் குதிரை ஒன்றைத் தனக்கெனத் தேர்ந்தெடுத்து அதற்கான முன் பணத்தையும் கொடுத்திருக்கிறாள் நர்மதா.

காலையில்—குதிரைச் சவாரிக் கேற்றவாறு உடம்பைப் பிடிக்கின்ற லாவகமான உடையணிந்து வந்து நின்றால்—

அவள் கேட்டிருந்த குதிரை அவளுக்குத் தரப்படவில்லை.... அதுதான் போகட்டும், சட்டக் கல்லூரி மாணவன் மணிவாசகனுக்காவது அதனைக் கொடுக்காமல் இருந்திருக்கலாம் அல்லவா......!

இரண்டு தினங்களுக்கு முன்னால் சென்ட்ரல் ரயில் நிலையத்தில் உரசலோடு ஆரம்பித்த அவர்களின் சந்திப்பு இன்னும் சடபுடாக்குச்சி மாதிரி சீறலில் தான் வளர்ந்து கொண்டிருக்கிறது. அவளைச் சந்தித்துச் சீண்டுவதற்கும் அவள் சினந்து முகம் சிவப்பதைக் கண்டு கை கொட்டிச் சிரிப்பதற்குமாகவே மணிவாசகனும் அவனுடைய நண்பர் குழாமும் நேரத்தை ஒதுக்கிக் கொண்டிருக்கின்றனர் போலும்......!

மேட்டுப் பாங்கான ஓட்டலின் புல்வெளியில் நின்றபடி, குதிரை போன பாதையையே பார்த்துப் பொருமிக் கொண்டிருக்கிருள் நர்மதா. கண்ணுக்கினிய காலைக் கதிரவனே, பனியில் குளித்துப் பசுமையில் மலரும் பூக்குவியல்களோ அவள் மனத்திற்கு இதத்தைத் தரவில்லை.........! முன்பணம் கொடுத்திருப்பவள் அவள்; அதென்ன குதிரைக்காரக்கோவிந்தன் தன் இஷ்டத்திற்கு இன்னெருவனுக்குக் குதிரையை எடுத்துக் கொடுப்பது? என்ற கோபம், நேரம் ஆக ஆக அதிகரித்துக் கொண்டே வருகிறது. அவள் மென்மைக்கு விழுந்த அடி இது. அவள் நேர்மைக்கும் நியாயத்துக்கும் விழுந்த அடி இது....... என்றவாறு அவள் சீறுகிருள்.

குதிரைக்காரக் கோவிந்தன் கடியாரத்தைப் பார்த்தபடி '' மணி எட்டு மேடம்...... இப்போ வந்திடும் அந்தக் குதிரை...... நீங்க எடுத்துக்கலாம் '' என்று சொல்லி முடிப்பதற்குள் சோர்வேயறியாத வெள்ளைக் குதிரை அமைதியாக வந்து நிற்கிறது. குதிரைக்கு இருக்க வேண்டிய முரட்டுத்தனமும் துள்ளலும் மணிவாசகன் உருவத்தில் குதிரையின்மேல் குடியிருக்கின்றனவே.......

'' பையா ''....!

'' ஐயா ''

'' அந்த அம்மா இன்னும் இந்தக் குதிரைக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிருர்களா? ''

'' ஆமா சார், ''

'' ஐயோ பாவம். இன்னும் ஒரு மணி நேரம் காத்துக் கொண்டு நிற்கட்டும்—நிற்க வேண்டாம், அவர்கள் உட்காருவதற்கு ஒரு நாற்காலியோ சோபாவோ கொண்டு வந்து போடு '' என்று கேலி பேசிவிட்டுக் குதிரையின் லகானை இறுக்குகிருன் மணிவாசகன்.

குதிரை கனைக்கிறது.

நாலுகால் பாய்ச்சலில் புறப்படத் தயார் என்று பொருள்.

நர்மதாவின் பிடிவாதம் அவள் பெண்மைக்கும் மீறியதாகப் போய்விடுகிறது.

'' மிஸ்டர், இறங்குங்கள் கீழே ''

'' ஏனும்? ''

'' நான் சவாரி போக வேண்டும். அதுவும் இந்தக் குதிரையில்தான் போகவேண்டும்.

'' ஹெ ஹ் ஹே ன் ஞ ஞ ம்— என்று அலட்சியமாகச் சிரித்துவிட்டுக் குதிரையைத் தட்டுகிருன். மீண்டும் குதிரை சிலிர்க்கிறது.

நர்மதாவுக்கு வந்ததே ஆத்திரம்......

கோவிந்தன் கையிலிருந்த குச்சியை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டு குதிரையின் லகானைப் பிடித்து இழுக்கிருள். மணிவாசகனின் பிடி இறுகுகிறது.

'' மிஸ்டர்.... நான் முன் பணம் கொடுத்திருக்கிறேன் ''.

> **வெற்றி கிடைக்கும் வழி**
>
> **அறிவாலும் ஆற்றலாலும் ஆகாத காரியம் இல்லை. அறிவும், ஆற்றலும் சேர்ந்து உழைத்தால் வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும்.**
>
> **—பேரறிஞர் அண்ணு**

'' முழுப் பணமும் நான் கொடுத்தாயிற்று மேடம்!'' என்கிருன் மணிவாசகன்.

'' எனக்கு வாக்குக் கொடுத்திருக்கிருன் கோவிந்தன் ''.

'' குதிரையையே எனக்குக் கொடுத்து விட்டானே!''

'' ஆண்கள் எல்லாருமே அநியாயக்கார வர்க்கம்!''

'' பெண்கள் பிடிவாதத்தின் மொத்த உருவம்!''

'' பெண்ணைக் கிள்ளுக்கீரையாக நினைத்த காலம் மலையேறிவிட்டது மிஸ்டர்....! பெண்ணும் ஆணுக்குச் சமமாகப் படிக்கிருள்....உழைக்கிருள்.. ....உத்தியோகம் செய்கிருள்..

'' எத்தனை இருந்தாலும் ஆண்களிடம் அடங்கி நடக்க வேண்டியவள் பெண் ''

'' ஆண்மைக்கு அடங்கி நடக்கலாம். ஆனல் ஆண் வர்க்கத்திற்கு நாங்கள் அடங்கி நடப்போம் என்று நினைப்பதோ, அடங்கி நடக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதோ முட்டாள்தனம். ஆணுக்குப் பெண் அடிமை என்று எந்தச் சட்டத்திலும் எழுதி வைக்கவில்லை ''

'' அது எழுதாச் சட்டம், அம்மணி ''

'' எழுதின சட்டத்தைக் கரைத்துக் குடித்துக் கரையேறும் வழியைப் பாருங்கள் வக்கீல் சார்.....! எழுதாச் சட்டத்திற்கு இலக்கணம் பேச வந்துவிட்டீர்கள்; இங்கிதம் தெரியாத மனிதர் ''

'' பெண்மையின் இலக்கணம் தான் இவ்விடத்தில் இல்லையே.. பேச்சின் இலக்கணமாவது தெரிந்திருக்கும் என்று நினைத்தேன்...... ,,

'' நாங்கள் பெண்மையின் இலக்கியம் ''

'' எதிர்காலம்தான் இதற்குப் பதில் சொல்லவேண்டும் ''

அடுத்த வார்த்தைக்காகக் காத்து நிற்காமல் குதிரையைத் தட்டிக் கொடுக்கிருன் மணிவாசகன்.

'' புறப்படலாமா?'' என்று பொருள்.

'' கோவிந்தா!'' என்று சீறுகிருள் நர்மதா.

'' கோவிந்தா! கோவிந்தா!'' என்று சிரிக்கிருன் மணிவாசகன்.

கோவிந்தன் பாடு திண்டாட்டம்!

'' வெள்ளை—சமாதானத்தின் சின்னம்...... நீங்க இரண்டு பேரும் வெள்ளைக் குதிரைக்காகச் சண்டை பிடிக்கிறீங்களே... வேணும்னு ரெண்டுபேருமே அந்தக் குதிரையிலே ஒண்ணு சவாரி போங்க..... ''

—கோவீந்தன் சொல்லி முடிக்கவில்லை. மணிவாசகன் நர்மதாவின் காதருகே குனிந்து '' போவோமா?'' என்று கேட்கிருன்.





சாமி...

''யு......யு......'' என்று கோபத்தால் படபடக்க முகம் சிவக்க மணிவாசகனைப் பார்த்துச் சீறுகிருள் நர்மதா.

நிலைமை விபரீதமாகப் போய்விடப் போகிறதே என்ற பயம் கோவிந்தனுக்கு.

''வெள்ளைக் குதிரை உங்க ரெண்டுபேருக்குமே கிடைக்காது சார். வெரி சாரி......எங்க சின்ன முதலாளி வர்ருரு.... இனிமேஅவர் எடுத்துக்கிட்டு போய்டுவாரு....'' என்று, தூரத்தே வரும் ஓர் இளைஞனைச் சுட்டிக்காட்டிப் பரபரப்பாகக் கூறுகிருன் கோவிந்தன்.

முதலாளியின் கோபத்துக்குக் கோவிந்தன் ஆளாகக் கூடாதே என்ற இரக்கம் நர்மதாவுக்கு.

முதலாளிக்கு துரோகம் செய்யத் தூண்டுவது முறையல்ல என்ற நியாய உணர்வு மணிவாசகனுக்கு.

இருவருமே வெள்ளைக் குதிரையைக் கோவிந்தனிடம் ஒப்படைத்துவிட்டு ஒதுங்கி நிற்கிருர்கள்.

சவாரி போயிருந்த நல்ல குதிரைகள் இரண்டு, சொல்லி வைத்த மாதிரி ஜோடியாக வந்து நிற்கின்றன.

''ஜோடிக் குதிரை சார்... ஜோடியாகவே எடுத்துக்கிட்டுப் போங்க..'' என்று அவர்கள்

பக்கம் நிறுத்தி விட்டு, வெள்ளைக் குதிரையை இழுத்துக் கொண்டு வேகமாகப் போகிறுன் கோவிந்தன். வேறெங்கே, லாயத்தை நோக்கித்தான்!

லாவகமாகத் தாவி ஏறி உட்காருகிறுன் மணிவாசகன். நர்மதாவுக்குக் குதிரையேற்றம் தெரியுமோ என்னவோ....../

'' மே ஐ ஹெல்ப் யு மேடம்'' என்கிறுன்.

'' நோ—தாங்க்ஸ் ''

'' குதிரை இடக்கு பண்ணி விடப் போகிறது ''.

'' இது ஜாதிக் குதிரை...... சண்டித்தனம் பண்ண இதுவும் உங்களைப்போல சட்டக்கல்லூரியிலயா படிக்கிறது?''

'' உங்கள் படிப்புக்கும் பேச்சுக்கும் சம்பந்தமே இல்லையே.. டாக்டர்? பேச்சைக் குறைக்க வேண்டும் ''.

'' வக்கீல் நியாயமாக நடக்க வேண்டும். ''
—வாதம் வாக்குவாதமாகிறது.

'' எப்ப நடக்கணும், எப்ப ஓடணும்'னு இவங்களுக்குத் தெரியாட்டாலும் என் குதிரைகளுக்கு நல்லாத் தெரியும்.... அங்கே பாருங்க.... ஜோடிக் குதிரைகள் கலகலன்னு காத்தாப் பறக்கத் தொடங்கிடுச்சு '' என்றபடியே அந்தக் குதிரைகள் போகின்ற பாதையைப் பார்த்து ரசித்துக் கொண்டிருக்கிறுன் கோவிந்தன்.

பசிய தரை....பச்சைப்புல் மெத்தை..... பார்க்குமிடமெல்லாம் பச்சைத் தோரணங்கள்.......பசுமையான காட்சிகள்....... இயற்கையின் எழிலை ரசித்தபடியே நர்மதாவும் மணிவாசகனும் உதகையை வலம் வருகிறுர்கள். சில்லென்ற காலைப்பனியின் குளுமையை, அவர்கள் பேச்சிலிருக்கும் கதகதப்பு ஆற்றி ஆற்றி இலேசாக்குகிறது.

குதிரையேற்றம் பழகுகிறவர்கள், பழகியதைப் பிறருக்குத் தெரிவிக்க நினைப்பவர்கள் என்று வரும் பயணிகளைச் சுமந்து சுமந்து ஓடி ஓடிப் பழக்கப்பட்ட சவாரிக் குதிரைகள் இரண்டும் தாம் பழகிய பாதையிலே தடம் பிடித்து ஓடிக் கொண்டிருக்கின்றன......ஊட்டிக்கு வருபவர்களுக்குத் தனியாக வழிகாட்டிகள் தேவையில்லை! ஒவ்வொரு குதிரையுமே வழிகாட்டியின் பணியைத்தான் செய்கின்றது.

பந்தய மைதானத்தைக் கடந்து ஏரிக்கரைக்குப் போகும் பாதையில் குதிரைகளின் ஓட்டம் வானத்தில் மேக மூட்டம். குபீரென மங்கல் வெளிச்சத்தில் ஊட்டியின் ஒளியை மாற்றிக் காட்டுகிற ரசவாதம். பேச்சுக்குப் பேச்சு ஈடு கொடுத்தும் எதிர்வெட்டு வெட்டியும் பயணத்தை இன்ப மயமானதாக்கியபடி வரும் இளம் உள்ளங்கள்..........

ஏரிக்கரைக்கு மேற்புறமாக மரங்களினூடே போய்க் கொண்டிருக்கிறுர்கள் நர்மதாவும் மணிவாசகனும்....மலைப் பாதையின் மறுபக்கத்தில் சிலீர் என்ற தண்மையுடன் தேங்கிக் கிடக்கும் சின்னஞ்சிறு சுனையின் அமைதியான அழகை ரசித்தபடியே இருவரும் வந்து கொண்டிருக்கிறுர்கள்.

திடீரென்று இருவருமே குதிரைகளை நிறுத்துகிறுர்கள்.

ஒற்றையடிப் பாதை வழியே ஓரடி ஈரடியாய்த் தத்திவரும் தங்கரதம் போல் தளிர்நடை நடந்துவரும் குழந்தை, சுனையின் கரையில் வந்து நிற்கின்றதே!



ஐயோ அடுத்த அடி எடுத்து வைத்தால், குழந்தையின் கதி..

குதிரையை விட்டிறங்கிக் குபீரென்று பாய்ந்து சென்று குழந்தையைப் பிடிக்கிறுள் நர்மதா. அதற்குள் லாவகமாக அந்தக் குழந்தையை மேலே தூக்கி விடுகிறுன் மணிவாசகன்.

'' நல்லவேளை....ஆண்டவன் காப்பாற்றினுன், '' என்று நிம்மதியாகக் கூறுகிறுள் நர்மதா.

'' எம் பேரு ஆண்டவன் இல்லே, மணிவாசகன். ''

குழந்தையை ஆளுக்கொரு பக்கமாகப் பிடித்திருந்தவர்கள், ஓரிரு விநாடிகள்வரை பிடியை விடவில்லை, நேருக்கு நேர் நின்று பார்த்த விழிகளின் வழியாக இருவரின் நெஞ்சங்களும் தெரிகின்றன. இதயங்கள் பேசும், ரகசியங்களை இருவருமே துல்லிதமாக உணருகின்றனர்.

சீறிச்சீறி வந்து கொண்டிருந்த இரண்டு இதயங்களுக்கு மத்தியில் இந்தச் சின்னஞ்சிறு குழந்தை ஒரு பாலம்.

பெண்ணின் பிடிவாதமும் ஆணின் ஆணவமும் அந்த இடத்தில் தலைதூக்கவில்லை. பெண்ணின் இதயத்தில் தாய்மையும் ஆணின் இதயத்தில் அன்பும் இடம் பெறுகின்றன.

'' ஊட்டியில் உங்களுக்கு ஒரு குழந்தை இருக்கின்ற விவரம் எனக்கு இதுவரையில் தெரியாதே........'' என்கிறுள் நர்மதா. மணிவாசகனைக் கேலி செய்யும் நோக்கில் பிறந்த கேள்விதான்.... இருந்தாலும், ஒருவேளை அவனுக்கு மணமாகியிருக்குமோ என்ற சந்தேகம், அவனுடைய மறுமொழியால் தீரலாமே என்ற எண்ணம் அவளுக்கு இருந்தது.

'' என்னுடைய குழந்தையா ? ........நான் கட்டைப் பிரம்மச்சாரி அம்மணி....இருந்தாலும் ஒருவகையில் .உங்கள் சந்தேகத்தைக் கண்டு எனக்கு மகிழ்ச்சிதான்.

'' என்ன ?''

'' என் மகனை எப்படியும் ஊட்டியில் தான் படிக்க வைக்க வேண்டும் என்று தீர்மானித்திருக்கிறேன். நீங்கள் முன் கூட்டியே அதைக் கூறிவிட்டீர்கள்....அது எப்படி?''

'' என் மனத்திலும் அதே தீர்மானம்தான்....

'' அதாவது என் மகனை ஊட்டியில் படிக்க வைக்க வேண்டுமென்ற தீர்மானம்— ''

'' ஐயய்யோ....... இல்லையில்லை....—அதாவது எனக்குக் கல்யாணமாகி இரண்டு மூன்று வருடங்களுக்குப் பிறகு பிறக்கப்போகும் என்மகனைப் பற்றித் தான் குறிப்பிட்டேன்..... ''

'' இல்லை நீங்கள் சொன்னது என் குழந்தையைத்தான்.... ''

'' இல்லை என் குழந்தை....

'' இல்லவே இல்லை.... என் குழந்தைதான்........ ''
—இருவரும் மாறி மாறி 'என் குழந்தை' 'என் குழந்தை' என்று சண்டை

போட்டுக் கொண்டிருந்த சமயம் நாலைந்து பேராக அந்த இடத்திற்கு ஓடி வருகிறார்கள்.

இருவர் கையிலும் இருக்கும் குழந்தை இருவரில் யாருடையது என்பதைத் தீர்த்து வைக்கத் தான் விரைந்து வருகிறார்கள்.

## 4. படிப்பு முடிந்தது, பதவி வந்தது.

எந்த வெற்றிக்கும் நம்பிக்கை தான் அடிப்படை; உழைப்பிலே நம்பிக்கை வைப்பதன் மூலம் தன் உயர்விலும் நம்பிக்கை வைத்திருந்தார் பாண்டித்துரை.

உழைத்தார்; உயர்ந்து நிற்கிறார்.

இத்தனைக்கும் அவர் பழைய பேப்பர் வியாபாரி. ஒரு காலத்தில் தெருத்தெருவாக அலைந்து பழைய காகிதங்களைச் சேகரித்தவர் பாண்டித்துரை. கடும் வெய்யிலிலும் கனத்த மழையிலும் தெருவில் இறங்கி நடந்து நடந்து தேடித் தேடிச் சேகரித்த காகிதங்கள் அவர் பையிலும், கசப்பான அனுபவங்கள் அவர் நெஞ்சிலுமாக நிறைந்திருந்தன. இன்று அவை இரண்டுந்தாம் அவருடைய வாழ்வுக்கும் வசதிக்கும் உரமாக அவரை உயர்த்தியிருக்கின்றன.

தம் தங்கை மகன் மணிவாசகனின்மீது— அவனுடைய ஒளிமயமான எதிர்காலத்தின் மீது—அவருக்கு அசைக்க முடியாத நம்பிக்கை. பள்ளிப் பருவம் தொட்டு மணிவாசகனின் செயல்கள் ஒவ்வொன்றும் அவருக்கு அவன் மீதிருந்த நம்பிக்கையை வளர்த்த வண்ணமே இருந்தன.........

எட்டாம் வகுப்பு படித்த சமயம், கார் விபத்தில் பெற்றோரை இழந்து கதி கலங்கி நின்ற மணிவாசகனைக் கருணையுடன் அரவணைத்துத் தம் வீட்டுக்குக் கூட்டி வந்திருந்தார். ஏதோ முடிந்த வரையில் உதவி செய்து அவனை எஸ்.எஸ்.எல்.சி.வரை படிக்க வைத்து விட்டால் பிறகு அவனுடைய பாட்டை அவனுகவே பார்த்துக் கொள்ளட்டும் என்று படிக்க வைத்தார். படிக்க வேண்டும் என்ற ஆர்வம் பாதியும், படிப்புப் பட்டம் இல்லாவிட்டால் தன் எதிர்காலத்தில் ஒளிகாண முடியாது என்ற பயம் பாதியுமாக மணிவாசகனும் படிப்பைத் தொடர்ந்தான்.

தகுந்த ஆதரவும் அரவணைப்பும் இல்லாததால் அவனுடைய கல்வி ஆர்வமும் வேகமும் தடைப்பட்டு விடக்கூடாதே என்ற நல்லுணர்வோடு தம் சக்திக்கும் மீறிக் கல்லூரிப் படிப்புக்கும் வழி செய்து கொடுத்தவர் பாண்டித்துரை.

பட்டப் படிப்பு முடியும்; உடனே ஏதாவது ஒரு வேலையில் அமருவான்; தம்மையும் தம் மகளையும் உட்கார வைத்துச் சோறு போடுவான் என்ற நினைப்பில் அவர் மணிவாசகனுக்கு ஆதரவு தரவில்லை. வாழத்துடிக்கும் ஓர் இளைஞனுக்கு வசதிகளையும், வாய்ப்புகளையும் சீராக்கித்தர வேண்டும் என்ற ஒரே நல்ல நோக்கந்தான் அவர் செய்து வந்த—செய்துவரும்— அத்தனை உதவிகளுக்கும் அடிப்படைக் காரணம்...............

சட்டக் கல்லூரியில் சேர வேண்டும் என்று அவன் விருப்பம் தெரிவித்தபோது கூட நிதிநிலைமையைத் தம் மகள் ராதையிடம் மட்டுந்தான் கூறியிருந்தார் பாண்டித்துரை. தான் படிக்க வேண்டும், வக்கீலாக வேண்டுமென்ற ஆசையைத் தியாகம் செய்தாள் ராதை. தியாகம் செய்வாள் என்ற நம்பிக்கை பாண்டித்துரைக்கு இருந்ததே. . . .

இன்று மணிவாசகன் சட்டக் கல்லூரி மாணவன்.

நாளையே அவன் சட்ட நிபுணன். வழக்கறிஞன்.

கல்வித்திறன், கலகலப்பாகப் பழகும் முறை, வாய்ப்புக்களை வலுவான வகையில் பயன்படுத்திக் கொள்ளும் சாமர்த்தியம் எல்லாமாகச் சேர்ந்து அவனை முதல்தர வழக்கறிஞனுக உயர்த்தும் என்று ஏற்கெனவே புள்ளி போட்டுத்தான் வைத்திருக்கிறார் பாண்டித்துரை.

அவர் நம்பிக்கை வீண் போகவில்லை.

இதோ—

மணிவாசகனைத் தம்முடைய ஆலையின் சட்ட ஆலோசகனுகத் தேர்ந்தெடுத்துக் கொள்ள 'செண்பகா மில்ஸ்'சின் முதலாளி முத்தையா வாக்களித்திருக்கிறார்...........

முத்தையாவுக்கும் பாண்டித்துரைக்கும் நெடுநாளைய நட்புறவு உண்டு. பணக்குறுக்கீடு இல்லாத அளவுக்கு அன்பால் விளைந்த மன நெருக்கம் உண்டு. நட்புக்குப் பணத்தை விலையாகவோ வேலியாகவோ வைத்துக்கொள்ளாமல் பள்ளிப் பருவத்திலிருந்தே பழகியவர்கள். பாசம் கொண்டவர்கள்.

''நீ சொன்னல் உன் மருமகன் தட்டமாட்டான் என்று நான் நம்புகிறேன் பாண்டித்துரை........'' என்கிறார் முத்தையா.

''தட்டமாட்டான் என்று நான் நம்பலாம். ஆனல், தட்டக்கூடாது என்ற கண்டிப்புச் செய்யவோ கட்டளையிடவோ எனக்கு உரிமையில்லை''.

''நீதானே அவனைப் படிக்க வைக்கிருய்?''

''அவன் அறிஞனுக வேண்டுமென்பதற்காக!........''

''அவனுக்காகச் செலவழிக்கிருய்''

''அவனிடம் இல்லையே என்பதற்காக!''

''உன்னிடம் அவன் நன்றியோடு நடந்து கொள்ள வேண்டுமல்லவா?''

''நன்றியை அவனுடைய உழைப்பில், அவனுடைய முன்னேற்றத்தில் அவனுடைய வெற்றிகளில்தான் நான் பார்க்க ஆசைப்படுகிறேன்........என் வார்த்தைக்குப் பணிவதிலோ எனக்குப் பதில் உதவி செய்வதிலோ அவன் நன்றி செலுத்த வேண்டும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.........''

''நீ விசித்திரமான ஆளப்பா.... . அதிருக்கட்டும், என்னுடைய ஆலையின் சட்ட ஆலோசகனுக அவன் வரச் சம்மதிப்பானு? மறுப்பானு?



''தன்னுடைய எதிர் காலத்தை உருவாக்கிக் கொள்ளத் தெரிந்தவன்.

மணிவாசகன். படிப்பு முடிவதற்குள் பதவியும், பணமும் தர நீயே அவனைத் தேடி வந்திருக்கிறாய்.....அதைப் பயன்படுத்திக் கொள்ள அவனுக்குக் கசக்கிறதா என்ன? வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரியாதவன் வாழ்க்கையில் எந்நாளும் முன்னேறவே முடியாது!''

''இருந்தாலும் இந்தக் காலத்துப் பிள்ளைகளின் போக்கு நமக்குப் புரிவதில்லையே!''

''பாண்டித்துரை....! நான் தனியாகத் தொழில் நடத்த விரும்புகிறேன். ஒரு கம்பெனியின் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்க என்னால் முடியாது என்று அவன் மறுத்து விட்டால்.........''

''கம்பெனியின் சட்டதிட்டங்களை வரையறை செய்யவும் அது சம்பந்தமான பிரச்சினைகளை ஆராயவும்தானே மணிவாசகனைச் சட்ட ஆலோசகனாகத் தேர்ந்தெடுக்கப் போகிறாய்....? இதிலே அவன் முகம் சுளிக்கக் கூடிய விஷயம் என்ன இருந்து விடப்போகிறது?''

''இத்தனை நாள் குடும்ப நண்பன் என்ற முறையில் என்னோடு பழக்கம் உண்டு.... இனிமேல் முதலாளி என்ற வகையில் முன்னைப் போல் என்னிடம் பழக முடியுமோ, முடியாதோ என்ற சங்கடத்தில்'' என்று அவர் முடிப்பதற்குள் பாண்டித்துரை குறுக்கிடுகிறார்.

''உன்னிடம் வேலைக்கு வந்து சேரட்டும். என்னிடம் காட்டுகிற பணிவையும் மரியாதையையும் விட உன்னிடம் பல மடங்கு அதிகமாகவே பணிவோடு நடந்து கொள்வான்; விசுவாசமாகவும் இருப்பான்''

''அவனுடைய தொழில் சுதந்தரத்தில்கூட நான் குறுக்கிடப்போவதில்லை என்ற உத்தரவாதத்தையும் என் சார்பில் நீயே கூறிவிடலாம். அவன் தனியாகத் தொழில் நடத்தட்டும்; என் கம்பெனியிலும் சட்ட ஆலோசகனாகப் பணிபுரியட்டும்.''

''சம்மதம் தர வேண்டியவனும் பணி செய்யப் போகிறவனும் நானல்லன். முத்தையா......என் மருமகனிடம் பேச வேண்டியதை எல்லாம் என்னிடமே பேசித் தீர்த்து விடுகிறாயே. ஊட்டிக்குப் போன பிள்ளை வந்து சேரட்டும். ஒழுங்காக இந்த வருடப் பரீட்சையில் தேறட்டும்...... பிறகு நீயாயிற்று, உன் கம்பெனி வக்கீலாயிற்று!''

உதகமண்டலத்துக்கு உல்லாசப் பயணம் போயிருக்கும் ஓர் இளைஞனின் எதிர்காலத்தை உருவாக்குவது பற்றி இங்கே இரண்டு கிழடுகள் மிகவும் அக்கறையாகக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றன........

''அப்பா..... சாப்பாடு தயார்'' என்று அறிவிப்புச் செய்தபடியே அறைக்குள் வருகிறாள் ராதை. அவளோடு, முத்தையாவின் செல்லமகள் செண்பகமும், ''எனக்குப் பசிக்கிறது, சீக்கிரம் வாங்கள் அப்பா'' என்று சிணுங்கிக் கொண்டே வந்து நிற்கிறாள்.

''பிரமாதமான விருந்தா இன்றைக்கு? ஏனம்மா ராதா, உன் கைவண்ணம் உன் 'ஸ்பெஷல் அயிட்டம்'—உருளைக் கிழங்கு பால்கறி உண்டல்லவா'' என்று கேட்டபடியே எழுகிறார் முத்தையா.

''மன்னிக்கணும் மாமா.... அத்தான் வீட்டில் சாப்பிடாத நாட்களில் நான் பால்கறி பண்ணுவதில்லை....'' என்று அமைதியாகக் கூறுகிறாள் ராதை.

''இருக்கிற பால்கறியை எதிரே வைத்துக் கொண்டு இல்லாத அத்தானை நினைத்து ஏங்கிக் கொண்டிருக்கக் கூடாதல்லவா? அதனால்தான் இன்றைக்குப் பால்கறி இல்லை'' என்று அதற்கு விளக்கமும் கொடுத்துவிட்டு ராதையைத் தரதரவென இழுத்தபடி மாடியிலிருந்து இறங்கிப் போகிறாள் செண்பகம்.

சிறகடித்துச்செல்லும் இரண்டு சிட்டுக்களையும் பார்த்தவாறே படியிறங்கும் முத்தையா, ''உன் மகள் கல்யாணச் சாப்பாடு எப்போதப்பா போடப் போகிறாய்?'' என்று கேட்கிறார் பாண்டித்துரையிடம்.

''என் மருமகனைத்தான் கேட்க வேண்டும்!''

''அடப்பாவி.......உன் மகளுக்குத் திருமணநாளை நிச்சயிக்கக் கூட உனக்கு உரிமையில்லையா......? அதற்கும் உன் அழகான மருமகன்—உன் மாப்பிள்ளையிடம் தான் உத்தரவு கேட்க வேண்டுமா?''

''அதிலே என்ன தவறு இருக்கிறது? அவனுடைய எதிர்காலத்தை அவனே நிர்ணயித்துக் கொள்ளட்டும்.

''காலம் யாருக்காகவும் காத்து நிற்பதில்லை அப்பனே.. கன்னிப் பெண்ணின் கனவுகளுக்கும் ஓர் எல்லை உண்டு..''

''இருக்கட்டும்.... கிணற்று நீரை ஆற்றுவெள்ளம் அடித்துக் கொண்டா போய்விடப் போகிறது........? என்று சமாதானம் கூறிச் சிரிக்கிறார் பாண்டித்துரை.


ஆற்றுவெள்ளம் அங்கே திசை மாறி ஓடத் தொடங்கியிருக்கின்ற உண்மை அவருக்கு இன்னும் தெரியவில்லை...... பாவம்.......!

நண்பர்கள் இருவரும் சாப்பிட உட்காருகிறார்கள். தோழியர் இருவரும் பரிமாறத் தொடங்குகிறார்கள்.

தொலைபேசி மணி, கிணு கிணுக்கிறது.

ராதைதான் எடுக்கிறாள். ''அப்பா..... உங்களுக்குத்தான்....... ஊட்டியிலிருந்து ட்ரங்கால்'' என்கிறாள் ராதை.


(வளரும்)



**ஒலிபெருக்கிக்குப் புதிய சலுகை.**

**பொதுக்கூட்டம், திருமணம், மற்றும் பொது இடங்களில் ஒலி பெருக்கி வைப்பதற்கு ரூ. 3 கட்டி உரிமம் (License) வாங்க வேண்டும் என்றிருந்த ஆணையை மாற்றி; இனிமேல் உரிமப் பணம் கட்ட வேண்டியதில்லை என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.**

# வேலை வாய்ப்பளிக்கும் வி.ஐ.பி.



சாலையோரத்திலே உட்கார்ந்து கொண்டு, போவோர் வருவோரின் கால்களைக் 'கண்ணோட்டம்' விடும் செருப்புத் தைக்கும் தொழிலாளியைப் பார்க்கிறோம்.

கால் வயிற்றுக் கஞ்சிக்காகக் காலணி பழுது பார்க்கும் அந்தத் தொழிலாளி, காலமெல்லாம் கண்ணீர் சிந்தும் நிலையையும் பார்க்கிறோம்.

இந்த நிலையை மாற்றியமைத்து, அவன் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை உண்டாக்குகிறது வி.ஐ.பி.! அதாவது கிராமத் தொழில் பொருட்கள் (Village Industries Products).

தொழிலாளரின் திறமையை, கலை நுணுக்கத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் அவர்களுக்கு வேலை வாய்ப்பளித்து ஆதரவு தருகிறது தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்.

கண்ணாடிப் பெட்டிகளிலே காட்சியளிக்கும் கண்ணைக் கவரும் வண்ண வண்ணக் காலணிகளைப் பார்த்து விட்டால் அத்தனையும் வாங்கி அணிந்து கொள்ள வேண்டுமென்று தோன்றும்.

காலத்துக் கேற்ற நவீனக் காலணிகளை உருவாக்கும் உற்பத்திக் கூடங்கள் பல இன்று கதர் கிராமத் தொழில் வாரியத்தின் சார்பில் சிறப்பாக இயங்கி வருகின்றன.

தமிழ்நாடு முழுவதும் பதின்மூன்று காலணி உற்பத்திக் கூடங்கள் இயங்கி, சுமார், 150 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளித்து வருகின்றன. மேலும், இத்தொழில் வளம் பெற்றுத் திகழ்வதற்கான வாய்ப்பிருப்பதை இங்குக் குறிப்பிட வேண்டும். அப்போது இன்னும் கூடுதலான பேருக்கு வேலை வாய்ப்பிருக்கும் அல்லவா?

தரமான, கவர்ச்சியான காலணிகள், தோல் பொருட்களைக் கலையழகோடு தயாரித்து மலிவான விலைக்கு விற்பதால் இவற்றுக்குத் தமிழகத்தில் நல்ல ஆதரவு இருந்து வருகிறது.

காஞ்சி மாநகரில் ஓர் உற்பத்திக் கூடமாக இயங்கி வரும் காலணி தயாரிக்கும் தொழிலில், பத்துத் தொழிலாளர்கள் பயன்பெற்று வருகிறார்கள். நாள்தோறும் கூலி பெறும் இவர்கள் சராசரியாக மாதம் ரூ. 250 பெறுகிறார்கள்.

காஞ்சியில் உள்ள இந்தக் காலணி அலகு, முதலில் 1967—68-ஆம் ஆண்டில் வடார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த குடியாத்தம் நகரில் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வந்தது. பிறகு இது, காஞ்சிபுரத்திலும் 1971 முதல் ஆரம்பிக்கப்பட்டு நன்கு இயங்கி வருகிறது.

இந்த உற்பத்திக் கூடத்தில் மாதம் சுமார் 500 முதல் 600 இணைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இது, உற்பத்தியில் அடைந்துள்ளமுன்னேற்றத்தைப் பின்வரும் புள்ளி விவரங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

1971-72-ஆம் ஆண்டு ரூ. 31 ஆயிரமும், 1972—73 அக்டோபர் முடிய ரூ. 28,215-ம் இதன் உற்பத்தி மதிப்பாக இருந்து வருகிறது.

இங்கு உற்பத்தியாகும் காலணிகள் யாவும் கதர் கிராம வாரியத்தைச் சேர்ந்த எல்லாக் கதர் விற்பனை நிலையங்கள் மற்றும் கூட்டுறவுச் சிறப்பங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்படுவதுடன் சென்னைக் கதர் அங்காடி மூலமும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. சென்ற ஆண்டுகளில் விற்பனை விவரம் வருமாறு: 1971—72-ல் ரூ. 20,685.51, 1972—73 அக்டோபர் முடிய ரூ. 13,929.73.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் கதர்ப்பட்டு, பனைத்தொழில், சோப்பு போன்ற பல்வேறு தொழில்களுக்கு ஊக்கமும், ஆக்கமும் அளித்துத் தொழில் வளம் பெருக்கி வருகிறது; பல்வேறு கிராமத் தொழில்களில் திறம் மிகப் பெற்றத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளித்து அவர்களை வாழ வைக்கிறது; தமிழ்நாட்டின் கைத்தொழில் நுணுக்கத்தைஉலகறியச்செய்யும் மேலான பணியையும் செய்து தமிழர் தம் பெருமையை உயர்த்துகிறது.

மக்களுக்குத் தரமான பொருட்களை வழங்கும் நோக்கோடு தமிழக முழுவதும் இயங்கி வரும் காலணி போன்ற பல்வேறு தொழில்கள், மேலும் மேலும் வளர்ந்து வளம் பெற நல்லாதரவு நல்குவோம்!



ஒரே
கல்லில்
3 மாங்காய் !
ஆஸ்திக்கு ஒரு ஆண், ஆசைக்கு ஒரு
பெண் என்று தமது குடும்பத்தைத்
திட்டமிட்டு வைத்திருந்த ஆனந்தன்
தமது இளம் வயதில் ஒரு குறிப்பிட்ட
துகைக்கு 20 ஆண்டுகளில் முதிர்
வடையும், இலாபத்துடன் கூடிய ஒரு
ஆன்டிசிபேட்டட் என்டோமென்ட்
பாலிசி எடுத்தார். அப்பொழுது
மகனுக்கு வயது 7, மகளுக்கு
வயது 4, பத்து ஆண்டுகளுக்குப் பின்
மகனின் கல்லூரிச் செலவுகளுக்கும்,
பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்
மகளின் திருமணச் செலவுக்கும், பாலிசி
முதிர்வில் அவர் முதுமைக் கால வாழ்
விற்கும் பணம் கிடைத்தது. ஒரே
பாலிசியில் மூன்று சௌகரியங்கள்.
இப் பாலிசி பற்றிய விவரங்களறிய
அருகிலுள்ள எல். ஐ. சி.
அலுவலகத்தில் விசாரியுங்கள்.
ஆயுள் இன்சூரன்சு
போல ஆதரவு தருவது
எதுவுமே இல்லை
EP.LIC.33.73

# கேளுங்கள் கொடுக்கப்படும்

கதிர் நாவாய்ப் பூச்சியினால், சென்ற ஆண்டு என் நெல் வயலில் சேதம் ஏற்பட்டது. பூப் பூத்த பிறகு மருந்து தெளிக்கக் கூடாது என்று நான் இருந்து விட்டேன். பிறகுதான் மருந்து தூவலாம் என்று சொன்னார்கள். எனவே, இந்த ஆண்டிலும் அவ்வாறு கதிர் நாவாய்ப் பூச்சிகள் தோன்றக் கூடுமாதலின், அதைத் தடுப்பதற்குரிய மருந்தையும் அதன் அளவையும் தெரிவிக்கவும்.

—வி. சிங்காரம்,
ஆத்தூர்,
சேலம் மாவட்டம்.


கதிர்களில் பால் பிடிக்கும் சமயத்தில் கதிர் நாவாய்ப் பூச்சிகள் தோன்றக் கூடும். அவைகளைக் கட்டுப் படுத்த இரண்டு முறை, 3 அல்லது 4 நாட்கள் இடைவெளியில் ஏக்கருக்கு 10 கிலோ வீதம் பி.எச்.சி. 10 சதத் தூளைத் தூவான் மூலம் தூவுதல் சிறந்தது.

* * *

கிழக்கு இராமநாதபுரத்தில் எங்களுக்கு 7½ ஏக்கர் நிலம் உள்ளது. அவை மானாவாரிக் காடுகள். கிணறு தோண்ட விரும்புவதால் அதற்குரிய வழிமுறைகளை அறிய விரும்புகின்றேன். எவ்வளவு கடன் வாங்கலாம்? எப்படி வாங்கலாம் என்பதைத் தெரிவிக்கவும்.

க. செல்வராஜ்,
366, முடங்கியார் ரோடு,
இராசபாளையம் (அஞ்சல்),
இராமநாதபுர மாவட்டம்.

தாங்கள் புதிதாகக் கிணறு தோண்ட, உங்கள் பகுதியில் உள்ள நிலவள வங்கியில் கடன் பெறலாம். உங்களுக்குள்ள சொத்து மதிப்பின் பேரில், கடன் வழங்கப்படும். கிணறு தோண்டி, பம்புசெட் அமைக்க 12 ஆண்டுக் கால நீண்ட காலக் கடன் வழங்கப் படுகிறது. இக்கடன் பெற உங்கள் ஊராட்சி ஒன்றியத்தில் பணியாற்றும் கூட்டுறவு வளர்ச்சி அலுவலர் அவர்களிடம் விவரம் கேட்டுக் கொண்டு



நிலவள வங்கிக்கு மனுச் செய்யவும். கிணறு வெட்ட எவ்வளவு தொகை வேண்டும் என்று நீங்கள் குறிப்பிட்டு, ஊராட்சி ஒன்றியப் பொறியாளடமிருந்து மதிப்பீடும் ( Estimate ) பெற்று அனுப்பி வைத்தால் சட்டவரையறைக்கு உட்பட்டு, நிலவள வங்கி கடன் வழங்கும். இக்கடன் மனுத் தயாரிப்பதற்கு உங்கள் கிராமச் சேவகரின் உதவியை நாடலாம். நிலவள வங்கி உங்கள் பகுதியில் இல்லாவிட்டால், நாட்டுடைமையாக்கப் பட்ட வங்கிகளிலும் கிணறு தோண்டக் கடன் பெறலாம்.

* * *

நான் அரிசன இனத்தைச் சார்ந்தவன். எஸ். எஸ். எல். சி. வரை படித்து உள்ளேன். மேலும் பண்ணைப் பயிற்சி பெற்றுள்ளேன். எனக்கு A. D. Condition நிலம் சுமார் 10 ஏக்கர் உள்ளது. நான் கோழிப் பண்ணை வைக்க விரும்புகின்றேன். இந்த நிலத்தின் மேல் 'பாங்க்' கடன் கொடுக்குமா? அப்படிக் கொடுத்தால் நான் சொந்தத் தொழில் நடத்தலாம் என்று விரும்புகின்றேன். உடனே எனக்கு அறிவிக்கவும்.

—எஸ்.கே.ஆர். மாரிமுத்து,
சிக்க அவேரிப் பல்லி,
ஜவுளிகிரி,
பேளாலம் (அஞ்சல்),
தென்கனிக் கோட்டை வட்டம்

பொதுவாகக் கண்டிஷன் நிலங்களின் பேரில் கடன் கொடுப்பது இல்லை. ஆனால், தாங்கள் கடனைத் திருப்பி அடைப்பீர்கள், நாணயமானவர்கள் என்று வங்கி அலுவலர்கள் நம்பினால், தங்களுக்கு வேறு யாரேனும் ஜாமீன் கொடுத்தால், வேறு சொத்து மதிப்பும் இருக்குமானால், வங்கி அலுவலர்கள் கடன் அனுமதிக்கக்கூடும். இதுபற்றி, நீங்கள் வங்கியில் கேட்பதே சிறந்தது. தங்களுக்கு வங்கிக் கடன் கிடைக்காதென்றால் அரிசன நலத்துறை மூலம் பால்மாடு வாங்கக் கடன் பெற முயற்சி செய்யலாம். தாங்கள் பெற்றுள்ள பயிற்சியும் இதற்கு உதவும். பால்மாடுகளை வைத்துப் பராமரித்துப் பயன்அடைந்த பிறகு, அதில் மீதப்படுத்தி நீங்களே சொந்தமாகவே கோழிப் பண்ணை அமைத்துப் பயன்பெறலாம்.

* * *

பஞ்சாயத்துக்கு உட்பட்ட ஒரு கிராமத்தில் மாவுமில் அமைப்பதற்கும், ரோட்டரி ஆயில் மில் வைப்பதற்கும் லைசென்ஸ் யாரிடம் வாங்க வேண்டும்? இந்த இரண்டு தொழிலுக்கும் லைசென்ஸ் உண்டா? இல்லையா? லைசென்ஸ் வாங்கவேண்டியிருந்தால் யாருக்கு விண்ணப்பம் செய்யவேண்டும்? எங்கள் ஊரில் மின்சாரம் உள்ளது. முழு விவரம் தெரிவித்தால் வசதியாக இருக்கும்.

—எஸ். இராமையா,
ஸ்ரீராம பவனம்,
சிலைமான்,
மதுரை.

ஊராட்சி மன்றத்திற்கு உட்பட்ட கிராமத்தில் மாவு ஆலை அல்லது நெல் அரைக்கும் ஆலை அல்லது, 'ரோட்டரி' எண்ணெய் ஆலை அமைப்பதற்கு உரிமம் (லைசென்ஸ்) வாங்க வேண்டும். உரிமம் பெறுவதற்கு முன் ஆலை அமைக்க அந்த ஊராட்சி மன்றத்தின் அனுமதியைப் பெற வேண்டும். அடுத்து, தங்கள் தொழிற்சாலைக்குத் தேவையான மின்சாரம் பெற, தங்கள் பகுதியில் உள்ள மின்வாரிய அலுவலக அனுமதியைப் பெறவேண்டும். ஊராட்சி மன்ற அனுமதியையும், தங்கள் மனுவையும், ஆலையின் வரைபடம் ஆகியவைகளையும் அந்த ஊராட்சி மன்றம் அடங்கியுள்ள ஊராட்சி ஒன்றியத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். அதுபோலவே மாவட்ட நல்வாழ்வு அலுவலர்

# தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி லிமிடெட்

**19/20, லிங்கி செட்டி தெரு, தபால் பெட்டி எண் 226,**
**சென்னை—600001.**

தந்தி : '' அர்பாங்க் ''    தொலை பேசி எண் : 20367, 28068.

எங்கள் வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையான விவசாயத்திற்கும், விவசாயத் தொழில்களுக்கும் உதவி செய்யும்.

வட்டி விகிதங்கள்.    (வருடத்திற்கு%)

| | |
|---|---|
| நடப்புக் கணக்கு .. | வட்டி இல்லை |
| சேமிப்புக் கணக்கு .. .. | 4.00 |

(குறைந்த அளவு மாத நிலுவையின் பேரில் வட்டி கணக்கிடப்படுகிறது)

காலாந்திர கணக்கு—ரூ. 1000-ம் அதற்கு மேலும்.

| | |
|---|---|
| 15 நாட்களிலிருந்து 45 நாட்கள் வரை .. .. | 2·00 |
| 45 நாட்களிலிருந்து 90 நாட்கள் வரை .. .. | 3·00 |

நிரந்தர கணக்கு—

| | |
|---|---|
| 91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்குக் குறைவாக .. .. | 4·25 |
| 6 மாதங்களிலிருந்து 9 மாதங்களுக்குக் குறைவாக .. .. | 4·75 |
| 9 மாதங்களிலிருந்து 1 வருடத்திற்குக் குறைவாக .. .. | 5·25 |
| 1 வருடத்திலிருந்து 2 வருடங்களுக்குக் குறைவாக .. .. | 6·00 |
| 2 வருடங்களிலிருந்து 3 வருடங்கள் வரை .. .. | 6·50 |
| 3 வருடங்களுக்கு மேல் 5 வருடங்கள் வரை .. .. | 7·00 |
| 5 வருடங்களுக்கு மேல் .. .. | 7·25 |

ஓராண்டுக் காலத்திற்கும் அதற்கு மேலும் ரூ. 1000-க்கும் அதிகமாக உள்ள முதலீடுகளுக்கு மாதாந்தர வட்டி அளிக்கப்படுகிறது.

மத, தர்ம மற்றும் கல்வி நிலையங்களின் முதலீடுகளுக்கு மேலே குறிப்பிட்டதை விட ½% கூடுதல் வட்டி கொடுக்கப்படும்.

தொடர் கணக்கு    தவணைகளுக்குப் பெறும் மொத்தப் பணம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மாதத் தவணை ரூ. 5-ம் | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
| அதன் மடங்குகளும் ரூ. | 62 | 128·50 | 201 | 278 | 362·50 | 452 | 548·50 |

| | | |
|---|---|---|
| ஆர். கனகசபை, | குடவாசல் சி. கிருட்டிணமூர்த்தி, | டி. வர்த்தமானன், |
| தலைவர். | துணைத்தலைவர். | செயலர். |

( District Health Officer ) அவர்களுக்கும், தொழிற்சாலை ஆய்வாளர் ( Inspector of Factories ) அவர்களுக்கும் தனித்தனியே மனுவையும், ஆலையின் வரைபடத்தையும் ( Blue Print ) அனுப்ப வேண்டும். ஊராட்சி ஒன்றியக் கூட்டத்தில், தாங்கள், ஆலை



அமைக்க அனுமதி கொடுக்கப்பட்டால், பிறகு ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், ஊராட்சி ஒன்றிய அனுமதியின் நகலையும் வைத்து, தங்கள் மனுவை மாவட்ட நல்வாழ்வு அலுவலர் அவர்களுக்கும், தொழிற்சாலை ஆய்வாளருக்கும் அனுப்பி வைப்பார். மாவட்ட நல்வாழ்வு அலுவலரும், தொழிற்சாலை ஆய்வாளரும், தாங்கள் ஆலை துவங்க இருக்கும் இடத்தையும், சுற்றுப் புறங்களையும் பார்வையிட்டுப் பிறகு அனுமதி வழங்குவார்கள். அந்த அனுமதிகள் கிடைத்த பின், ஊராட்சி ஒன்றியத்தின் உரிமம் பெற வேண்டும். இவ்வாறு தொழிற்சாலை துவங்கவும், உரிமம் பெறவும், உங்கள் கிராமச் சேவகர், உங்கள் ஊராட்சி ஒன்றியத் தொழில் வளர்ச்சி அலுவலர் ( Extension Officer for Industries ) ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் ஆகியோர் தங்களுக்கு உதவ முன் வருவார்கள். அவர்களிடம் இதுபற்றிக் கலந்து கொண்டு, பிறகு மேற்கொண்டு முயற்சி செய்யுங்கள். அதுவே நல்லது.

* * *

நமது அரசின், நிலமில்லாதவர்க்கு நிலம் வழங்கும் சிறந்த திட்டத்தின் கீழ் எனக்கு, எனது ஊருக்கருகில் 4 ஏக்கர் 20 சென்ட் வழங்கப் பட்டுள்ளது. அந்நிலத்தைச் சீர்திருத்தப் போதிய, பண வசதியின்றி உள்ளேன். மேற்படி நிலத்தைச் சீர்திருத்திட எந்த வங்கியில் அல்லது அரசு 'டிபார்ட்மெண்டில்' எப்படிக் கடன் பெறுவது என்பதை வெளியிட வேண்டுகின்றேன்.


—சி. ஆரோக்கியசாமி,
கம்பூர் (அஞ்சல்),
மேலூர் (வட்டம்),
மதுரை மாவட்டம்.

அரசு உங்களுக்கு நிலம் கொடுத்துள்ளது. இனிமேல் அதைச் சீர்திருத்திப் பயிரிட்டுப் பயனடைய வேண்டியது உங்கள் பொறுப்பேயாகும். நிலத்தைக் கொடுத்த அரசிடமிருந்து பணவசதியையும் எதிர்பார்க்கக் கூடாது. நீங்களே உழைத்துக் கொஞ்சம் கொஞ்சமாக நிலத்தைத் திருத்திப் பயிரிட்டு முன்னேறலாம். மானாவாரியாக எச்.பி.3. கம்பு பயிரிட்டு அதைக் கொண்டே கொஞ்சம் கொஞ்சமாக முன்னேற இயலும்! மதுரை மாவட்டத்தில் சிறுநிலக்கிழார் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதற்குரிய தலைமை அலுவலகம் மதுரையில் உள்ளது. அங்குச் சென்று கடன் உதவி பற்றி விசாரிக்கவும்.

* * *

குடியாத்தம் அருகில் என்னுடைய 2ஏக்கர்நிலத்தில் சுமார்125மாங்கன்றுகள் நட்டுள்ளேன். ஆனால் 5ஆண்டு ஆகியும் இன்னும் நன்குவளரவில்லை. போன ஆண்டு ஒரே ஒரு மரத்தில் மட்டும் 3 அல்லது 4 காய்கள் காய்த்தன. தயவு செய்து மரங்கள் வளர வழி சொல்லுங்கள்.

மாங்கன்றுகள் நல்ல தரமான தாய் மரங்களில் இருந்து ஒட்டு முறை மூலம் தயாரிக்கப்பட்ட ஒட்டு மாங்கன்றுகள் எனில், 3 அல்லது 4 ஆண்டுகளிலேயே காய்ப்பதற்குத் தொடங்கிவிடும். ஆனால், ஒட்டு மாமரங்கள் நீண்ட காலத்திற்கு, நிறையப் பலன் கொடுக்க வேண்டுமென்பதற்காக, ஒட்டு மாங்கன்றுகளை நட்ட 5 ஆண்டுகள் முடியும் வரை காய்ப்பதற்கு விடக் கூடாது. தாங்கள் நட்டுள்ள மாங்கன்றுகள் நல்ல தரமானவையாக இருப்பின், இதுவரை காய்க்காமல் இருந்தது நல்லதே. நீங்கள் இதுவரை இரசாயன உரமிடாதிருந்ததால், தங்கள் மாங்கன்றுகள் வளர்ச்சியிலும் காய்ப்பதிலும் பின்தங்கி விட்டிருக்கும். எனவே தங்கள் வயலில் உள்ள 5 வயதுடைய மாங்கன்றுகளுக்குப் பின்கண்டவாறு இரசாயன உரமிட்டால் நல்ல வளர்ச்சியும், காய்ப்பும் ஏற்படக் கூடும்.



ஒவ்வொரு மாங்கன்றுக்கும்
இடவேண்டிய உர அளவு

| | கிலோ. |
|---|---|
| மக்கிய தொழு எரு .. | 30 |
| அமோனியம் சல்பேட். | 2·5 |
| எலும்புத்தூள் ... | 3·0 |
| சூப்பர் பாஸ்பேட் .. | 1·5 |
| மியூரியேட் ஆப் பொட்டாஷ். | 1·5 |

மேற்குறிப்பிட்ட உரங்களை ஜூன் மாதத்தில் இடவேண்டும். மாங்கன்றுகள் வளர்ச்சியின்றிச் சிறியதாக இருந்தால் மாங்கன்றினைச் சுற்றி 2 அடி தூரத்தில் 6 அங்குல ஆழமும், 6 அங்குல அகலமும் உள்ள வட்டமான குழி தோண்டி அதில் மேற்கூறிய உரங்களை இட்டு மண்ணால் மூட வேண்டும். மாங்கன்றுகள் வளர்ந்து கிளைகளுடன் காணப்படின், மாங்கன்றினைச் சுற்றிலும் கிளைகள் வளர்ந்துள்ள தூரத்தில் வட்டமாக 6 அங்குல ஆழமும், 6 அங்குல அகலமும் உள்ள குழி தோண்டி அதில் உரங்களை இட்டு மண்ணால் மூட வேண்டும். உரமிட்ட பிறகு மாங்கன்றுகளுக்குத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். இவ்வாறு உரமிடுவதால் தங்களுடைய மாங்கன்றுகள் நல்ல வளர்ச்சி அடைவதுடன் காய்க்கத் தொடங்கும். பிறகு ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாக 5 கிலோ மக்கிய தொழு உரம், 0·5 கிலோ அமோனியம் சல்பேட், 0·5 கிலோ எலும்புத்தூள், 0·25 கிலோ சூப்பர் பாஸ்பேட், 0·25 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவற்றை இட்டு வர வேண்டும். இதனால் மாங்கன்றுகள் வளர்ச்சி பெற்று நிறையக் காய்க்கும்.

—ஆர்.எம்.



1-8—7எ



## வருந்துகிறோம் !


இயல், இசை, நாடகம் என முப்பெரும் பிரிவு கொண்ட முத்துத் தமிழுக்கு நாடகக் கலையின் வாயிலாகத் தொண்டு செய்த முத்தமிழ்க் கலா வித்துவ ரத்தின ஒளவை திரு டி.கே. சண்முகம் எம்.எல்.சி. அவர்கள் பிப்ரவரித் திங்கள் 15–ஆம் நாளில் இயற்கை எய்தினார்கள்.

தமது ஆறுவது வயதிலேயே நாடகத்தில் நடிக்கத் தொடங்கிய திரு டி. கே. சண்முகம் அவர்கள், தமது அறுபத்தொன்றுவது வயது வரை நடித்துக் கொண்டிருந்தார்—சாரீரம் கெடாமல் பாடிக் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நாடகக் கலையைப் பற்றிப் பல நூல்கள் எழுதியுள்ளார். அவரது ஆராய்ச்சிச் சொற்பொழிவுத் தொகுப்பு நூலாகிய 'நாடகக் கலை' சென்னைப் பல்கலைக் கழகத்தில் பி.ஏ., பி.எஸ்சி. வகுப்புகளுக்கு 1972-ஆம் ஆண்டு துணைப் பாட நூலாக வைக்கப்பட்டிருப்பது, அவரது எழுத்துக்குச் சிறப்புச் சேர்த்த செய்தியாகும்.

இத்தனை சிறப்புக்குரிய திரு டி. கே. சண்முகம் அவர்களின் இழப்புக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


விலைவாசியைக் கட்டுப்படுத்த உதவுங்கள்



அதிக விலை கொடுக்காதீர்கள்

சங்கர் சிமெண்ட் தரம் நிறைந்த சிமெண்ட். ஆனாலும் கூட அதற்கு நீங்கள் அதிக விலை கொடுக்க வேண்டியதில்லை. அங்கீகாரம் பெற்ற எங்கள் விற்பனையாளர்களிடமிருந்தே வாங்குங்கள். எங்கள் விற்பனையாளர்களிடம் கம்பெனி கொடுத்துள்ள சான்றிதழ் இருக்கிறதா என்று பாருங்கள். எங்கள் விற்பனையாளர்களின் கடைகளில் அமுலில் உள்ள நிர்ணய விலை பட்டியல் இருக்கும். அதன்படி நிர்ணய விலையே கொடுத்து வாங்குங்கள்.

SANKAR IC CEMENT

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்
175/1, மவுண்ட் ரோடு, சென்னை 2

IS: 269 மார்க்குடன் உத்தரவாதம் கொண்டது.

சங்கர் சிமெண்ட்
தயாரிப்பாளர்கள்

DSIC/IBI3TMA



# நாட்டு வளம் மக்கள் நலம்


மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே,

"இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில்"

என்ற குறள் மொழிக்கொப்பத் தடைக்கற்களைக் கடந்து, நாட்டு வளம்—மக்கள் நலம்—இவையே நம் குறிக்கோள் எனப் பயணம் நடத்தியவாறு சமதர்ம மணங்கமழ் சமுதாயத்தை அமைத்திட அண்ணா வழியில் அயராது பணிபுரியும் இந்த அரசின் நிதிநிலை அறிக்கையைப் பேரவையின் சார்பில் தமிழ் மக்களின் திருமுன் வைத்து அவர்களின் அன்பு ஆதரவை என்றும் போல் இன்றும் வேண்டி நிற்கிறேன்.

1972–73-ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளையும், 1973–74-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை மதிப்பீடுகளையும், இவண் வழங்கிட விழைகிறேன்.

உதட்டின் வெளியீடுகளாக மட்டும் சமதர்மத் திட்டங்கள் அமையாமல், செயலின் வடிவங்களாகவும் அவை ஒளிவிட வேண்டுமென்பதில் இந்த அரசுக்கு நிறைந்த அக்கறையுண்டு. அவசரக் கோலம் அலங்கோலமாகிவிடும் என்பதையும் கருத்தில் கொண்டு, படிப்படியாக—ஆனால் உறுதியாகச் சமதர்மக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தி வருகிறோம். அறிவிக்கப்பட்ட சமதர்மத் திட்டங்கள்—சட்டங்கள் எந்த அளவுக்குச் செயல்படுத்தப்பட்டுள்ளன என்பதையும், மேலும் நாம் மேற்கொள்ள இருக்கிற அடுத்த கட்ட சமதர்மத் திட்டங்களையும்—இந்த நிதிநிலை அறிக்கை கோடிட்டுக் காட்டுமென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



தனியுடைமைகளைத் தேசிய உடைமைகளாக்குவதால் தனியார் ஆதிக்கம் இளைக்க வைக்கப்படுகிறது என்றாலும், தேசிய உடைமையாக்கப்பட்ட அந்தத் தனியார் உடைமைகள், தரித்திர நாராயணர்களாய்த் திரியும் வசதியற்ற இலட்சோப இலட்சம்




அடித்தளத்து மக்களை வாழ வைக்கப் போதுமானவையல்ல என்பதை மறந்திடலாகாது. வேலை வாய்ப்புகளின் வாயிலாக, வறுமையை வெளியேற்றுவதன் வாயிலாக அனைவரையும் வாழ வைக்கலாம்—வசதிகளைத் தரலாம் என்பது இன்பமான நம்பிக்கைதான் எனினும், அந்த நம்பிக்கை விளிம்பை அடைய, இடையில் உள்ள தொலைவை எண்ணிப் பார்த்து, அதற்குள்ளாகக் காலம் கடத்தாமல், ஏழை எளியோர்க்கு, இரப்போர்க்கு, குடிசை வாழ்வோர்க்கு, குருடாகி விட்டோர்க்கு, வீட்டு மனை இல்லாதோர்க்கு, விவசாயத் தொழிலாளர்க்கு, நம்மால் முடிந்த உதவிகளைச் செய்து வருகிறோம். அவர்தம் வாழ்த்துக்களை, ஊக்கமாகக் கொண்டு தொடர்ந்து தொண்டாற்றுகின்றோம்.

இந்த முதல் உதவி மட்டும் போதாது— முழுமையானதும் நிலையானதுமான உதவி, சமுதாயத்திற்குத் தேவைப்படுகிறது என்பதை உணர்ந்தே திட்டங்கள் தீட்டப்படுகின்றன. அந்தத் திட்டங்கள் பற்றிய கண்ணோட்டமும், அவைகளை மாநில அரசுகள் நிறைவேற்றிட இன்றுள்ள மத்திய-மாநிலத் தொடர்புகள் எவ்வாறெல்லாம் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்ற கருத்துக்களும் இந்த நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்றுள்ளன.



அதற்கு முன்பு, நமது மாநில வரவு-செலவுகளை முதலில் அறிந்து கொள்வது பொருத்தமானது.

### 1973–74 வரவு-செலவுத் திட்டம்

1972–73-ஆம் ஆண்டு வருவாய்க் கணக்கில் மிகுதி 1·80 கோடி ரூபாயாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. திருத்த மதிப்பீட்டின்படி வருவாய்க் கணக்கில் வரவு 441·04 கோடி ரூபாயாகவும், செலவு 439·24 கோடி ரூபாயாகவும் இருக்கும். மன்றத்தில் வைக்கப்படும் 1973–74-ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தின்

படி, வருவாய்க் கணக்கில் வரவு 465·56 கோடி ரூபாயாக இருக்குமென்றும், செலவு 465·07 கோடி ரூபாயாக இருக்குமென்றும், வருவாய்க் கணக்கில் மிகுதி 49 இலட்சம் ரூபாயாக இருக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

1973–74-ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் வருவாய்க் கணக்கில் மொத்தச் செலவு 465·07 கோடி ரூபாயாகும். இதில் 41·47 கோடி ரூபாய் திட்ட நிதி ஒதுக்கீடு. திட்டச் செலவு என்பது மொத்தச் செலவில் ஒரு சிறு பகுதியே என்பதைச் சுட்டிக் காட்டவே இந்த விளக்கம் அளிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, கல்விக்கான திட்டச் செலவு 11·78 கோடி ரூபாய் அளவில் அமைந்துள்ளது என நாம் குறிப்பிடும் பொழுது, கல்வி குறித்த நமது மொத்த நிதி ஒதுக்கீடு 97·23 கோடி ரூபாய் என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

அவைமுன் வைக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளில் 1973–74-ஆம் ஆண்டிலாகும் மூலதனச் செலவு 37·97 கோடி ரூபாய். மத்திய அரசுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டிய கடன் தொகை 53·07 கோடி ரூபாய். இதர கடன்களும், முன் பணங்களும் 11·50 கோடி ரூபாய் ஆகியவைகளுக்கும் வகை செய்யப்பட்டுள்ளது.

### நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்

1973–74-ஆம் ஆண்டு, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி ஆண்டாகும். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் வேகம், 1973–74-ஆம் ஆண்டின் நம் வளர்ச்சிப் பணிகளின் வேகத்தை அடித்தளமாகக் கொள்ளும். எனவே, 1973–74-ல் அதற்கென ஒதுக்கப்படும் நிதியளவு தனிச் சிறப்பைப் பெறுகிறது. 1969–70-ல் 87·45 கோடி ரூபாய் அளவுக்கும், 1970–71-ல் 97·50 கோடி ரூபாய் அளவுக்கும், 1971–72-ல் 114·07 கோடி ரூபாய் அளவுக்குமாகப் படிப்படியாக நம் வளர்ச்சித் திட்டங்களின் வேகத்தை உயர்த்தியுள்ளோம். ஐந்தாண்டுக் காலத்தில் இம்மாநில வளர்ச்சித் திட்டங்களுக்காக, 575 கோடி ரூபாயாவது செலவிடப்பட வேண்டுமென மத்திய அரசிடம் நாம் அடிக்கடி வலியுறுத்தி வந்துள்ளோம். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் மூன்றாண்டுகளிலான திட்டச் செலவு 299 கோடி ரூபாயாகும். எனவே, நடப்பு ஆண்டில் 125 கோடி ரூபாயும், 1973–74-ல் 150 கோடி ரூபாயும் செலவாகும் திட்டங்களைத் தீட்டி அனுப்பினோம்.

நமது திட்டங்களின் அளவைக் குறித்தும் நமது பொதுவான நிதிநிலை குறித்தும் மத்தியத் திட்ட ஆணைக் குழுவுடனும், திட்ட அமைச்சருடனும் சென்ற திங்கள் நான் விவாதம் நடத்தினேன். அதன் விளைவாகத் திட்டச் செலவு, நடப்பு ஆண்டில் 116 கோடி ரூபாயாகவும், அடுத்த ஆண்டு 120 கோடி ரூபாயாகவும் இருக்கலாம் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆயினும் நமது மாநிலத்தின் திட்டத் தேவைகளை மனத்தில்கொண்டு, திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவுகளில் சிக்கனத்தைக் கடைப்பிடித்து, நடப்பாண்டுத் திட்டத்திற்கு 120·27 கோடி ரூபாயும், அடுத்தாண்டுத் திட்டத்திற்கு 126·44 கோடி ரூபாயும் ஒதுக்கியுள்ளோம். மாநில அரசு எடுத்த இத்துணை முயற்சிகளுக்கும் பிறகு நான்காவது ஐந்தாண்டுத் திட்ட நிதி ஒதுக்கீடு 546 கோடி ரூபாயாகத்தான் இருக்கும். இது, திட்ட ஆணைக்குழு முதலில் அறிவித்த தொகையாகிய 519 கோடி ரூபாயை விட ஓரளவு கூடுதலாக இருக்கிறதெனினும், நாம் முடிவாகக் கேட்ட 575 கோடி ரூபாயை விடக் குறைவு என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

### திட்ட நிதி உதவி

இதற்குக் காரணம், நான்காவது திட்டக் காலத்திற்கு மத்திய அரசு நமக்கு அளிக்க இருந்த 250 கோடி ரூபாய்க்குப் பதிலாக 202 கோடி ரூபாயாகக் குறைத்து அளித்ததுதான். மாநிலங்களுக்கு மத்திய அரசு திட்ட நிதி உதவி அளிப்பதில், தமிழ்நாட்டின் பங்கு, முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 10·8 சத விகிதமாகத் தொடங்கி, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 9 சத விகிதமாக மாறி, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 7·4 சத விகிதமாகக் குறைந்து, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 4·7 சத விகிதமாகத் தேய்ந்து விட்ட நிலை, மத்திய அரசின் மாற்றாந்தாய் மனப் போக்கைத் தான் காட்டுகிறது.

இந்திய நாட்டின் மக்கள் தொகையில் தமிழ் நாட்டின் மக்கள் தொகை 7·5 சத விகிதம் என்பதைக் கருத்தில் கொண்டு, வரும் ஐந்தாண்டுத் திட்டத்திலாவது பழைய நிலை தொடராமல், நியாயம் வழங்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு இருக்கிறது என்பதைத் தமிழ் நாட்டு மக்களின் சார்பாக வற்புறுத்திக் கூறுகிறேன்.

### நிதி ஆணைக்குழு

மாநில அரசுகள் மத்திய அரசிடமிருந்து நிதி பெறவழி வகுப்பதில் நிதி ஆணைக் குழுவே தலையாய இடம் பெற வேண்டும். இத்தகைய ஏற்பாடே' - நிதி

மத்திய திட்ட அமைச்சருடன் விவாதம்




ஆதாரங்களைப் பல்வேறு மாநிலங்களுக்குப் பிரித்தளிப்பதில், நியாயமாகவும், உறுதியாகவும் செயல்பட ஏற்புடையதாகும். முந்தைய நிதி ஆணைக்குழு அடிப்படையாகக் கொண்ட பல குறியீடுகள் அனுபவ ரீதியில் ஒத்து வராத தன்மையை நிதி ஆணைக்குழுவுக்கு நமது அரசு சுட்டிக்காட்டியுள்ளதோடு, அதை மாற்றி அமைக்க வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளது. மாநிலங்களின் திட்டப் பணிகளின் தேவை, திட்டத்தின்பாற்படாத ஏனைய பணிகளின் தேவை இரண்டையும் நிதி ஆணைக் குழுவே ஒருசேரக் கருதிப் பார்க்க வேண்டும் என்பதும் நமது கருத்தாகும். பின் தங்கிய மாநிலங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்வதோடு, பிற மாநிலங்களில் உள்ள பின்தங்கிய பகுதிகளையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதும் இந்த அரசு தொடர்ந்து எடுத்துக் கூறி வருகிற முறையீடாகும். மாநில அதிகாரப் பட்டியலில் உள்ள வேளாண்மை, கல்வி, நல்வாழ்வு முதலிய துறைகளிலும் மத்திய அரசு, மேல் உரிமை ஏற்கும் பழக்கம் நிற்க வேண்டுமென நாம் கூறியுள்ளோம். இத்துறைகளுக்குச் செலவிட வேண்டிய தொகை முழுதுமே நிதி ஆணைக் குழு வாயிலாக மாநிலங்களுக்கு வழங்கப்பட வேண்டும். மாநிலங்களின் கடன் சுமையைக் குறைக்க வேண்டுமென்றும், மாநிலங்களுக்கு வரி வருவாயைப் பிரித்துக் கொடுப்பதற்கான அடிப்படை விரிவாக்கப்பட வேண்டுமென்றும், வருமானத்தின் மீது விதிக்கப்படுகின்ற கூட்டு நிறுவனவரி (Corporation Tax) மாநிலங்களுக்குப் பங்கீட்டுக் கொடுக்கும் வரிவருவாய்த் தொகுதிக்குள் அடங்கவேண்டுமென்றும், ஆயத்தீர்வையில் மாநிலங்கள் பெறுகிற பங்கு 50 சத விகிதமாக உயர்த்தப்பட வேண்டுமென்றும், இத்தகைய மாற்றங்களின் மூலமே மாநிலங்களின் நிதிநிலை, நிச்சயமற்ற தன்மையிலிருந்து விடுபட முடியுமென்றும், நிதி ஆணைக்குழுவிடம் நமது அரசு எடுத்துக் கூறியிருக்கிறது.

### இயற்கையின் கொடுமையும், ஏற்ற நடவடிக்கையும்.

வெள்ளத்தாலும் புயலாலும் ஏற்பட்ட சீர் குலைவு எவ்வளவு என்பதை நேரில் கண்டு மதிப்பிட்ட மத்திய அரசுக் குழுவினர், தமிழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பாராட்டியதோடு, சீரமைப்புப் பணிகளுக்காக வழங்கிய பரிந்துரை அறிக்கையை மத்திய அரசு ஏற்று 14·25 கோடி ரூபாய் அளித்திட முன் வந்ததற்கு நன்றி தெரிவிக்கிறேன். இது போன்ற இயற்கையின் கொடுமைகளைத் தணிக்கும் பணிகளை மேற்கொள்ள அந்தந்த மாநிலத் திட்டங்களிலேயே தொகை ஒதுக்கப்படுதல் வேண்டுமென்பதே என் கருத்து. கடந்த பத்தாண்டுகளில் அந்தந்த மாநிலத்தில் ஏற்பட்ட புயல், வெள்ளம், வறட்சி ஆகிய அனுபவ அடிப்படையில் எதிர்காலத் தேவைகளை முன்கூட்டியே மதிப்பிட்டுத் திட்டத்தில் தக்க தொகையினைச் சேர்த்திட வேண்டும். இவ்வாறு செய்தால் எந்த மாநிலத்தில் இது போன்ற துயர் தணிப்புப் பணிகள் தேவைப் படுகிறதோ, அந்த மாநிலம் ஏற்கெனவே அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகையினைப் பயன்படுத்தி நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள இயலும்.

### வேளாண்மை வளர்ச்சி

உணவு தானிய உற்பத்தி 1971—72-ல் 70·45 இலட்சம் டன். 1972—73-ல் அந்த அளவு 72·02 இலட்சம் டன்னாக உயரும் என மதிப்பிடப் பட்டுள்ளது. இயற்கையின் ஒத்துழையாமைக் கிடையிலேயும் வேளாண்மைத் துறையில் நாம் பெற்றுள்ள இந்த வளர்ச்சி மகிழத் தக்கதாகும். துண்டு நிலங்களையும் விட்டுவிடாமல் அங்கெல்லாம் இயன்ற அளவு பயிரிடும் பொருட்டு, சம்பாப் பருவத்தில் அவசரக் காலத் திட்டம் ஒன்றை இந்த அரசு விரிந்த அளவில் மேற்கொண்டது. அதன் கீழ், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் 4·82 இலட்சம் ஏக்கர் நிலத்தில் நெல்லும், பல்வேறு மாவட்டங்களில் 4·13 இலட்சம் ஏக்கர் நிலத்தில் சிறு தானியங்களும், 6·10 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் பயறு வகைகளும் விளைவிக்க முனைந்துள்ளோம். மற்றும் 2 இலட்சம் ஏக்கர் நிலத்தில் சூரிய காந்திச் செடி வளர்க்கப்படும்.




மேற்கண்ட முயற்சிகளின் காரணமாக மாநில அரசு தன்னால் இயன்ற அளவுக்குப் பயறு போன்ற தானிய வகைகளையும், எண்ணெய் வித்துக்களையும் அதிகமாக விளைவித்து அவைகளின் விலையேற்றங்களைக் குறைக்க முடியுமென்று நம்புகிறது. உழவனின் ஊக்கமும் அரசின் ஆர்வமும் ஒன்றிக் கலந்து வேளாண்மை வளர்ச்சிக்கான விரைவுப் பணிகள் நிறைவேறும் இந்த வேளையில், அதனை மேலும் உற்சாகப் படுத்துகின்ற அளவுக்கு உரம் வழங்குதலில் மத்திய அரசின் முழு ஒத்துழைப்பைத் தமிழ்நாடு எதிர்பார்க்கிறது. 1972—73-ல் நமக்குத் தேவைப்படும் உரம் நைட்ரஜன் கணக்கில் 2·74 இலட்சம் டன். ஆனால், இது வரை நைட்ரஜன் கணக்கில் 1·30 இலட்சம் டன்னுக்குத் தான் மத்திய அரசின் ஒதுக்கீடு நமக்குக் கிடைத்துள்ளது. மத்திய வேளாண்மை அமைச்சர் அண்மையில் இங்கு வந்திருந்த போது நமது மாநிலத்தின் உணவு தானிய தன்னிறைவுக்கும் அதற்கும் மேலாக

## சமதர்ம மணங்கமழும் 1973-74 நிதி நிலை அறிக்கை

ஓரளவு அண்டை மாநிலங்களின் தேவைக்கு வழங்கவும், நம் வேளாண்மையைப் பெருக்கிட மத்திய அரசு தட்டின்றி உரமும், தாராள நிதி உதவியும் செய்திட வேண்டுமென்று கேட்டுள்ளோம். அந்த நம்பிக்கையின் அடிப்படையில் நமது வேளாண்மைப் பணிகள் தொடருகின்றன.

1973–74-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 22·36 கோடி ரூபாய் வேளாண்மை வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், வேளாண்மைக்காக மின் இணைப்புக் கொடுத்ததில் மின்சார வாரியத்துக்கு ஓர் ஆண்டுக்கு ஏற்படும் இழப்பு 14 கோடி ரூபாயாகும். அதில் பெரும்பகுதியை ஈடு செய்வதற்கு மின்சார வாரியத்துக்கு, 1972–73 திருத்த மதிப்பீட்டில் 1971–72, 1972–73 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்காக 17·8 கோடி ரூபாயும், 1973–74 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 8·2 கோடி ரூபாயும் உதவித் தொகையாகக் கொடுக்கப்படுவது, அவை முன் வைத்துள்ள மதிப்பீடுகளில் அடங்கும். வேளாண்மைக்காக அரசு செலவிடும் தொகைகளைக்கணக்கில் எடுக்கும் பொழுது, பாசனப் பணிகளைப் பேணி வருவதற்காக நாம் செலவு செய்யும் 15·55 கோடி ரூபாயையும் சேர்த்துப் பார்க்க வேண்டும். பாசனக் கட்டணமாக நமக்குக் கிடைப்பது 3·66 கோடி ரூபாய் மட்டுமே யாகும். புதிய பாசன வேலைகளை மேற்கொள்ளுவதற்காக இவ்வாண்டுக்கு 12·23 கோடி ரூபாயும், மறு ஆண்டுக்கு 12·44 கோடி ரூபாயும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆக, பல்வேறு கணக்குகளில் வேளாண்மையின் வளர்ச்சிக்கென அரசு 55 கோடி ரூபாய் அளவுக்கு ஒதுக்க முன்வந்துள்ளது என்பது தெளிவாகும். இதற்கு மேலாகக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் வேளாண்மைக் கடன் வழங்கி வருகிறோம். நடப்பாண்டில் (1972–73) டிசம்பர் திங்கள் 31-ஆம் நாள் வரை, நீண்ட காலக் கடனாகவும், நடுத்தரக் காலக் கடனாகவும், குறுகிய காலக் கடனாகவும் 57·27 கோடி ரூபாய் வழங்கியுள்ளோம். ஆண்டின் எஞ்சிய பகுதியில் மேற்கொண்டும் இவ்வகையில் 40 கோடி ரூபாய் கடன் வழங்கப்படும். 1973–74-ல் குறுகிய கால, நடுத்தரக் கால, நீண்ட காலக் கடனாக 100 கோடி ரூபாய் அளவுக்கு வழங்கப்படும்.

### கால்நடை வளர்ப்பு

''கால் நடை வளர்ப்பு, என்பதன்கீழ் ஒதுக்கப்பட்டுள்ள தொகை, 1972–73 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 4·31 கோடி ரூபாயாக இருந்தது. இது 1972–73 திருத்த மதிப்பீட்டில் 4·89 கோடி ரூபாயாகவும், 1973–74 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 5·17 கோடி ரூபாயாகவும் உயர்ந்துள்ளது. 1973–74-ல் 5 மையக் கிராம வட்டாரங்களை ஏற்படுத்தக் கருதியுள்ளோம். தமிழ்நாட்டில் கால் நடை வளர்ப்பு மும்முரத் திட்டத்தை 1973–74-ல் 15 இலட்சம் ரூபாய் செலவில் சைதாப்பேட்டை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் மேற்கொள்வதெனவும் முடிவு செய்துள்ளோம். மேலும், 1973–74-ல் 25 கால்நடை மருந்தகங்கள் புதிதாக 6 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.


### மக்கள் நல்வாழ்வும், மருத்துவப் பணிகளும்

குடும்ப நலத் திட்டம் உட்பட மக்கள் நல்வாழ்வுக்கான மருத்துவப் பணிகள் திட்டத்திற்காக 1972–73-ல் 38·91 கோடி ரூபாய் செலவிட்டு வருகிறோம். அடுத்த ஆண்டில் 41·17 கோடி ரூபாய் இதற்கெனச் செலவிடத் திட்டமிட்டுள்ளோம். 1972–73, 1973–74 ஆகிய இரு ஆண்டுகளில், 61 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் மாநில அரசு நிருவாகத்தின் கீழ்க் கொண்டு வரப்படும்.

கரூரிலும், வாணியம்பாடியிலும் 24 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனைகள், சென்னை அரசினர் கஸ்தூரிபா காந்தி மகளிர்-சிறார் மருத்துவ மனையில் 30 படுக்கைகள், கோயம்புத்தூரில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 100 படுக்கைகள், திருநெல்வேலியில் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 147 படுக்கைகள் கொண்ட மருத்துவப் பிரிவுகளைக் கட்டுதல், 5 வட்டத் தலைமையிட மருத்துவ மனைகளிலும், 6 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும் இதயத் துடிப்புப் பதியும் மின் இயந்திரம் அமைத்தல், 10 வட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் ஊடு கதிர்ப் (X-Ray) பிரிவுகளை ஏற்படுத்தல் ஆகியவை, வரும் ஆண்டில் நிறைவேற்றப்படவிருக்கிற சில புதிய திட்டங்களாகும்.

மேலும், நமது அரசு நாட்டு மருத்துவ முறைக்கும் ஊக்கம் அளிக்கிறது. அரும்பாக்கத்தில் அறிஞர் அண்ணா அரசினர் நாட்டு மருத்துவ மனையில் 25 படுக்கைகள் கொண்ட மருத்துவப் பிரிவு கட்டுதல், வட்டத் தலைமையிட மருத்துவமனைகள் பத்தில் சித்த மருத்துவப் பிரிவுகள் தொடங்குதல் ஆகியவற்றை இத்துறை பற்றிய பணிகளில் முக்கியமாகக் குறிப்பிடலாம்.

கண்ணொளி வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் சூன் திங்கள் முதல் இதுவரையில் சுமார் 35,000 ஏழை எளிய கிராமப்புற மக்களுக்குக் கண் அறுவைச் சிகிச்சை செய்து இலவசக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன. தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு



இல்லங்களில் தொழுநோய் தீர்க்கும் மருத்துவமனைகள் இணைக்கப்பட்டு அவர்களுக்கு ஏற்ற சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. இந்த ஆண்டுக்குள் மொத்தம் 10 மறுவாழ்வு இல்லங்கள் கட்டி முடிக்கப்பட்டுச் சுமார் 5,000 தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கான பணிகள் தொடங்கிவிடும்.

## கல்வித் துறை

நிதி ஒதுக்கீட்டில் பெரும் பகுதி கல்வித் துறைக்கே உரியதாக இருந்து வருகிறது. 1966-67-ல் வருவாய்க் கணக்கில் கல்விக்கு 43·86 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்க, இத்தொகை 1972—73 திருத்த மதிப்பீட்டில் 95·82 கோடி ரூபாயாகவும், 1973—74 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 97·23 கோடி ரூபாயாகவும் உயர்ந்துள்ளது. தொடக்கக் கல்விக்கு ஊராட்சி ஒன்றியங்கள் செய்யும் செலவை அரசும், ஊராட்சி ஒன்றியங்களும் பகிர்ந்து கொள்ளும் முறையினை அரசு மாற்றியமைத்துள்ளது, உறுப்பினர்கள் அனைவருக்கும் உவகை ஊட்டும். இவ்வகையில், 1971—72-ஆம் ஆண்டில் 32·12 கோடி ரூபாய் மட்டுமே அரசு கொடுத்திருக்க, இத்தொகை 1972—73 திருத்த மதிப்பீட்டில் 35·95 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. வேறு துறைகளின் கீழ், அதாவது மருத்துவக் கல்வி, அரிசன நலப் பள்ளிகள், வேளாண்மைக் கல்வி ஆகியவற்றில் கல்விக்காகச் செலவிடும் தொகையையும் சேர்த்துக் கொண்டால், 1973—74-ஆம் ஆண்டில் மொத்தக் கல்விச் செலவு 108·5 கோடி ரூபாயாகும். வருவாய்க் கணக்கில் கல்விச் செலவின் சத வீதம் 24-க்கு மேல் இருக்கும். 1966-67-ல் நம் மாநிலத்தில் கல்லூரிகளின் எண்ணிக்கை 105-ஆக இருந்து 1972—73-ல் 176-ஆக உயர்ந்துள்ளது, உயர் கல்வியில் இந்த அரசாங்கம் எடுத்துள்ள உருவான நடவடிக்கைகளுக்குச் சிறந்த சான்றாகும்.

கல்விபெறுவதற்குச்சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள மக்களுக்கும் வாய்ப்புகளை விரிவாக்கும் அதே நேரத்தில், கல்வியின் தரங்கள் தேய்ந்து விடாமல் பராமரித்துப் பாதுகாக்கும் பணி இன்று நம்மை எதிர்கொண்டுள்ளது. இந்த அடிப்படையில், பள்ளிகளில் நாம் அளித்துவரும் பயிற்சியின் தரத்தை உயர்த்தும் பொருட்டுப் பள்ளிப்பாடத் திட்டங்களில் மாறுதல் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக, அறிவியல் பாடங்களில், தொடக்கக் கட்டத்திலிருந்தே, மாணவர்களுக்குப் போதிய பயிற்சி அளிக்க நடவடிக்கைகள் எடுத்து வருகின்றோம். கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியர்களின் தொண்டு சிறக்கும் வகையில், ஆசிரியர்களின் சம்பள விகிதங்கள் கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளன. தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் அரசாங்கப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களைப்போலவே ஒத்த ஊதிய விகிதங்களும், ஓய்வூதியம் போன்ற சலுகைகளும் அளிக்க முன்வந்துள்ள



மாநிலங்களில் தமிழகம் தலையாயது என்பதில் நாம் பெருமை கொள்கிறோம். பல்கலைக் கழக மானியக் குழு பரிந்துரைத்த ஊதிய விகிதங்கள் எல்லாக் கல்லூரி ஆசிரியர்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளன.

கல்விப்பயிற்சிக்கால அளவைப் பற்றி நாட்டிலே பற்பல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், பட்டம் பெறுவதற்கு 15 ஆண்டுகள் பயிற்சி அடிப்படையாக அமைய வேண்டும் என்ற கருத்துக்கு அனைத்து இந்தியாவிலும் ஒருமித்த ஆதரவு கிட்டியுள்ளது. தமிழகத்தில் இப்போது வழங்கும் முறைப்படி இப்பதினைந்து ஆண்டுப் பயிற்சிக்கு வகை செய்யப்பட்டுள்ளது. கல்லூரி மட்டத்தில் ஓராண்டு புகுமுக வகுப்புத் தொடர வேண்டுமா, அல்லது அதற்குப் பதிலாக இரண்டு ஆண்டுகள் இடைநிலை வகுப்பை மீண்டும் கொண்டுவர வேண்டுமா, அதைத் தொடர்ந்து பட்ட வகுப்பு இரண்டு ஆண்டுகளாக இருக்க வேண்டுமா, அல்லது மூன்று ஆண்டுகளாக இருக்க வேண்டுமா, என்பன போன்ற பிரச்சினைகளைப் பற்றிக் கல்வி நிபுணர்களின் வட்டாரங்களில் வெவ்வேறு வகையான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. கல்லூரிப் பயிற்சி இப்பொழுது உள்ளது போல் நான்கு ஆண்டுகளாகத் தொடர்ந்து இருக்க வேண்டுமா, அல்லது ஐந்து ஆண்டுகளாக உயர்த்தப்படவேண்டுமா என்பதில் நாம் ஒரு முடிவு எடுத்த பின்புதான், அதையொட்டிப் பள்ளிப் பயிற்சி இப்பொழுது உள்ளதுபோல் 11 ஆண்டுகளாகத்தொடர்ந்து இருக்கலாமா அல்லது 10 ஆண்டுகளாகக் குறைக்கப்பட வேண்டுமா என்ற முடிவு செய்ய வேண்டியிருக்கும். கல்லூரிப் படிப்புக் கால அளவு குறித்து நம் தமிழகத்திலுள்ள மூன்று பல்கலைக் கழகங்களும் தங்கள் முடிவான கருத்தைத் தெரிவித்த பின்பு, அந்த அடிப்படையில் மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்க அரசு உத்தேசித்துள்ளது.


அயல்நாடுகளில் பயிற்சி பெற்றுப் பணியாற்றிவரும் நம் நாட்டு நிபுணர்கள், தமிழகத்திற்கு ஓராண்டாகிலும் வந்து அவர்கள் பெற்ற அனுபவத்தை நம்முடன் பகிர்ந்து கொள்ள வாய்ப்பு அளிக்கும் முறையில் ''தமிழ்நாடு உயர்பணி உதவித் தொகைத் திட்டம்'' ஒன்று செயல்படுத்தப்படும் என்று

சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கை உரையில் நான் குறிப்பிட்டிருந்தேன். அந்த அடிப்படையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அயல் நாடுகளிலுள்ள நம்முடைய நிபுணர்கள் பலருடன் தொடர்பு கொண்டுள்ளோம். வரும் ஆண்டில் ஒருசிலராவது தமிழகக் கல்லூரிகளிலும், ஆராய்ச்சி நிலையங்களிலும் தொண்டாற்றுவதற்கு வாய்ப்பு ஏற்படும் என நம்புகின்றேன்.

கல்விக்காக அரசும் சமுதாயமும் செய்து வரும் மூலதனச் செலவையும், ஆர்வமான முயற்சிகளையும், மாணவர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்வதுதான் அவர்களுடைய எதிர்காலத்திற்கும், நாட்டினுடைய எதிர்காலத்திற்கும் உகந்தது என்பது என்னுடைய உறுதியான நம்பிக்கை. அமைதியாகவும் ஆர்வத்துடனும், மாணவர்கள் கல்விப் பயிற்சி பெறுவதற்குச் சாதகமான சூழ்நிலையை அமைத்துத் தருவது எதிர்காலத் தலைமுறையினரின் நலனில் அக்கறை கொண்ட அனைவருடைய பொறுப்புமாகும். கல்விக்குச் சிறிதும் தொடர்பில்லாத பல பிரச்சினைகளைக் குறித்து மாணவர்களிடையே பதட்ட நிலையை உருவாக்கும் முயற்சிகள் ஆங்காங்கு மேற்கொள்ளப்படுவதைக் கண்டு நான் மிகுந்த வேதனை கொள்கிறேன். கட்சிக்கு அப்பாற்பட்ட நிலையில், அனைவரும் அரசுடன் இதில் ஒத்துழைத்து, மாணவர்கள் தங்கள் எதிர்கால வாழ்வுக்குச் செம்மையான அடித்தளம் அமைத்துக்கொள்ள உத்தரவாதம் வேண்டுமென்று நான் மிகுந்த பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். இந்த அடிப்படையில் தொடர்ந்து மாணவர்கள், ஆசிரியர்கள் நலனைக் காக்கவும், கல்வித் தரம் வளமடையச் செய்யவும், உரிய நடவடிக்கைகளை உறுதியாக மேற்கொள்வதே, அரசின் கொள்கையாக இருக்கும்.

## மின் சக்தி

தமிழ் நாட்டில் உள்ள மின் உற்பத்தி நிலையங்களின் உற்பத்தித் திறன் கடந்த ஐந்தாண்டுகளில் சுமார் 500 மெகாவாட் அளவு உயர்த்தப் பட்டுள்ளது. ஆயினும், மின் வெட்டின் காரணமாக இந்தியாவில் பல மாநிலங்கள் பாதிக்கப்பட்டிருப்பதைப் போலவே, நம்முடைய மாநிலமும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த நெருக்கடிக்கான காரணங்களை மன்றம் நன்கறியும். நீர் மின் நிலையங்களையே நம்பியிராமல், அனல், அணு மின் நிலையங்களை அமைக்கவும், இருப்பவைகளை விரிவுபடுத்தவும் மத்திய அரசிடம் மாநில அரசு பலமுறை வேண்டுகோள் விடுத்திருக்கிறது. மின் உற்பத்திக்காக மாநில அரசு வகுத்துள்ள சிறிய திட்டங்களுக்குக் கூட நீண்ட காலமாக மத்திய அரசின் அனுமதிக்குக் காத்திருக்க வேண்டிய நிலைமை தவிர்க்க முடியாததாகிவிட்டது. தொழில் வளரும் வேகத்திற்கு ஏற்ப அதனை முந்திக்கொண்டு மின் வசதி பெருகியாக வேண்டும். ஆனால், 1983–84-ல் தமிழ் நாட்டில் மின்சாரம் 3,000 மெகாவாட் அளவுக்குப் பற்றாக் குறை இருக்கக்கூடும் என்பதைக் கணக்கிட்டு நாம் மத்திய அரசுக்குத் தெரிவித்துள்ளோம். அதனை அலட்சியப்படுத்தாமல், நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிற நெய்வேலி இரண்டா



வது சுரங்கம், கல்பாக்கம் அணு மின் நிலைய விரிவாக்கம், தூத்துக்குடியில் அணு மின் நிலையம், மேட்டூரிலும் தூத்துக்குடியிலும் அனல் மின் நிலையங்கள், ஹோகனக்கல் நீர் மின் நிலையம் ஆகியவை செயல்பட மத்திய அரசு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். 200 மெகாவாட் மின் உற்பத்தித் திறனுள்ள காடம்பாறை நீர் மின் வசதித் திட்டத்தை மத்திய அரசின் அனுமதிக்காக 1971-ல் நம் அரசு அனுப்பியது. இதற்கு 1973 பிப்ரவரியில் மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான பூர்வாங்க வேலைகள் தொடங்கப் பட்டுள்ளன. இதற்கிடையே மின் வெட்டினால் எழுந்துள்ள இன்னல்களை விரைந்து பரிசீலித்து விவசாயிகள், தொழிலாளர்கள், நெசவாளர்கள், பொதுமக்கள் ஆகியோரின் நலனில் அக்கறை கொண்டு பல வேறு நடவடிக்கைகள் எடுத்திருப்பதோடு, மேலும் தேவைப் படுகிற நடவடிக்கைகளை எடுக்கவும் இந்த அரசு தயங்காது என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதை ஒரு பொதுப் பிரச்சினையாகக் கருதிக் கட்சிச் சார்பற்ற முறையில் அனைவரும் அரசுடன் ஒத்துழைத்தால் எழுந்துள்ள சிக்கல்களை எளிதாகத் தீர்ப்பதற்கு இயலும் என்பதையும் வேண்டுகோளாக விடுக்கிறேன்.

## கைத்தறி

நமது மாநிலத்தில் கைத்தறி நெசவாளர்களுக்குக்காக, வருவாய்க் கணக்கில் 1972–73ல்- 1·52கோடிரூபாயும், 1973–74-ல் 1·94 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசு ஊழியர்களுக்காகக் கடன் கணக்கில் கைத்தறித் துணி விற்பனை செய்ததால் ஏற்பட்ட பணத் தட்டுப்பாட்டைநீக்குவதற்காகத் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்துக்கு வட்டியில்லா வழிவகை முன் பணமாக 1·5 கோடி ரூபாய் அரசு கொடுத்துள்ளது. இந்த உதவியைப் பயன்படுத்தி இவ்வாண்டு தலைமைச் சங்கம் தொடக்கச் சங்கங்களிடமிருந்து 8·10 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகளைக் கொள் முதல் செய்ய முடிந்தது. 1966–67-ல் 3·25 கோடி ரூபாய் மதிப்புள்ள துணிகளையே கொள் முதல் செய்திருந்தது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

வேட்டிகள், புடைவைகள், துண்டுகள், படுக்கை விரிப்புக்கள், சமுக்காளங்கள் இவற்றினைக் கைத்தறிக்கென்றே ஒதுக்கி வைக்குமாறும், சுலபமாகச் செயற்படுத்தத் தக்க வகையில் இது பற்றிய விதிகளை எளிதாக்குமாறும் மத்திய அரசை நாம் வற்புறுத்தியுள்ளோம். இவ்வகையில் மத்திய அரசு தக்க நடவடிக்கை எடுக்காதது வருந்தத்தக்கது.


மற்றொரு முக்கியமான பிரச்சினை, தறிகளுக்கு நூல் வழங்குவது பற்றியதாகும். கூட்டுறவு அமைப்பின் கீழ் வரும் தறிகளுக்கு நூற்பு ஆலைகள் மூலம் நியாயமான விலையில் நூல் வழங்கி வருகிறோம். அதைப் போலக் கூட்டுறவு அமைப்புக்கு அப்பாற்பட்ட கைத்தறிகளுக்கும் நியாயமான விலையில் நூல் வழங்க வேண்டியது இன்றியமையாததாகும். அதற்குத் தமிழகத்திலுள்ள நூற்பாலை

களிடமிருந்து மாநில அரசு மூலம் நூல் வழங்க, தக்க அதிகாரங்களை மாநில அரசுக்குத் தரவேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுள்ளோம். இதைப் பற்றி மத்திய அரசு இன்னும் முடிவு எடுக்கவில்லை என்பதை வேதனையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறித் தொழிலை எதிர்நோக்கிய பல்வேறு சிக்கல்களை ஆராய்ந்து, அவற்றிற்கு ஏற்புடைய தீர்வுகளை எடுத்துக் கூறுவதற்காக, திரு. க. சந்தானம் அவர்கள் தலைமையில் வல்லுநர் குழுவொன்றை நியமித்துள்ளோம். கைத்தறித் தொழிலில் தொழிலாளருக்கு ஊதியங்களை நிர்ணயிப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துக் கூறுவதற்காக ஊதிய ஆய்வுக் குழு ஒன்றையும் நியமித்துள்ளோம். இந்த இரண்டு குழுக்களின் அறிக்கைகளைப் பெற்று, அவைகளின் பரிந்துரைகளை ஆய்ந்து, அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

## தொழில் வளர்ச்சி


உரிமம் கிடைக்கப் பெற்றுள்ள நைலான், சோடியம் ஹைட்ரோ சல்பைட், டயர், பி.சி.டி., போன்ற தொழில்களுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், சிறு தொழில்களுக்காகத் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (SIDCO) வாயிலாக 3·56 கோடி ரூபாய்க்கு மூலப் பொருள்களும், இயந்திரங்கள் வாங்குவதற்கும் தொழிற்கூடங்கள் கட்டுவதற்குமாக 1·80 கோடி ரூபாய் கடனும் நடப்பாண்டில் வழங்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டில் இவை 8·50 கோடி ரூபாயாக உயரும். தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT) மூலமாக 6·52 கோடி ரூபாய் மூலதனம் உள்ள தொழில்களுக்கு 1·06 கோடி ரூபாய் அளவுக்குக் கடனும், பங்குத் தொகையுமாக உதவி அளிக்க இந்த அரசு முன்வந்துள்ளது. இவ்விரண்டு நிறுவனங்களும் அண்மையில் இந்த அரசினால் நிறுவப்பட்டு வெற்றிகரமாக நடந்து வருகின்றன என்பதை மன்றம் நன்கறியும். அரசே நடத்தும் சிறு தொழில்களை நிர்வகிக்கும் தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்தின் (TANSI) உற்பத்தி அளவு 1966–67-ல் 4·79 கோடி ரூபாயாக இருந்ததற்கும் மாறாக, மின்சாரப் பற்றாக் குறையுள்ள




நடப்பாண்டில் 7 கோடி ரூபாய் அளவை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்தாண்டில் இது 9 கோடி ரூபாயாக உயரும்.

மாநில அரசு புதிய பணிகளை மேற்கொள்வதற்கான திட்டங்களை வகுத்து வருகிறது என்றாலும், சேலம் உருக்காலை தவிரத் தமிழ்நாட்டிலே மத்திய அரசுத் துறைத்தொழில் திட்டம் எதுவுமே நான்காவது திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்படவில்லை எனலாம். 1972–73-ல் இந்தியா முழுவதற்குமாக மத்திய அரசு 686 கோடி ரூபாய் அளவுக்குத் தொழில் துறைகளில் முதலீடு செய்துள்ளதாகத் தெரிகிறது. இதில் 20 கோடி ரூபாய் மட்டுமே, இம் மாநிலத்தில் நடப்பாண்டில் செய்யப்படும் முதலீடு. பாதுகாப்புக்குத் தேவையாகும் பொருள்களையும் வேறு தொழிற் சாதனங்களையும் உற்பத்தி செய்வதற்கு வாய்ப்பான இடம் தமிழ்நாடு என்பது தெளிவாகும். கீழ்க் காணும் பெருந் தொழில்களைத் தமிழ் நாட்டில் அமைத்திட மத்திய அரசின் அனுமதியை வேண்டியுள்ளோம். அந்தத் தொழில்களாவன :—

தூத்துக்குடியில் தொழில்களுக்கான எண்ணெய் சுத்திகரிப்புச்சாலை (52 கோடி ரூபாய்),



மணலியில் பெட்ரோ கெமிகல் தொழிற்சாலைகள் (80 கோடி ரூபாய்), பாலிஸ்டர் சுருள் தொழிற்சாலை (13 கோடி ரூபாய்), சேலத்தில் வெப்பந் தாங்கிக் கற்கள் தயாரிக்கும் தொழிற்சாலை (10 கோடி ரூபாய்). காவிரி கழிமுகப் பகுதியில் எண்ணெய் தேடும் பணியை மேற்கொள்ள மத்திய அரசை வற்புறுத்தி வருகிறோம்.


இத்தொடர்பில் மற்றொன்றையும் குறிப்பிட விழைகிறேன். சேது சமுத்திரத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென்று இருபது ஆண்டுகளுக்கு மேலாகவே வேண்டி வருகிறோம். இத்திட்டத்தை நிறைவேற்றுவது அவசரமும் அவசியமும் ஆகும். நம் நாட்டின் மேற்குக் கரையோரப் பகுதிகளிலிருந்து கிழக்குக் கரையோரப் பகுதிகளுக்குச் செல்வதற்கு ஆகும் பயண நேரம் இதனால் பெரிதும் குறையும். இது, நாட்டின் பாதுகாப்பிற்கும், கடலோர வாணிபத்திற்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதனை ஐந்தாவது திட்டக் காலத்திலாவது மேற்கொள்ள வேண்டுமென மத்திய அரசை நான் வேண்டிக் கொள்கிறேன். இது தவிர, தூத்துக்குடியில் கப்பல் கட்டும் தளம் ஒன்றும் அமைக்கப்பட வேண்டுமெனக் கேட்டுள்ளோம்.

## வேலை வாய்ப்பு

ஆளுநர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டிருப்பது போல், வேலை வாய்ப்புகளைப் பெருக்குவதற்குச் சிறப்புத் திட்டங்களை 10 கோடி ரூபாய் செலவில் நாம் தொடங்கி வைத்துள்ளோம். 3 கோடி

ரூபாய் செலவில் கிராமப்புற வேலை வாய்ப்பு விரைவுத் திட்டம், 3 கோடி ரூபாய் செலவில் கிராமப்புறச் சாலை அமைப்புத் திட்டம், 61 இலட்சம் ரூபாய் செலவில் இளைஞர் அணித் திட்டம், 1·31 கோடி ரூபாய் செலவில் வறட்சிப் பாதிப்புப் பகுதித் திட்டம், 47 இலட்சம் ரூபாய் செலவில் பொறியியல் பட்டதாரிகளுக்கும், சான்றிதழ் பெற்றவர்களுக்கும் தொழில் பழகும் சிறப்புத் திட்டம், கைப்பணியாளர்களுக்கு 30 இலட்சம் ரூபாய் வரை கடன் வழங்குதல், 25 இலட்சம் ரூபாய் செலவில் ஆசிரியர்கள் தொழில் பழகும் திட்டம் ஆகியவை இதில் அடங்கும்.

மேலும், படித்து வேலையற்றிருக்கும் இளைஞர்களின் பிரச்சினையை மனத்திற்கொண்டு ஒரு விரிவான சிறப்புத் திட்டத்தை வகுத்துள்ளோம். 15 கோடி



ரூபாய் அளவில் ஆண்டுக்குச் செலவு செய்து, வேலை வாய்ப்புக்கள் அளிப்பதற்காக மாநில அரசு தயாரித்துள்ள இத்திட்டத்தை மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்று, விரைவில் செயல்படுத்த முடியுமென நம்புகிறோம்.

## கிராம முன்னேற்றம்

1,500 மக்களும் அதற்கு மேற்பட்டவர்களும் வாழ்கின்ற ஊர்களையும் இடையே உள்ள ஊர்களையும் முக்கியச் சாலைகளுடன் சேர்க்கும் இணைப்புச் சாலைகள் அமைப்புத் திட்டம் ஒன்றைக் கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் நான் வெளியிட்டேன். இவ்வகையில் 19 கோடி ரூபாய் அளவில் தீட்டப்பட்ட திட்டத்தின்கீழ், 1972–73-ஆம் ஆண்டில் 3 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்கிறேன். இப் பணிக்கென 1973–74-ஆம் ஆண்டிலும் 3 கோடி ரூபாய் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது.

ஊராட்சி கல்வி-நிதி விசாரணைக் குழு செய்த பரிவுரைகளின் அடிப்படையில், வளர்ச்சி வட்டாரங்களின் வகைப்பாடு மாற்றி அமைக்கப்பட்டு, அதற்கேற்ப ஊராட்சி ஒன்றியக் குழுக்களுக்குக் கொடுக்கப்படத்தக்க ஊரகத் தீர்வை மேல்வரி இணை மானிய வீதங்களும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக 1973–74-ல் ஊராட்சி ஒன்றியங்கள் 5·25 கோடி ரூபாய் பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## நகர் முன்னேற்றம்

நகர்ப்புற- நாட்டுப்புற திட்டமிடுவதற்கான சட்ட வரைவு, சட்டமாக ஆகிவிட்டதென்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அனைவரும் அறிவர். இச்சட்டத்தின்கீழ், நகர்ப்புற—நாட்டுப்புற திட்ட அமைப்பு அதிகார மன்றங்களை அமைத்திடுவது குறித்து அரசு ஆழ்ந்து ஆலோசித்து வருகிறது. இப்பணிக்கென இம்மாநிலம் எட்டு வட்டாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கான வட்டாரத் திட்டங்கள் தீட்டும் பணி நிறைவெய்தும் நிலையிலுள்ளது. வட்டாரத் திட்டங்களுடன், நகரப் பகுதிகள் ஒழுங்கு முறையுடன் வளர்ச்சியுறுவதற்காகப் பெருந்திட்டங்களும் விரிவான திட்டங்களும் வகுக்கப்பட்டு வருகின்றன.

சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார அமைப்பை(Metropolitan Development Authority) அரசு ஏற்படுத்தியுள்ளது. சென்னை மாநகரின் பிரச்சினைகள் மேலும் பெருகி விடாமல் இருப்பதற்காகச் சென்னையிலிருந்து சுமார் 30 கல் தொலைவில் எல்லா வசதிகளும் நிறைந்த துணை நகரங்களைத் தோற்றுவிப்பது இவ்வமைப்பின் நோக்கங்களில் ஒன்றாகும். இத் திட்டத்தினை அரசு முதற்கண் செங்கற்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூருக்கு அருகில் நிறைவேற்றுவதென முடிவெடுத்துள்ளது. இத் துணைநகர், மறைந்த தமிழ்ப் பேரறிஞர் மறைமலையடிகளின் நினைவாக 'மறைமலைநகர்' என அழைக்கப்படும். இதற்கான தொடக்க முயற்சியை மேற்கொள்வதற்காக 1973–74-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 2 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

## வீட்டு வசதி


1973–74-ஆம் ஆண்டுத் திட்டத்தில் வீட்டு வசதிக்கென 7·08 கோடி ரூபாய் செலவிடப்படும். மேலும் வங்கிகளிடம் இருந்து அதிக நிதி வசதி பெற்று நடுத்தர வகுப்பினருக்கும் குறைந்த வருமானம் உள்ளவர்கட்கும் பயன்படத்தக்க வகையில் ஒரு புதிய திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இது திருச்சி, சேலம், இராமநாதபுர மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். மத்திய கூட்டுறவு வீடு அடமானச் சங்கமும் வீட்டு வசதிக்கான கடன்களை அதிகரித்து வருகிறது. இதற்காக ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து கூடுதல் வசதிகளைப் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

## குடிசை மாற்று வாரியம்

நகர்ப்புறக் குடிசை மாற்றும் திட்டத்திற்காக நாம் 1972–73-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 4 கோடி ரூபாய் ஒதுக்கியிருந்தோம். 1972–73-ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் 6·5 கோடி ரூபாயும், 1973–74-ஆம்ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 6·5 கோடி ரூபாயும் ஒதுக்கியுள்ளோம்.

நடப்பாண்டில் 4,500 குடியிருப்புகளும், வரும் ஆண்டில் மேலும் 4,500 குடியிருப்புகளும் கட்டி முடிக்கப்படும் என எதிர்





பார்க்கப்படுகிறது. மேலும், குடிசைப் பகுதிகளுக்குச் சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அடிப்படை வசதிகள் செய்து தரப்படும்.

## குடிநீர், வடிகால் வசதி வாரியம்

1969–70-ல் குடிநீர், வடிகால் வசதி வாரியம் அமைத்ததிலிருந்து சென்னை மாநகராட்சிக்கும், ஏனைய நகராட்சிகளுக்கும் குடிநீர் வசதி அளிப்பதில் தீவிரக் கவனம் செலுத்தி வருகிறோம்.

சென்னைக்குப் போதிய அளவில் நீர் கொண்டு வருவதற்கான மாபெரும் திட்டமாகிய வீராணம் திட்டம் 1974-ல் முடிவுறுமென எதிர்பார்க்கப்படுகிறது. 1969–70-லிருந்து நடப்பாண்டு முடிய, 84 புதிய நகரக் குடிநீர் வசதித் திட்டங்கள் ஏற்கப்பட்டுள்ளன. 43 திட்டங்கள் முடிவடைந்துள்ளன. மேலும், 25 திட்டங்கள் இந்த ஆண்டிலே முடிவடையும் என எதிர்பார்க்கிறோம். இதன் பயனாக 99 நகராட்சிகளில், 80 நகராட்சிகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி கிடைத்துள்ளது. மேலும் 10 நகராட்சிகளுக்கான திட்டங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. எஞ்சிய 9 நகராட்சிகளுக்குக் குடிநீர் வழங்குவதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன.

ஆறு ஆண்டுக் காலத்தில், சுமார் ரூ. 40 கோடிச் செலவில் எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்து தருவதற்கான திட்டமொன்றைக் குடிநீர் வடிகால் வசதி வாரியம் வகுத்துள்ளது. முதற்கட்டமாக, 100 இலட்சம் ரூபாய் செலவில் கிராமங்களில் இவ்வாண்டு 220 குழாய்க் கிணறுகள் அமைக்கப்படுகின்றன. அடுத்த ஆண்டு இத் திட்டத்தின் கீழ் 200 இலட்சம் ரூபாய் செலவில் 450 குழாய்க் கிணறுகள் அமைக்கப்படும். இவையன்றி, ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் செயல்படும் கிராமக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் 1·46 கோடி ரூபாயும் ஐக்கியநாடு குழந்தைகள் விரைவுநல நிதித் (UNICEF) திட்டத்தின்கீழ் 50 இலட்சம் ரூபாயும் அடுத்த ஆண்டு செலவிடப்படும். குடிநீர் வசதிக்காக 1966–67-ல் சுமார் 3·5 கோடி ரூபாய் செலவிடப்பட்டதற்கு மாறாக, 1973–74-ல் மொத்தம் சுமார் 20 கோடி ரூபாய் செலவிடப்படும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் நலன்

சமுதாயத்தில் வாழ்க்கை வசதியற்றுத் துன்பத்தில் உழன்று கொண்டிருக்கும் அடித்தள மக்களின் நலனில் அக்கறைகொண்டுள்ள இந்த அரசு, 1973-74ஆம் ஆண்டில், அரிசன நலன் என்ற தலைப்பில் முன்பு இணைந்து ஒதுக்கப்பட்ட சத்துணவுத் திட்டத்திற்கான தொகை 88 இலட்சம் ரூபாய் நீங்கலாக, 8.16 கோடி ரூபாயும், பிற்பட்ட வகுப்பினர் நலனுக்கென 5.56 கோடி ரூபாயும் செலவிடத் திட்டமிட்டுள்ளது. இதில் மாநிலத் திட்ட இனங்களும் மத்திய அரசு பொறுப்பேற்கும் இனங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(ரூபாய் கோடியில்.)

| | மொத்தம். | திட்டத்திற்கு அப்பாற்பட்ட மாநிலச் செலவு. | மாநிலத் திட்டம். | மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள். |
|---|---|---|---|---|
| தாழ்த்தப்பட்டோர் நலன் (1973-74) | 8.16 | 5.52 | 2.05 | 0.59 |
| பிற்படுத்தப்பட்டோர் நலன் (1973-74) | 5.56 | 1.76 | 3.50 | 0.30 |

தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காகும் செலவில் மிகப் பெரும் பகுதியை மாநில அரசே தன் வசதிகளிலிருந்து செய்து வருகிறது என்பது மேலே கொடுத்துள்ள புள்ளி விவரத்திலிருந்து தெரியும்.

தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோரில் திறமையுள்ள கல்லூரி மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்றையும் தோற்றுவித்துள்ளோம். இவர்களில் திறமையுள்ளவர்கள் மற்றெந்த வகுப்பினருக்கும் படிப்பிலும் பணியிலும் தாங்கள் சளைத்தவர்களல்லர் என்பதை மெய்ப்பித்துக் காட்டும் வகையில் தன்னம்பிக்கையும் தக்க எழுச்சியும் பெறுவதற்காகவே இத் திட்டம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.


வங்கிகளிடம் இருந்து இரண்டு கோடி ரூபாய் பெற்று, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு, வரும் ஆண்டில் விடுதிகள் கட்ட அரசு திட்டமிட்டுள்ளது. இதனையும் சேர்த்துத் தாழ்த்தப்பட்டவர் நலனுக்கென 9.16 கோடி ரூபாயும், பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கென 6.56 கோடி ரூபாயும் வரும் ஆண்டில் செலவிடப்படும் என்பது தெளிவாகும்.

## தொழிலாளர் நலன்

தொழிலாளர் நலனில் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு, கைத்தறித் தொழிலாளர்களின் குறைந்த பட்ச ஊதியத்தை ஆராயக் குழு அமைத்திருப்பது போல், விவசாயத் தொழிலாளர்களின் குறைந்த பட்ச ஊதியத்தையும் ஆராய்ந்து பரிந்துரையளிக்கக் குழு ஒன்றை அமைத்துள்ளது. மேலும், சிறு தொழிற்சங்கங்கள் உயர் நீதி மன்றத்தின் முன் 'ரிட்' மனுக்கள் செய்வதற்கோ, '' ரிட் அப்பீல் '' செய்வதற்கோ ஆகும் செலவில் ஒரு பகுதியை ஏற்கும் பொருட்டுத் தக்க - வசதியற்ற தொழிற்சங்கம் ஒன்றுக்கு 150 ரூபாய் கொடுக்கத் தீர்மானித்துள்ளது. தொழிலாளர் நல நிதி ஒன்றையும் நாம் அமைத்துள்ளோம். இதற்கு அரசு ஐந்து இலட்சம் ரூபாய் முதற் கட்டமாக மானியமாக அளித்துள்ளது.

## குடியிருப்பு மனைச்சட்டம்

தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்க[illegible]



(உடைமை உரிமை உறுதி செய்தல்) சட்டத்தின் கீழ் தஞ்சை மாவட்டத்தில் 1,57,000 பேருக்குக் குடியிருப்பு மனைகள் வழங்கப்பட்டுள்ளன. இவர்களில் 1,00,000 பேர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் ; 47,000 பேர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்தவர்கள். அவர்களிடமிருந்து குடியிருப்பு மனையின் விலையை வசூலிக்க வேண்டாமென்றும், குடியிருப்பு உரிமையாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய இழப்பீட்டுத் தொகையை மாநில நிதியிலிருந்தே கொடுத்து விடுவதென்றும் மாநில அரசு முடிவு செய்துள்ளது. இந்தச் சட்டம் மலைப் பகுதிகள் நீங்கலாக, மற்ற எல்லா மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்படுகிறது. மேலும், பல்லாயிரக்கணக்கான விவசாயத் தொழிலாளர்கள் இந்தச் சட்டத்தால் பயனடைவார்கள்.

இவ்வாறு பல்வேறு துறைகளிலும் விரைந்த முன்னேற்றத்திற்காக நமது அரசு, பணிகளைத் தொடர்ந்து ஆற்றுகிறது எனினும்,—அந்தத் துறைகளில், பெரும்பாலானவை மத்திய அரசின் உதவிகளுக்காகவும், அனுமதிகளுக்காகவும் காத்துக் கிடக்க வேண்டிய சூழ்நிலையிருப்பதை, இந்த நிதி நிலை அறிக்கையை ஊன்றிக் கவனித்தால் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம். இத்தகைய இடர்பாடுகளைக் களைந்து தயக்கமின்றித் தகைசால் திட்டங்களை நிறைவேற்றத்தான் மாநில அரசுகள் முழுமையாகச் சுயாட்சித் தன்மையுடன் விளங்க வேண்டுமென்ற இந்த அரசின் கொள்கையை வலியுறுத்தி வருகிறோம். மத்தியிலும்—மாநிலங்களிலும் ஆளுகிறவர்களைப் பொறுத்து இல்லாமல், மத்திய மாநில உறவுகள் அரசமைப்புச் சட்ட அடிப்படையிலே நிலை பெறவும் வலுப்பெறவும் வேண்டும். அதற்கு அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட்டாக வேண்டும். இந்தக் கருத்து வெற்றி பெறும் என்ற நம்பிக்கையோடு இந்த அரசு மாநில அளவில் தன்னாலியன்ற சோஷலிசத் திட்டங்களைப் படிப்படியாக நடைமுறைப்படுத்தி வருவதையும், அண்மையில் பேருந்துகள் தேசிய உடைமையாக்கப்படும் சட்டம் நிறைவேற்றப் பட்டதையும், நாட்டு மக்கள் நன்கு அறிவர். தமிழ்ச் சமுதாயம் மகிழத்தக்க வேறு சில அறிவிப்புகளையும் இந்த நிதி நிலை அறிக்கை வாயிலாக நான் நாட்டுக்கு வழங்குகிறேன்.

# அறிவிப்புகள்

## (1) உணவு தானிய மொத்த வாணிபம்

உணவு தானிய மொத்த வாணிபம் பற்றிக் குடியரசுத் தலைவர் தனது உரையில் குறிப்பிட்டு உள்ளார். அதன் தொடர்பாக பிப்ரவரி 24-ஆம்நாள் டெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் வருவாய்த் துறை அமைச்சர் கலந்து கொண்டுள்ளார். அதில் விவாதிக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில், நமது மாநிலச் சூழ்நிலைக்கேற்ப, இன்றியமையாப் பண்டங்களின் விலைவாசிகளைக் கட்டுப்படுத்தும் வகையில் உணவு தானிய மொத்த வியாபாரத்தை அரசு நடத்துவது பற்றி ஆய்ந்து விரைவில் முடிவு எடுக்கப்படும்.

## (2) தொழிற் சட்ட ஆலோசனைப் பிரிவு


தொழிற் சட்டங்கள் குறித்த பல்வேறு பிரச்சினைகளில் அறிவுரை தேவையாயிருந்து, அதற்கான செலவுசெய்யத் தனிப்பட்ட தொழிலாளர் பலருக்கும் சிறு தொழிற் சங்கங்களுக்கும் இயலாத நிலை உள்ளது. இவர்களது பிரச்சினைகளை ஆய்ந்து பார்த்து, என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பது மட்டுமின்றி, என்னென்ன ஆதாரங்களுடன் எந்த அமைப்பினை அணுக வேண்டும் என்பது பற்றியும் அவர்களுக்கு வழி காட்ட வேண்டியிருக்கிறது. எனவே, தொழிலாளர்களுக்கு அவர்களது பிரச்சினைகளில் சட்ட ஆலோசனை கூறுவதற்காகத் தொழில் சட்ட ஆலோசனைப் பிரிவுகள் சென்னை, மதுரை, கோவை ஆகிய நகரங்களில் வரும் ஆண்டில் ஏற்படுத்தப் படும்.

## (3) அரசு அலுவலர்கள்

மத்தியிலும் மாநிலங்களிலும் உள்ள அரசு அலுவலர்களின் ஊதியம் குறித்து ஒருமித்த கொள்கை ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென்று நாம் மத்திய அரசுக்குக் கூறியுள்ள கருத்து முக்கியமானது ஆகும். மத்திய அரசு தனது அலுவலர்களது ஊதிய வீதங்களை மாற்றும்போது மாநில அரசுகளுடன் கலந்தாலோசிக்க வேண்டுமென்று கூறியுள்ளோம். மாநில அரசுகள் தத்தம் அலுவலர்களது ஊதிய வீதங்களை மத்திய அரசின் ஊதிய வீதங்களுக்கு ஏற்ற முறையில் மாற்றியமைக்கத் தேவையான நிதி உதவி அளிக்கும் பொறுப்பை மத்திய அரசு ஏற்க வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

நடப்பாண்டில் மாநில அரசு ஊழியர்களுக்கு நன்மைகள் பலவற்றை நாம் செய்துள்ளோம். அகவிலைப் படியை உயர்த்துவதற்கு மட்டும் நமக்கு நடப்பாண்டில் 5·5 கோடி ரூபாய் செலவாகியுள்ளது. தனி நபர் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்தியதாலும், தொடர்பான வேறு சில சலுகைகளை அளித்ததாலும் நமக்கு ஆண்டொன்

கூவத்தில் உல்லாசப் படகு





பக்கிங்ஹாம் கால்வாய் சீரமைக்கப்படும் . . . .

றுக்கு 4 கோடி ரூபாய் முதல் 5 கோடி ரூபாய் வரை செலவாகிறது. இவ்வாண்டு வீட்டு வாடகைப்படி சென்னை மாநகரப் பகுதியில் ஊதியத்தில் 12 சதவிகித அளவுக்கு உயர்த்தித் தரப்பட்டுள்ளது. சம்பள ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்ற வகையில், 1973–74-ல் சென்னைப் பகுதிக்கு 15 சத விகிதம் வரையும், மற்றப் பகுதிகட்குத் தக்கவாறும், வீட்டு வாடகைப்படி உயர்த்தப்படும். இதற்கென 1·5 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும். தங்கள் ஊதியங்களை மேலும் உயர்த்தும்படி அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் கோரிக்கை விடுக்கும்போது, மாநில அரசின் நிதி நிலைமையைக் கருதிப் பார்க்கும்படி அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். இருப்பினும், அகவிலைப்படி உயர்வு தேவை என்ற அரசு அலுவலர்களின் முறையீட்டை ஏற்று, அகவிலைப்படியை 1,000 ரூபாய்க்குக் குறைவாக ஊதியம் பெறும் அலுவலர் அனைவர்க்கும் 10 ரூபாய் அதிகப்படுத்த அரசு முன்வந்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த உயர்வு ஏப்ரல் மாதத்திற்கான ஊதியத்திலிருந்து தொடங்கப்பெறும். இதற்கு மட்டும் ஆகும் ஆண்டுச் செலவு 6 கோடி ரூபாயாகும். அரசின் நெருக்கடியான நிதிநிலையை முன்னிட்டு இந்த அகவிலைப்படி உயர்வு, ஓராண்டுக் காலத்திற்கு அலுவலர்களின் வருங்கால வைப்பு நிதியில் (Provident Fund) சேர்க்கப்படும். வழக்கம்போல் இந்த உயர்வு, ஆசிரியர்களுக்கும், உள்ளாட்சி நிறுவன அலுவலர்களுக்கும் இதே முறையில் வழங்கப்படும்.

### (4) தாழ்த்தப்பட்டோர் நல மேம்பாடு, வீட்டுவசதிக் கழகம்

தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு இதுவரை அரசு வழங்கியுள்ள வீட்டு மனைகளில், சுமார் 80,000 மனைகளில் வீடுகள் கட்டப்படாமல் உள்ளன. இவற்றில் விரைந்து வீடுகள் கட்டுதற்கு உதவும் வகையில் தாழ்த்தப்பட்டோர் நல மேம்பாடு, வீட்டு வசதிக் கழகம் ஒன்றை அரசு அலுவலர் ஒருவரைத் தலைவராகக் கொண்டு உருவாக்க அரசு முடிவு செய்துள்ளது. வங்கிகளிலிருந்தும், ஏனைய நிதி நிறுவனங்களிடமிருந்தும், நிதி உதவி பெற்றுப் பத்தாண்டுக் காலத்தில் இம் மனைகளில் வீடுகள் கட்டி முடிக்க அரசு திட்டமொன்றைத் தீட்டியுள்ளது. முதற்கட்டமாக 1973–74-ல் 10,000 வீடுகள் கட்டப்படும் என்பதைத் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்குக் காணிக்கையாக்குகிறேன்.

### (5) புதுக்கோட்டை

நீண்ட நெடுங்காலமாக புதுக்கோட்டையைத் தனி மாவட்டமாக ஆக்க வேண்டுமென்ற முறையீட்டை ஏற்றுத் தனி மாவட்டம் அமைக்கப்படும் என்பதை அந்த வட்டாரத்து மக்களுக்குப் பேருவகையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். உருவாக வேண்டிய அந்த மாவட்டத்தில் இணைக்கப்பட வேண்டிய பகுதிகள் பற்றியும், அதன் காரணமாக எழும் பிரச்சினைகள் பற்றியும் ஆராய்ந்து பரிந்துரை செய்யும் அறிக்கையினைத் தயாரித்து அரசுக்கு அளிக்க வருவாய்த் துறை வாரியம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

### (6) பக்கிங்ஹாம் கால்வாய்ச் சீரமைப்பு

கூவம் சீரமைப்புத் திட்டப் பணி நிறைவெய்தியதை அனைவரும் அறிவர். அடுத்து, நமது மாநிலத்தில் 100 மைல் நீளம் அமைந்துள்ள பக்கிங்ஹாம் கால்வாயினை 33 அடி அகலமுள்ளதாகவும், 6 அடி ஆழமுள்ளதாகவும் ஆக்கி, அந்த நீண்ட கால்வாயைப் போக்குவரத்துக்கேற்ற வகையில் எழிலுற மாற்றிட வேண்டுமெனவும் நாம் திட்டமிட்டுள்ளோம். இத் திட்டத்தினை 1973–74 ஆம் ஆண்டிலேயே தொடங்கி விடுகிறோம். இதற்கென வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 50 இலட்சம் ரூபாய்க்கு வகை செய்துள்ளோம்.

### (7) தனியார் மின் நிறுவனங்கள்

தனியார் துறையில் மின் வழங்கும் நிறுவனங்களில் 1967ல் அரசு எடுத்துக் கொண்டது போக, எஞ்சியுள்ள ஏழு தனியார் மின் வழங்கு நிறுவனங்களான (1) கும்பகோணம் எலெக்டிரிக் சப்ளை கார்ப்பரேஷன்; (2) நாகப்பட்டினம் எலெக்டிரிக் சப்ளை கார்ப்பரேஷன்; (3) வேலூர் எலெக்டிரிக் சப்ளை கார்ப்பரேஷன்; (4) சவுத் மெட்ராஸ் எலக்டிரிக் சப்ளை கார்ப்பரேஷன்; (5) திருநெல்வேலி-தூத்துக்குடி எலெக்டிரிக் சப்ளை கார்ப்பரேஷன்; (6) சேலம்-ஈரோடு எலெக்டிரிக் சப்ளை கார்ப்பரேஷன்; (7) செங்கோட்டை எலெக்டிரிக் சப்ளை கார்ப்பரேஷன் ஆகியவற்றை நாட்டுடைமையாக்கும் சட்டம் இந்தக் கூட்டத் தொடரில் வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### (8) அலுமினியத் தொழிற்சாலை


அலுமினியக் கனிப்பொருள் தமிழகத்தில் கிடைக்கிறது. அதைக் கொண்டு மேட்டூரில் நடைபெறும் அலுமினியத்



தொழிற்சாலைக்கு ( MALCO ) அரசுப் பொறுப்பில் உள்ள தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ( TIICO ) நிறுவனத்தின் மூலம் 115 இலட்சம் ரூபாய் மூலதனம் போடப்பட்டுள்ளது. இந்தத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் அலுமினியம் ஏராளமான சிறிய, பெரிய தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருளாகப் பயன்படுகிறது. தமிழகத்தில் கிடைக்கும் கனிப் பொருளைப் பொதுமக்களுடைய நன்மைக்காக முறைப்படி பயன் படுத்தவும், உற்பத்திப் பொருளைச் சீராகத் தொழில் வளர்ச்சிக்கு வழங்கிடவும், அலுமினியத் தொழில் நாட்டு மக்களுக்கு அதிகப் பயன் கிடைக்க வழி செய்யவும், மேட்டூரில் உள்ள அலுமினியத் தொழிற்சாலையை நாட்டுடைமையாக்குவது என்று அரசு முடிவு செய்துள்ளது. முதற் கட்டமாக இதன் நிர்வாகத்தை அரசு எடுத்துக் கொள்வதற்கான சட்டம் மத்திய அரசிடம் ஒப்புதல் பெற்று, இந்தக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும்.

### (9) நிலச் சீர்திருத்தம்

உழுபவர்களுக்கு நிலம் உரிமையாக்கப்பட வேண்டும் என்பது நமது கொள்கை. இந்தக் கொள்கையின் அடிப்படையில் பல்வேறு நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் இந்த மாமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. நில உடைமையாளர்களின் கீழ் பன்னெடுங் காலமாக உழுது பயிரிட்டுவரும் குத்தகைக்காரர்களின் பாதுகாப்புக்காகப் பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. குத்தகைக்கு உழுது பாடுபட்டுவரும் உழவர்களுக்கு, தாங்கள் உழும் நிலங்களை நில உடைமையாளர்களிடமிருந்து விலைக்கு வாங்கிச் சொந்தமாக்கிக் கொள்ள உரிமை தரும் சட்டம் கொண்டு வருவது என்று அரசு முடிவு செய்துள்ளது. ஏழை சிறு நில உடைமையாளர்களுக்குப் பாதகம் ஏற்படாதவண்ணம்



இதற்கான சட்டம் இந்தக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும் என்பதைப் பூரிப்புப் பொங்கிட அறிவிக்கிறேன். இதற்காக ஏழை விவசாயக் குத்தகைதாரர்களுக்குத் தேவைப் படும் நிதி உதவி அளிக்க, குத்தகைதாரர் நிதி உதவிக் கழகம் ஒன்று அமைக்கப்படும்.

''சொல்லுதல் யார்க்கும் எளிய, அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்'

என்பதை நாம் மறவாது இந்த ஆறு ஆண்டுகளில் சொல்லிய வண்ணம் பல சாதனைகளைப் புரிந்து சமதர்ம ஒளி பரவிடும் புத்தம் புதிய சமுதாயத்தைப் படைத்திடச் சூளுரை மேற்கொண்டுள்ளோம். அதற்குச் சான்று பகருகின்ற அறிவிப்புக்களைத்தான் இன்று இந்த அவையின் கண் வழங்கியிருக்கிறேன். இதுபோன்ற எண்ணங்களுக்கு, ஆண்டு அனுபவித்த ஆதிக்க புரியினரிடமிருந்து வரும் கடுமையான எதிர்ப்புக்களை இன்முகத்தோடு புறங்கண்டு, இத்திட்டங்களையும் சட்டங்களையும் ஆதரிப்பர் என எதிர்பார்க்கும் இடங்களிலிருந்தும் நாம் வியப்படையும் வண்ணம் விரோதக் கணைகள் கிளம்புவதையும் வேதனையுடன் சமாளித்தவாறு, நமது இலட்சியப் பயணம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆயினும், நமக்கு நம்பிக்கையும் ஆறுதலும் வழங்குகின்ற வகையில்

''செவிகைப்பச் சொற்பொறுக்கும்
பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு''

என்ற பொய்யாமொழி அமைந்துள்ளதை மட்டும் சுட்டிக் காட்டி, இந்த நிதிநிலை அறிக்கையை மன்றத்தின் முன்வைத்து என் கடமையை நிறைவேற்றுகிறேன்.


வணக்கம்.

மு. கருணாநிதி,
முதலமைச்சர்.

சென்னை,
1973 பிப்ரவரித் திங்கள்
26-ம் நாள்.

# பார்த்தோம் படித்தோம்






**அட்டைச் சிறப்பு.**

பிப்ரவரி 16-ஆம் நாள் 'தமிழரசு' இதழின் அட்டைப் படம் வெகு அருமை. அரசு ஏடு என்று சொல்ல முடிய வில்லை; வெள்ளி விழாக் கொண் டாடி விட்ட பல தமிழ் ஏடுகளை விட மிகச் சிறப்பாக அமைந்திருக்கிறது.

—எம். கணபதி, திருச்செந்தூர்.



**எதிரொலிக் கவிதை !**

படைப்புக்கு வேண்டுகோள்விடும் கவிஞர் கா. வேழ வேந்தனின் கவிதை உள்ளத்தைத் தொட்டு விட்டது. ''பறவைகளாய் எமையெல்லாம் படைத்திருந்தால் பார்முழுதும் சுற்றிவர வேலியுண்டா'' என்று கேட்கும் கவிஞரின் குரலில் மனிதப் பிறவிகளின் ஏக்கம் எதிரொலிக்கிறது.

—செல்வி கோமதி, தூத்துக்குடி.

**கேள்வி தந்த பதுமைகள்.**

லண்டனிலுள்ள மெழுகுப் பதுமைகளைப் பற்றிய கட்டுரையைப் படித்தேன். நமது நாட்டிலும் அவற் றைப் போன்ற பொம்மைகள் எப்போது உருவாகும் என்ற கேள்வி என் இதயத்தைத் துளைக்கத் தொடங்கி விட்டது !

—எஸ். எஸ். சோமு, திருச்சி.

**3,07,000 புத்தகங்களா ?**

சென்னைப் பல்கலைக் கழக நூலகத்துக்கு நான் அடிக்கடி சென்றிருக்கிறேன். அங்கே எத்தனை நூல்கள் இடம் பெற்றுள்ளன என்பது எனக்கு இதுவரை தெரியாது. 'தமிழரசு' பிப்ரவரி 16 இதழைப் படித்த பின்னர்தான் தெரிந்து கொண்டேன் ! அடேயப்பா.. 3,07,000 புத்தகங்களா ?

—அ. பவானி, சென்னை-8.

**திறமை மிக்க தமிழ்நாடு**

திருப்பதி—திருமலை தேவஸ்தானத்திற்குத் தேவைப் படும் மரச் சாமான்களைத் திருவொற்றியூரில் உள்ள ரீட் கூட்டுறவு மர வேலைத் தொழிற்சாலை அனுப்பி வருகிறது என்ற செய்தி—தமிழகத்தின் தொழில் திறமையைப் பறை சாற்றுகிறது.


—பி. ஆர். சந்திரன், நெல்லை.

**தங்கக் கரும்பு**

நல்ல திரைப் படத்தை எடுத்தால்தான் தங்கப் பதக்கம் கிடைக்கும் என நினைத்திருந்தேன். நல்ல கரும்பை விளைச்சல் செய்தாலும் தங்கப் பதக்கம் பரிசு கிடைக்கும் என்பது இப்போதுதான் தெரிகிறது....!

—கே. வி. சிவராஜ், கோவை.





# மாவட்டங்களிலிருந்து....

### கோவை மாவட்டத்தில்

நம்பியூர் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் நம்பியூரில் கட்டப்பட்டுள்ள தமிழக முதல்வர் அவர்களின் பிறந்தநாள் நினைவு திறந்தவெளிக் கலையரங்கம் பெரியார் ஈ.வே.ரா. அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கலையரங்கின் மதிப்பு ரூ. 7,500.

• • •

### இராமநாதபுர மாவட்டத்தில்

இராமநாதபுர மாவட்டம் சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியம் வலசப்பட்டு கிராமத்தில் ரூ. 18 ஆயிரம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள குடும்ப நலத்துறை நிலையக் கட்டடமொன்றைத் தொழிலமைச்சர் திரு மாதவன் அவர்கள் திறந்து வைத்தார்.

* * *

### சேலம் மாவட்டத்தில்

பள்ளிப்பாளையம் ஊராட்சி ஒன்றிய தீவிர வேலை வாய்ப்புத் திட்டம் கடந்த ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் செயல்பட ஆண்டொன்றுக்கு ரூ. 1,25,000 வீதம் இரண்டு ஆண்டுகளுக்கான மானியம் இவ்வொன்றியத்திற்கு வழங்கப்பெற்றுள்ளது.

இத்திட்டத்தினால் கடந்த ஆண்டில் 280 பேர்களுக்கு நான்கு மாத காலம் தொடர்ச்சியாக வேலை அளிக்கப்பட்டுப் பாதையில்லா 23 குக்கிராமங்களுக்குச் செல்லும் பாதை போடும் வேலையும், 40 பாதைகளுக்குக் கப்பிப் போட்டுப் பராமரித்தல் வேலையும், 31 சிறு பாலங்கள் கட்டும் வேலையும் எடுத்துக் கொள்ளப்பட்டன.

இவைகளில் 5 பாதைகளுக்குக் கப்பி போடும் வேலையைத் தவிர மற்ற வேலைகள் யாவும் முடிக்கப்பட்டு விட்டன. மேற்கண்ட வேலைகளினால் இவ்வாண்டில் 250 பேர்களுக்குத் தொடர்ச்சியாக வேலை வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இவ்வேலை வாய்ப்புத் திட்டத்தினால் இதுவரை பாதை வசதியில்லாத 40 கிராமங்களுக்கு வசதி செய்யப்பட்டுள்ளதுடன், இதனால் இப்பகுதியில் வாழும் சுமார் 8,760 மக்கள் பயனடைந்துள்ளார்கள்.

• • •

### திருச்சி மாவட்டத்தில்

ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் தீவிர வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் 265 பேர்களுக்கு வேலை வாய்ப்புக்கொடுக்கப்பட்டுள்ளது. 14 புதிய சாலைகள் போடப்பட்டுள்ளன. அதன் மூலம் சிறிய கிராமங்களை நெடுஞ்சாலையுடன் இணைத்துக் கூட்டுறவுச் சிறப்பு அங்காடிகளுக்கு விவசாயப் பொருட்களைக் கொண்டுவர வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும், 9 பழைய சாலைகளை மராமத்துச் செய்து, வண்டிகள் போக்கு வரத்துக்கு நல்ல வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. புதிதாகப் போடப்பட்ட சாலைகளில் நீளம்: 44 கி.மீ. சீர் செய்யப்பட்ட சாலைகளின் நீளம் 22 கி.மீ.





# கண்களைக் காப்போம்

டாக்டர் ஜி. வெங்கடசாமி

கடந்த பத்து ஆண்டுகளாகத் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் கண் சிகிச்சை முகாம்கள் நடத்தி வருகிறோம். அதன் பயனாகத் தமிழ்நாட்டின் மக்களுக்கு என்னென்ன கண் நோய்கள் உண்டாகின்றன. எவ்வளவு பேர்களுக்கு நோய் உண்டாகிறது என்று அறிந்திருக்கிறோம். கண் நோய்களை முக்கியமாக நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

### சுற்றுப்புறச் சூழ்நிலையால் உண்டாகும் கண் நோய்கள்

சுற்றுப்புறம் அசுத்தமாக இருந்தால் அதனால் கிருமிகள் கண்களில் சேர்ந்து கண்நோய்களை உண்டாக்குகின்றன. சாதாரணமாகக் கண்கள் சிவந்து, பீளை வடியும். கண்வலி என்ற நோய் இந்த மாதிரிக் கிருமிகளால் உண்டாகிறது. குறைவு: சுத்தம் குறைவதால் கண்ணில் உள்ள நீர்ப்பையில் கிருமிகள் சேர்ந்து நீர்ப்பையை அடைத்துக் கொள்ளும். இதுவும் நம் நாட்டில் சாதாரணமாகக் காணப்படுகிறது. நீர்ப்பையில் உண்டாகும் சீழ் கண் விழியில் சேர்வதால் பல கெடுதல்கள் ஏற்படும். கருவிழியில் சிறிய தூசிபட்டாலும் கூட, கிருமிகள் சேர்ந்து, பெரிய புண்ணாகிப் பார்வை இழக்கிறார்கள். இக்கிருமிகளால் ஏற்படும் நோய்களை எல்லாம், நமது உடம்பை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளுவதாலும், சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்வதாலும் தடுக்கலாம்.

### சத்துக் குறைவான உணவினால் ஏற்படும் கண் நோய்கள்:

உணவில் போதிய சத்து இல்லாவிடில் உடல் வளர்ச்சி குறைவதுடன், பல்வேறு கண் நோய்களும் ஏற்படுகின்றன. மாலைக் கண் இதற்கு ஓர் சிறந்த உதாரணம். கீரை, பால், கேரட் ஆகியவற்றில் இருக்கும் வைட்டமின் 'எ' போதிய அளவு உணவில் இல்லாவிடில் மாலைக்கண் ஏற்படும். தமிழ்நாட்டில், குழந்தைகளுக்கு மாலைக்கண் சகஜமாகக் காணப்படுகிறது. இன்னும் உணவில் அதிக சத்துக் குறையுமானால் கருவிழி கெட்டுப் பார்வை போய்விடும். ஆயிரக்கணக்கான குழந்தைகள் தமிழ்நாட்டில் இவ்வாறு ஒவ்வொரு ஆண்டும் பார்வை இழக்கிறார்கள். பெரும்பாலும் இரண்டு முதல் நான்கு வயதுக்குட்பட்ட குழந்தைகளே இவற்றால் பாதிக்கப்படுகின்றனர். இக்குழந்தைகளின் தாய்மார்களுக்கு இந்நோயின் காரணம் தெரிவதில்லை. குழந்தைகளுக்குக் காய்ச்சல் அல்லது வயிற்றுப் போக்கு ஏற்பட்டவுடன், கொடுக்க வேண்டிய சிறிய அளவு ஆகாரத்தையும் நிறுத்திப் பத்தியம் போட்டு விடுகிறார்கள். அப்பொழுது குழந்தை கண் திறக்காமல் கண்களை மூடிக் கொண்டேயிருக்கும்.

பின்னர் கண்களைத் திறந்து பார்க்கும் பொழுது கருவிழி கரைந்து கெட்டுப் போய் விடும். இந்நிலைமையைத் தாய்மார்கள் அறிந்தால் இவ் வியாதியை எளிதில் முழுவதும் தடுத்து விடலாம். வளரும் குழந்தைக்கு என்ன உணவு கொடுக்க வேண்டும்? சத்துக்குறைவான உணவு கொடுத்தால் குழந்தை எவ்வாறு இருக்கும்? என்பதை மக்களுக்குப் போதிக்க மதுரையில் சத்து உணவு நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உணவில் வைட்டமின் 'பி' இல்லாவிடிலும், இமைகளில் புண் உண்டாகிப் பார்வை குறையும். இதுவும் தமிழ்நாட்டில் சாதாரணமாகக் காணப்படுகிறது. பள்ளியில் படிக்கும் குழந்தைகளில் நூற்றுக்குப் பதினைந்து பேர் இந்த 'பி' வைட்டமின் குறைவால் அவதிப்படுகிறார்கள். இவர்களுக்கு வாய்ப்புண், கண் எரிச்சல், கூச்சம் முதலியன உண்டாகும். பார்வையும் குறையும். கைக்குத்தல் அரிசி, கீரை வகைகள், பால், மோர் முதலியன உட்கொண்டால், இந்த 'பி' வைட்டமின் குறைவால் உண்டாகும் கண் நோய்களைத் தடுக்கலாம்.

### கண் உறுப்புகளில் ஏற்படும் கோளாறு

50 வயதிற்கு மேற்பட்ட மக்களுக்குக் கண்ணினுள் இருக்கும் வில்லை கெட்டுப் புரை உண்டாகும். இது சாதாரணமாக வயதான யாவருக்கும் உண்டாகும் நோய். கொஞ்சம் கொஞ்சமாகப் பார்வை குறைந்து, சில மாதங்களில் பார்வை முழுவதும் குறைந்து விடும். மக்களில் நூற்றுக்கு இரண்டு பேர் கண்ணில் புரை உண்டாகி, இதனால் பார்வையை இழக்கிறார்கள். தமிழ்நாட்டில் மட்டும் எட்டு இலட்சம் மக்கள் இதனால் பார்வையை இழக்கிறார்கள். இவர்கள் கண் மருத்துவமனைக்கோ அல்லது முகாமிற்கோ சென்று அறுவைச் சிகிச்சை செய்துகொண்டு, இழந்த பார்வையைத் திரும்பப் பெறலாம். எந்த வயதிலும் இந்தச் சிகிச்சையைச் செய்து கொள்ளுதல் நல்லது. குழந்தைகளுக்குக் கூடச் சிலருக்குக் கண்ணில் புரை உண்டாகலாம். இதையும் அறுவைச் சிகிச்சை மூலம் குணப்படுத்தலாம்.

### கண் அழுத்தம் அதிகமாதல்

கண்ணினுள் சுரக்கும் நீர் வெளிப்படுவது தடைப்பட்டால் கண்ணில் அழுத்தம் அதிகமாகும். ஆரம்பத்தில் இவ்வியாதிக்கு அறிகுறிகள் ஒன்றும் இருக்காது. கொஞ்சம் கொஞ்சமாகப் பார்வை குறைந்து இந்நோய் முற்றும் போது முழுதுமாகப் பார்வை இழந்து விடுவார்கள். இவ்வாறு பார்வை போய்விட்டால் அதைத் திரும்பப் பெற இயலாது. தமிழ்நாட்டில் மட்டும் பல்லாயிரக்கணக்கான மக்கள் இதனால் பார்வை இழந்திருக்கிறார்கள். ஆண்டுக்கு ஒரு முறையாவது ஒவ்வொருவரும் தங்களின் கண் அழுத்தம் எவ்வாறு என்று சோதித்துப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

### மாறு கண்

கண் விழி அசைவிற்கு ஒவ்வொரு விழியையும் சுற்றி ஆறு தசைகள் உள்ளன. இத்தசைகளில் ஏதாவது கோணலானாலும், இதரக் காரணங்களினாலும், உண்டாகின்றது. இதுவும் குணப்படுத்தக் கூடிய நோய். சிறு வயதிலேயே தகுந்த டாக்டரிடம் காட்டிச் சிகிச்சை செய்து வந்தால் மாறு கண்களை நேராக்கலாம். அவ்வாறு நேராக்காவிட்டால் கண்

ணில் பார்வை குறையும். இரண்டு கண்களும் சேர்ந்து இணைந்து பார்க்க முடியாது.

### உடல் வியாதியால் ஏற்படும் கண் நோய்கள்

கண்களும், உடலில் உள்ள உறுப்புகளில் ஒன்றானதால், உடலில் ஏற்படும் நோய்கள், கண்களையும் பாதிக்கும். நீரிழிவு நோயினால் ஆயிரக்கணக்கான மக்கள் பார்வை இழக்கிறார்கள். பல்லாண்டுகள் ஒருவருக்கு நீரிழிவு நோய் இருந்தால் கண்ணினுள் இருக்கும் விழித்திரையில் இரத்தக் கசிவு ஏற்படும். அது அதிகமாகிப் பார்வையைக் குறைத்து விடும். ஆதலால் நீரிழிவு உள்ளவர்கள் தங்களது கண்களை அடிக்கடி டாக்டரிடம் காட்டிப் பரிசோதனை செய்து கொள்வது அவசியம்.

### இரத்தக் கொதிப்பு

உடலில் இரத்தக் கொதிப்பு உண்டானாலும், கண்ணில் உள்ள விழித் திரையில் இரத்தம் கசியும். இதனால் பார்வை குன்றும்.

### மூளையில் உண்டாகும் கட்டிகள்

மண்டைக்குள், மூளையிலும் மூளையைச் சுற்றி உள்ள உறைகளிலும் நோய்கள் வந்தால், அவை கண் நரம்புகளைப் பாதிக்கும். இதனால் பலருக்குப் பார்வை போய்விடுகிறது. ஆதலால், தலைவலி, மயக்கம், வலிப்பு முதலிய நோய்கள் ஏற்பட்டால் கண் டாக்டரிடம் காட்டி, கண் நரம்புகளில் ஏதாவது கோளாறு இருக்கிறதா என்று அறிந்து கொள்ள வேண்டும். இது தவிர, கிரந்தி போன்ற நோய்களாலும் கண்களில் நோய்கள் உண்டாகிப் பார்வையை இழக்கிறார்கள்.

நாம் பிறக்கும் போது நல்ல பார்வையைப் பெறும் கண்கள், நாம் சாகும் வரை நன்றாகப் பாதுகாக்கப்பட வேண்டும். இதில் சிறந்த கவனம் செலுத்துவதால், கண்களில் எந்த நோய்கள் உண்டாகும் என்று அறிந்து, அவற்றை வராமல் தவிர்க்கச் செய்ய வேண்டும். தவிர்க்க முடியாத காரணங்களினால் நோய்கள் உண்டானாலும், தகுந்த சிகிச்சை செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வோமானால் கடைசிவரை நம் கண்கள் நமக்கு நல்ல பார்வையை அளித்து வாழ்வை ஒளிமயமாக்கும்.

---

## வெளிநாட்டவரின் பாராட்டு



திரு ஜான்வில்சன், எம்.ஏ., சி.பி.இ., கண்பார்வை வழங்கும் உலகப் பேரவையின் தலைவராகப் பணியாற்றுகிறார். டாக்டர் கலைஞர் கண் சிகிச்சை முகாம் பற்றியும், ஊட்டச் சத்துணவுத் திட்டம் பற்றியும் அவர் வழங்கிய பாராட்டுரை இங்கே தரப்படுகிறது.

"என் நெருங்கிய நண்பரான கண் சிகிச்சை நிபுணர் பேராசிரியர் டாக்டர் வெங்கடசாமி அவர்களை, பல சர்வதேச மருத்துவத்துறை மாநாடுகளில் நான் சந்தித்திருக்கிறேன்.

அண்மையில், முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் கண் சிகிச்சை முகாம் இரண்டினைக் காணும் நற்பேறு பெற்றேன். இம்முகாம்கள் முசிரியிலும், சங்கரன் கோவிலிலும் நடைபெற்றன. மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையிலுள்ள, கண் சிகிச்சைத் துறைக்கு நான் வந்திருந்து, அத்துறை மூலம், சிறப்பு அம்சமாக, ஊட்டச் சத்துணவின்மையால் குழந்தைகள் கண் பார்வையற்று வாழும் நிலையைப் போக்கும் நல்ல திட்டத்தைப் பார்வையிட்டேன். இது இந்த மாநிலத்தில்தான் முதல் முறையாகச் செயல்படுத்தப் படும் திட்டமாகும்.

"எண்ணற்றவர்கட்குக் கண்ணொளி வழங்கும் இந்த நல்ல திட்டம் நிறைவேற, அமைக்கப்பட்டிருந்த பகுதியும் அவற்றை நிருவகிக்கும் திறனும், பரிவுடனும்-பக்குவமாகவும் மருத்துவச் சிகிச்சை மூலம் பராமரிக்கும் தரமான பணியும் என் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தன. பெரிய நாடுகள், சில இச் சிகிச்சை முறையைப் பெற்றிருந்தாலும், உலகத்தில் தமிழ் நாட்டைப்போல், எந்த மாநிலமும், ஒரே ஆண்டில் இலட்சம் பேருக்குக் கண் சிகிச்சை அளிக்கும் திட்டத்தைக் கையாளவில்லை. உங்களுடைய செயல் திட்டம், அனுபவம் ஆகியவை உலகில் வளரும் நாடுகள் அனைத்தும் இப்பணியில் ஈடுபட ஊக்கமும் உற்சாகமும் பெற உதவுவதாக அமையும், என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

ஊட்டச் சத்துணவு இன்மை, கண்ணில் சதை வளரும் தன்மை என்ற இரண்டு காரணங்கள் உலகத்திலுள்ள பாதிப்பேர்களைப் பயனில்லாக் கண்குருடர்களாகத் தோற்றுவிக்கின்றன. இங்கு தங்கட்குரிய எல்லா மருத்துவ வசதிச் சக்தியையும் பயன்படுத்திப் பார்வையற்ற நிலையை அடியோடு ஒழித்துக் கொண்டிருக்கிறீர்கள். இதன் மூலம் உலக முழுவதும் எண்ணற்ற கண்ணற்றோர் புத்தொளியும் புதுவாழ்வும் பெற முடிகிறது."

‘புத்தகங்கள் தரும் உதவி பெரிது! மிகப் பெரிது’ என்றார் பாவேந்தர் பாரதிதாசன். ‘மக்களுக்கு, உணவு-உடைக்கு அடுத்த இடம் நூல்நிலையத்திற்குத் தரப்பட வேண்டும்’ என்பது பேரறிஞர் அண்ணா அவர்களின் மேலான கருத்து. மேலும், ‘வீட்டுக்கு ஒரு நூல் நிலையம் வேண்டும்’ என்றும் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

பொதுவாக, வீடுகள் தோறும் நூல் நிலையங்கள் அமைதல் இன்றியமையாதது எனினும், பொது நூலகங்கள் மிகமிக இன்றியமையாதன என்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஏனெனில் நாம் ஒவ்வொருவரும் நாம் விரும்புகிற-நமக்குத் தேவையான எல்லா நூல்களையும்-பல்துறை நூல்களையும் பணம் கொடுத்து வாங்கும் சக்தி படைத்தவர்கள் நம்மில் எத்தனைபேர் இருக்கிறோம்? எனவேதான், ஆங்காங்கு, பல பொது நூலகங்கள் (Public Libraries) இன்றியமையாதனவாகின்றன.

## அறிவாலயம்



# சென்னை மாவட்ட மத்திய நூலகம்

நமது தமிழ்நாட்டைப் பொறுத்தவரை - ஏன் இந்தியாவைப் பொறுத்த வரை கூட இந்த நாடு சுதந்தரம் அடைவதற்கு முன்பு - 1947-க்கு முன்பு- இங்கே எந்த மாநிலத்திலும் ‘நூலகச் சட்டம்’ கிடையாது. சுதந்தரத்திற்குப் பிறகு 1948-ல் முதல் முதலாக ‘நூலகச் சட்டம்’ இயற்றிய முதல் மாநிலம் நமது ‘தமிழ்நாடு’ தான். அதன் பிறகுதான், இந்தியாவின் பிற மாநிலங்கள் ‘நூலகச் சட்டம்’ இயற்றியன.

நமது தமிழ்நாட்டில் நூலகச் சட்டம் 1950-ல் அமலுக்கு வந்தது. சென்னை மாநகராட்சி, சொத்து வரியில், ரூபாய்க்கு 3 காசு வீதம் நூலக வரி வசூலித்து வந்தது. 1954-ஆம் ஆண்டு நூலகத் திட்டம் பயன்படத் தொடங்கியது.

2—7—1954-ல் சென்னை மாநகரில் நகர நூலகம் பிறந்தது. இது, சென்னை அண்ணா சாலையில் ஒரு வாடகைக் கட்டடத்தில்தான் பிறந்தது. ஒரு நூலகர் - இரண்டு உதவியாளர் ஆகியோரே இந்நூலகத்தின் தொடக்கப் பணியாளர்கள். பின்னர்,

சிலம்புச் செல்வர் அவர்கள், மாநகராட்சிப் பொறுப்பிலிருந்து 73 படிப்பகங்களையும் மாநகர நூலக ஆணைக்குழுவின் கீழ்க் கொண்டு வந்து இணைத்து, நூலக இயக்கத்தின் வளர்ச்சிக்கு அடிகோலினார். இவரது பெருமுயற்சியினாலும், இடையறாத உழைப்பாலும், மாநகர நூலகம் மத்திய நூலகம் ஆயிற்று.



நூலகத்தில் படிப்போரில் ஒரு பகுதியினர்.

இன்று மத்திய நூலகம் அண்ணா சாலையில் 63 கிரவுண்டு நிலப்பரப்பில் வானுற ஓங்கி வளர்ந்த வனப்புமிகு நான்கு மாடிக் கட்டடத்தைச் சொந்தமாகப் பெற்றுப் பல்வேறு சிறப்புகளோடு விளங்குகிறது. இந்தக் கட்டடம் அமைந்துள்ள இடத்தினை $4\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் விலை கொடுத்து மத்திய நூலகத்திற்கு வாங்கிச் சேர்த்தவர், அப்போது சென்னை மாநகராட்சி ஆளுநராக இருந்த திரு வி. என். சுப்பராயன் அவர்கள். இவர் மாநகராட்சி ஆளுநர் பொறுப்பிலிருந்து ஓய்வு பெற்று 5—8—1957-ல் மாநகர நூலக ஆணைக்குழுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் காலத்தில்தான், 17—3—1960-ல் அன்றைய இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் இந்த நூலகக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார். பின்னர் ஐந்தாண்டுகளுக்குப் பிறகு 10—11—1965-ல் தமிழ்நாட்டின் ஆளுநராக இருந்த மேதகு ஜய சாமராஜ வாடியார் பகதூர் (மைசூர் மன்னர்) இந்தக் கட்டடத்தைத் திறந்து வைத்தார். இந்தக் கட்டடத்திற்கான மொத்தச் செலவு ஏறத்தாழ 24 இலட்சம் ரூபாய்.

மத்திய நூலகக் கட்டடம் உயர்ந்து கம்பீரமாக விளங்குவது போலவே, நூல் தொகுப்பைப் பொறுத்த வரையிலும் சிறப்பாக விளங்குகிறது. ஏனைய நூலகங்களில் கிடைக்காத அருமையான - விலையுயர்ந்த நூல்கள் பல மத்திய நூலகத்தில் வாங்கி வைக்கப்பட்டுள்ளன. மக்களின் அன்றாடத் தேவைக்கும் எதிர் கால வாழ்வுக்கும் பல்வேறு தேர்வுகளுக்கும் ஆராய்ச்சிகளுக்கும் பயன்படக்கூடிய அருமையான நூல்கள் இங்கு உள்ளன. நூல்கள் வாங்குவதற்காகச் செலவழிக்கப்பட்ட தொகையும் 1958-ல் 8 ஆயிரம் ரூபாயாக இருந்தது பிறகு 5 இலட்சம் ரூபாயாக உயர்ந்திருக்கிறது.

1969-ல் சிலம்புச் செல்வர் அவர்கள் மீண்டும் மத்திய நூலகத் தலைவராகப் பொறுப்பேற்றார். வளர்கின்ற பாத்தியில் நீர் பாய்ச்சியது போல, சிலம்புச் செல்வர் அவர்களின் ஆர்வமும் இடையறாத உழைப்பும் வளர்ந்து வரும் நூலக இயக்கத்தை மேலும் வளர்ப்பதாயின. நூலக இயக்கத்தில் புதிய தெம்பும், புத்துணர்வும் ஏற்பட்டன. துறைதோறும் செந்தமிழே செழிக்க வேண்டும் என்னும் பேரார்வத்தோடு பணிபுரியும் அவர், தமிழ் மக்களுக்கு இங்குக் கிடைக்காத நூல்களே இல்லை என்றாக வேண்டும் என்று எண்ணிச் செயல்பட்டு வருகிறார்.



இன்று, இந்த மத்திய நூலகத்தில் மட்டும் 54 பேர் பணி புரிகின்றனர். நகர் முழுவதிலுமாக 120 பேர் நூலகப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த மத்திய நூலகத்தில் கருத்தரங்க அறைகள் உள்ளன. கருத்தரங்கங்கள் — சொற்பொழிவுகள் நடத்த இவை குறைந்த வாடகைக்குக் கொடுக்கப்படுகின்றன.

அடுத்து, 20 ஆராய்ச்சியாளர்கள் — ஆராய்ச்சி வல்லுநர்கள் ஒரே நேரத்தில் தங்கி ஆய்வு நடத்தக் கூடிய ஆராய்ச்சி அறை ஒன்றும் உள்ளது. இதில், ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

சென்னை மாநகர் பல்வேறு மத, இன—மொழி மக்களைக் கொண்ட நகரமாக விளங்குவது போல, இந்த நூலகமும் பல்வேறு மத, இன, மொழி மக்களும் பயன்படுத்தத் தக்க வகையில் எல்லா மொழி நூல்களையும் மத நூல்களையும் கொண்டு விளங்குகின்றது. 54,000 தமிழ் நூல்களையும், 45,000 ஆங்கில நூல்களையும், 3,000 மலையாள நூல்களையும், 2,000 தெலுங்கு நூல்களையும் இவை தவிர சமஸ்கிருதம், கன்னடம், உருது, குஜராத்தி, இந்தி முதலிய பல்வேறு நூல்களையும் தன்னகத்தே கொண்டு திகழ்கிறது. ஏறத்தாழ $1\frac{1}{2}$ இலட்சம் நூல்கள் வைக்க வசதிகள் செய்யப் பட்டிருக்கும் இந்த நூலகத்தில் இப்போது ஏறத்தாழ 1 இலட்சத்து 4 ஆயிரம் நூல்கள் உள்ளன. சென்னை நகரம் முழுவதுமுள்ள கிளைகளில் வைக்கப்பட்டுள்ள

நூல்களின் மொத்த எண்ணிக்கை 7 இலட்சத்து 4 ஆயிரம்.

இந்த நூலகத்தின் இணைப்பாகச் சிறந்த முறையில் சிறுவர் நூலகம் ஒன்றும் இயங்கி வருகிறது. சென்னை நகரிலே தனிச் சிறப்பு வாய்ந்த இந்தச் சிறுவர் நூலகத்தில் 8 ஆயிரம் நூல்கள் உள்ளன. பெற்றோர்கள் தங்கள் சின்னஞ் சிறு குழந்தைகளை இங்குக் கூட்டி வந்து விட்டு விட்டு, அவர்கள், தங்களுக்கென உள்ள நூலகத்திற்குள் நுழைந்து தாங்களும் படித்து முடித்துவிட்டுத் தங்கள் குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு வீடு திரும்பலாம்.

இன்னொரு முக்கியமான சிறப்பு, இந்தச் சிறுவர் நூலகத்தில் பணி புரியும் உதவியாளர்களும் குழந்தைகளிடத்தில் மிகவும் அன்போடு பழகி இன்னின்ன நூல்களில் இன்னின்ன விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன என்று எடுத்துக் கூறித் தேவைப்பட்டால் குழந்தைகளுக்குப் படித்துக் காட்டியும் குழந்தைகளைப் படிக்க வைப்பது பெரிதும் பாராட்டத் தக்கது. இந்த நூலகமும், திங்கட் கிழமை தவிர ஏனைய நாட்களில் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு நாளும் குறைந்தது 60 குழந்தைகள் இந்த நூலகத்திற்கு வந்து பயன்பெறுகின்றனர்.



சிறுவர் நூலகத்தில்..........

நூலக இயக்கம் வளர்ந்துள்ளது போலவே கடந்த ஆறு ஆண்டுகளில் மத்திய நூலக ஆணைக்குழுவும் அதன் நடவடிக்கையும் வெகுவாக வளர்ந்து விரிவடைந்திருக்கிறது.

இன்று இந்த மத்திய நூலகத்தின் பொறுப்பில் 120 கிளை நூலகங்களும், 3 புத்தகப் பட்டுவாடா நிலையங்களும், ஓர் இயங்கும் நூலகமும் உள்ளன.

நூலகத்தில் உறுப்பினராவதற்கு ரூ. 5 வைப்புத் தொகை (Deposit) கட்ட வேண்டும். தவிர, தங்கட்குத் தேவையான நூல்களைத் தங்கள் வீட்டிலிருந்தே பெறவிரும்புகிறவர்கள் திங்கள் தோறும் 25 காசு கட்டணம் செலுத்த வேண்டும். உறுப்பினர் கட்டிய வைப்புத் தொகையை அவர் உறுப்பினர் பதவியிலிருந்து விலகும் போது திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். உறுப்பினர் கட்டணம் கட்டிய உறுப்பினர்களுக்கு அவர்கள் விரும்பும் நூல்கள் மிதிவண்டிகள் மூலம் விநியோகம் செய்யப்படுகின்றன. மெரினா, சிந்தாதிரிப்பேட்டை, இராயப்பேட்டை, மந்தவெளி, புனித சேவியர் தெரு, கந்தப்ப முதலி தெரு, கோடம்பாக்கம் இரயில் நிலையச் சாலை, ஜார்ஜ் டவுன் ஆகிய இடங்களில் உள்ள கிளை நூலகங்களில் இந்த முறை மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

அடுத்து, மக்கள் தொகைப் பெருக்கமும், இடநெருக்கடியும் மிகுந்துள்ள இச் சென்னை மாநகரத்தில் வாடகைக்கு இடம் கிடைப்பது எளிதன்று. அதுவும், நூலகம் போன்றவற்றிற்குக் கிடைப்பது மிகமிக அருமை. கிளை நூலகங்கள் அமைந்துள்ள இடத்தை விரிவுபடுத்த விரும்பினாலும், அந்த இடங்களின் சொந்தக்காரர்களிடமிருந்து அனுமதி பெறுவது மிகமிகக் கடினம். எனவேதான், மேலும் விரிவுபடுத்த முடியாத நிலையில் உள்ள கிளை நூலகங்களுக்கு வாரந்தோறும் நூல்கள் ஊர்திகள் மூலம் எடுத்துச்சென்று விநியோகிக்கப்படுகின்றன.

பள்ளிகள் நகரின் பல்வேறு பகுதிகளிலும்பரவலாக உள்ளன. அந்தப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பொது அறிவு பெற — அவர்களும் அவர்களுக்குத் தேவையான நல்ல புத்தகங்களைப் படிக்க வாய்ப்பளிக்க வேண்டாமா? இத் துறையில் — இப்பணியில் முச்சக்கர வண்டிகள் (Tempo) நல்ல முறையில் செயலாற்றுகின்றன. இத்திட்டத்தில் 250 பள்ளிகளின் மாணவர்கள் பெரும் பயன் அடைகின்றனர்.

மருத்துவமனையில் நோய் வாய்ப்பட்டிருப்போர் தங்கள் நோயை மறந்திருக்கவும், பல்துறை அறிவைப் பெறவும் உதவும் வகையில், நோயாளிகளின் படுக்கைகளுக்கே நூல்கள் கொண்டு செல்லப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. ஸ்டான்லி மருத்துவமனை, இராயப்பேட்டை அரசினர் மருத்துவமனை, கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனை, தொழிலாளர் சேமநல மருத்துவ மனை, தானே விரும்பியுதவும் நலக்குழு மருத்துவமனை ஆகியவற்றில் இப்பணி சிறப்பாக நடைபெறுகிறது.

அடுத்து, காவலர்கள் தங்கள் பணிநேரம் போக மற்ற நேரத்தில் பயனுள்ள நல்ல நூல்களைப் படித்துப் பயன்பெறத் தக்க வகையில் அவர்கள் குடியிருக்கும் இல்லங்கட்கு அருகிலேயே நூலகங்கள் திறக்கப்பட்டுள்ளன. இந்த நூலகங்கள் ஆயுதப் படையினர் குடியிருக்கும் இடத்திலும், கீழ்ப்பாக்கம் காவலர் குடியிருப்பு இடத்திலும், மேன்சன் சைட் என்னும் காவலர் குடியிருப்பு இடத்திலும் சிறப்பாக நடைபெறுகின்றன.

இன்னும் கிளை நூலகங்கள் திறப்பதற்கும் வாய்ப்பில்லாத பகுதிகள் சென்னையில் ஏராளமாக உள்ளன. அந்தப் பகுதிகளில் வாழ்வோர் நூல்களைப் படிக்கவும், பொது அறிவைப்

பெற்று வளர்த்துக் கொள்ளவும் ஏழத்தாழ 1 இலட்சம் ரூபாய் செலவில் 'இயங்கும் நூலகம்' ஒன்றை மாண்புமிகு அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் 1968-ல் ஆரம்பித்து வைத்தார்கள். அது, நகரத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று நூல் வழங்கி வருகிறது. இத்திட்டம் மிகவும் நல்ல முறையில் பயன்பட்டு வருகிறது. இதனை மேலும் விரிவு படுத்தத் தக்க வகையில் இன்னொரு இயங்கும் நூலகமும் (Mobile Library) விரைவில் இயங்க விருக்கிறது.

அடுத்து, குடிசை மாற்று வாரியத் திட்டத்தின் கீழ் அமைக்கப்படுகிற புதிய குடியிருப்புப் பகுதிகளில் குடியேறுகிறவர்களுக்குப் புத்தகங்கள் படிக்கும் வாய்ப்பை உருவாக்கி அறிவு வளர்ச்சிப் பணி புரிவதற்காக,

கடந்த ஐந்தாண்டுகளில் சென்னை நகர மத்திய நூலகத்தில் 25 இலட்சம் என்றிருந்த வருகையாளர் எண்ணிக்கை 40 இலட்சமாகவும், 80 இலட்சமாக இருந்த நூல்களைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை 93 இலட்சமாகவும், 8,470ஆக இருந்த உறுப்பினர் தொகை 31,603 ஆகவும் புத்தக இருப்பு 5·5 இலட்சமாகவும் வளர்ந்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

மாவட்ட மத்திய நூலகம், எதிர்காலத்தில் எந்தெந்த வகையில் வளர்ச்சி பெற இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும் போது, நமது உள்ளம் பெரும் பூரிப்படைகிறது. இனி எதிர்காலத் திட்டம் என்ன?

மாவட்ட மத்திய நூலகத்தில் உள்ள சான்றுதாரப் பிரிவு


சிறுவர் பகுதியில்

**புதிய சித்திரத் தொடர்கதை**

**சுற்றுலா சுந்தரம்**

**ஏப்ரல் 1உ 'தமிழரசு' இதழில்**

துவக்கம் ஆகிறது.


1. நொச்சி நகர்
2. கோட்டூர்புரம்
3. வெங்கடாபுரம்
4. விசாலாட்சி எஸ்டேட்
5. தாண்டவராயன் சத்திரம்
6. கல்லறைச் சாலை

ஆகிய குடியிருப்புகளில் தற்போது நூலகக் கிளைகள் துவக்கப்பட்டு, அவையும் நல்ல முறையில் பயன்பட்டு வருகின்றன.

சொத்து வரியின் மீது ரூபாய்க்கு 3 காசாக விதிக்கப்பட்ட நூலக வரி 1—4—72-ல் ரூபாய்க்கு 5 காசாக உயர்த்தப்பட்டது. இவ்வாறு உயர்த்தப்பட்டதன் விளைவாகத் தமிழகத்தில்வளர்ச்சியின்றித் தேங்கிக் கிடந்த பல நூலகங்கள் நல்ல வாழ்வும் வளர்ச்சியும் பெற்றுள்ளன.

(Reference Section) தனியொரு இடத்தில் மாநிலத்திற்கே முன் மாதிரியாக அமையத் தக்க வகையில் விரிவுபடுத்தப்பட இருக்கிறது.

வாசகர்கள், அச்சிடப்பட்டவற்றில் தங்கட்குத் தேவையான செய்திகள் முதலியவற்றைப் படப் படிவமாக (Photo state copying) எடுத்துக் கொள்வதற்கு வசதியாக இருக்கும் பொருட்டு, ஒரு பானு அச்சுப் படப்பிரதி எடுக்கும் இயந்திரம் (Pana print photo copy Machine) இங்கு நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

வாசகர்கள் தங்கட்குத் தேவையான நூல்களைப் பெறத் தேடிச் சிரமப்படாமல் விரைவாகவும், எளிதாகவும் எடுத்துக் கொள்ள வசதியாக எலக்ட்ரானிக் முறை வசதி இங்கு செய்யப்பட இருக்கிறது. இது எந்தப் பொது நூலகத்திலும் இல்லாத புதுமுறை என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போதுள்ள குழந்தைகள் நூலகப் பிரிவு மேலும் விரிவுபடுத்தப்பட்டுக் குழந்தைகளை மேலும் ஈர்க்கத் தக்க வகையில் அவர்களுக்குத் தேவையான பல்வேறு விளையாட்டுப் பொருள்களோடு கூடிய 'தனிப்பிரிவு' ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மனநோய் மருத்துவ மனை உள்ளிட்ட அரசாங்க மருத்துவ மனைகள்எல்லாவற்றிலும் அங்குத் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளிகள் பயன்பெறத்தக்க வகையில் செய்தித் தாள்கள், நூல்கள் அடங்கிய நூலகப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட இருக்கிறது.

திருவள்ளுவர், பாரதியார், அண்ணா ஆகியோரைப் பற்றி ஆராய்ச்சிப் பணிக்குப் பயன்படத்தக்க வகையில், தனிப் பிரிவு ஒன்று மாவட்ட மத்திய நூலக வட்டத்தில் நிறுவப்பட இருக்கிறது. இங்கு, ஆராய்ச்சிக்குரியவர்கள் எழுதியவையும், அவர்களைப் பற்றி எழுதப் பெற்றவையும் தொகுத்து வைக்கப்படும்.

சென்னை நகரிலுள்ள ஒவ்வொரு சட்ட மன்றத் தொகுதியிலும் ஒருவட்டார நூலகம் தொடங்கவும், தொழிற்சாலைப் பகுதிகள் எல்லாவற்றிலும் தொழிலாளர் நலனுக்காக—அவர்கள் பயன் பெறத் தக்க வகையில் கிளை நூலகங்கள் திறக்கவும் திட்டமிடப்பட்டுள்ளன.

இவற்றிற்கெல்லாம் மேலாக, மாவட்ட மத்திய நூலகக் கட்டட வட்டத்துக்குள்ளேயே ஒரு நல்ல கலையரங்கம் கட்டத் திட்டமிட்டுப் பணி நிறைவுறும் நிலையில் உள்ளது. இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் அது திறக்கப் பெறலாம். சமுதாயப் பண்பாட்டுக் கல்விவளர்ச்சிப் பணியினுக்கு இந்தக் கலையரங்கம் பெருந் துணையாக அமையும்.

இந்த எதிர்காலத் திட்டங்களை இனிதே நிறைவேற்றித் தமிழகத்திற்கு உலகப் புகழைச் சேர்த்துத் தரும் ஒரு மாபெரும் அறிவாலயமாக இச் சென்னை மாவட்ட மத்திய நூலகம் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

—சாமி பழ.

"எண்பத்து ஐந்து நாளில் எண்ணூற்று ஐம்பது ரூபாய் இலாபம் கிடைத்துள்ளது! கம்பு விற்ற பணம் இந்தாங்க அப்பா!'' என்று கூறித் தன் கையில் இருந்த பத்துரூபாய் நோட்டுகளை உடல் நலமின்றி மூன்று மாத காலமாகப் படுத்த படுக்கையாக இருந்து வரும் தன் தந்தையிடம் கொடுத்தான் தங்கம்.

''ஏலே, தங்கம்! என்னடா உளர்றே? நான் ஏழை தாண்டா! படிக்காதவன் தாண்டா! ஆனால், எண்ணூத்தைம்பது ரூபான்னு சொன்னா வாயைப் பிளந்துடவேன்னு நினைச்சியா?'' என்று தங்கத்தின் அப்பா கோபமாகக் கேட்டார்.

'' தவறாக நினைக்காதீர்கள் அப்பா! உண்மையைத்தான் சொன்னேன்.''

''ஒரு ஏக்கர் கம்பு விற்று எண்ணூத்தைம்பது ரூபாயா கெடச்சுது? ஆச்சரியமாக இருக்கிறதே!''

''எண்ணூற்று ஐம்பது ரூபாய்க்கு விற்கவில்லை அப்பா! ஒரு ஏக்கரில் விளைந்த கம்பு 1,200 ரூபாய்க்கு விற்றது. நாம் அதற்கு ரூ. 350 செலவு செய்துள்ளோம். செலவு போக நிகரஇலாபம்எண்ணூற்று ஐம்பது கிடைத்துள்ளது என்றல்லவா சொன்னேன்!''

''அப்படியா சேதி!'' என்று கூறிக் கொண்டே கட்டிலில் படுத்து இருந்த தங்கத்தின் அப்பா வேகமாக எழுந்து உட்கார்ந்து பத்து ரூபாய் நோட்டுக் கத்தையை வாங்கிக் கண்ணில் ஒற்றிக் கொண்டு எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் கண்களில் கண்ணீர் கரைபுரண்டு ஓடியது.

''ஏனப்பா அழுகின்றீர்கள்?''

''நான் அழவில்லையடா? இது ஆனந்தக் கண்ணீர்!'' என்று கூறிவிட்டு எழுந்து வேகமாக வீட்டை விட்டுப் புறப்பட்டார்.

'' எங்கே அப்பா புறப்பட்டீர்கள்?''



# கடன் தீர்த்த கம்பு

''எங்கே என்று கேட்கிறாய்? 'சூடு சொரணை இருந்தால் 3 மாதத்தில் என் கடனைத் திருப்பிக் கொடுத்துவிடு, இல்லாவிட்டால் வீட்டை ஜப்தி செய்வேன்'' என்று பண்ணையார் சொன்னாரே! 3 மாதக்கெடு நாளையோடு முடிகிறது. இன்றே கொடுத்து விட்டு வந்துடுறேன்''.

'' உங்களால்தான் நடக்க முடியாதே! நான் கொண்டு போய்க் கொடுத்து விடுகிறேன் அப்பா!''

'' வேண்டாம்! 3 மாதத்தில் எப்படிக் கடனை அடைக்கப் போகிறோம் என்று எண்ணி, மானம் போய்விடுமே என்று பயந்தேன். எனக்கு இரத்தக் கொதிப்பு ஏற்பட்டு மயங்கி விழுந்து படுத்த படுக்கையாகி விட்டேன். பணம் கிடைத்து விட்டதால், இனி என் மானம் போகாது என்று நினைச்சவுடனேயே, என்னைப் பிடிச்ச வியாதி ஓடி விட்டது!'' என்று கூறிக் கொண்டே போய் விட்டார். அவர் ஆர்வத்தைக் கெடுக்க விரும்பாமல் தங்கமும் பேசாமல் இருந்து விட்டான்.

பண்ணையார் வீட்டை அடைந்தவுடன் '' பண்ணையாரே என் பத்திரத்தை எடுத்து வாங்க! பணம் கொண்டாந்துள்ளேன்!'' என்று அதிகாரத் தோரணையில் தங்கத்தின் அப்பா குறிப்பிட்டார்.

தங்கவேலு கோபக்காரர் என்பதை அறிந்திருந்த பண்ணையார் வேறு ஒன்றும் பேசாமல், பத்திரத்தை எடுத்து வந்தார்.

''அசலும் வட்டியும் எவ்வளவு என்று சொல்லுங்கள்.''

'' அசல் ஐந்நூறு, ஒரு வருடத்திற்கு வட்டி அறுபது ஆக மொத்தம் ஐந்நூற்று அறுபது ரூபாய்.''

''இந்தாங்க ஐநூற்று அறுபது ரூபாய் என் பத்திரத்தை என்னிடம் கொடுங்க.''

பணத்தைப் பெற்றுக் கொண்டு, பண்ணையார் பத்திரத்தைக் கொடுத்தார். பத்திரத்தைப் பெற்றுக் கொண்ட தங்கவேல் அதைக் கிழித்துப் பண்ணையார் முன்னால் போட்டு விட்டு '' வர்றேன் '' என்று கூறிப் புறப்பட்டார்.

''தங்கவேலு உனக்குத்தான் உடம்பு சரியில்லையே! பணம் ஏது?'' என்றார் பண்ணையார்.

அதைக் கேட்டு கோபத்துடன் திரும்பிய தங்கவேலு, ''இம் ! பணம் ஏதுன்னு கேக்குறிங்க ! திருடியாந்தேன் ! உங்களுக்கென்ன ? உங்க கடன் தீந்துப் போச்சுலே ! அப்புறம் என்ன பேச்சு வேண்டி இருக்கு?''

''கோவிச்சுக்காதே தங்கவேலு ! உன் நன்மைக்காகத் தான் 'சூடுசொரணை இருந்தால், 3 மாதத்தில் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடு, இல்லேன்னு வீட்டை ஜப்தி பண்ணிடுவேன்' என்று கூறினேன். அப்படிக் கூறவில்லையானால் உன் மகனுக்கு ரோஷம் பொறந்திருக்காது. அவன் ஒழுங்கா பொழப்பைப் பார்த்திருக்க மாட்டான். அவன் என்னமோ புதுக்கம்பு பயிரிட்டு நல்ல மகசூல் எடுத்ததாகக் கேள்விப் பட்டேன். அதில் எவ்வளவு கிடைச்சது என்று தெரிந்து கொள்ளத்தான் கேட்டேன். ஆனால், என்வார்த்தையால் நீ இப்படி உடல் நலம் இழப்பாய் என்று தெரிந்திருந்தால் நான் அன்று அப்படிச் சொல்லி இருக்க மாட்டேன். என்னை மன்னித்துக் கொள் தங்கவேலு ! 'மன்னித்து விட்டேன்' என்று சொல் தங்கவேலு! அப்பத் தான் என் மனம் திருப்தி அடையும்'' என்றார் பண்ணையார்.

இந்த வார்தையைக் கேட்டவுடன் மகுடி ஓசைக் கேட்ட பாம்பு போல், தங்கவேலு ஆடாமல் அசையாமல் நின்று விட்டார். பண்ணையார் சொல்வது உண்மைதான் என்று உணர்ந்ததால், அவருடைய சினம் தணிந்தது.

'' நீங்க பணக்காரர் !பெரிய மனிதர் ! நான் பரம ஏழை ! நான் வந்து மன்னிப்பதாவது ?''

''நம்ம ரெண்டு பேருக்கும் ஒரே வயதுதானே ! அதனாலே நீ என்னை மன்னிப்பதில் தவறு இல்லை !''

''சரிங்க ! எப்படியோ என் கடனும் அடைந்தது. என் பிள்ளையும் திருந்தினான் ! நான் வர்றேனுங்க'' என்று கூறிப்புறப் பட்டார்.



''உடம்பைப் பார்த்துக் கொள்! சாப்பிட்டு விட்டுப் போ தங்கவேலு ''.

''ஆயிரத்து இருநூறு ரூபாயை என் பிள்ளை கொண்டு வந்து கொடுத்ததுமே என் உடம்பு குணம் ஆயிட்டுதுங்க !''

''அப்படியா ! மிகவும் மகிழ்ச்சி. இருந்தாலும் என் வார்த்தை உன்னை ரொம்பவும் புண்படுத்தி விட்டது என்பதை நினைக்கும் போது தான், எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. உன் பையனைக் கொஞ்சம் வரச் சொல்லேன். அவனிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளணும். அப்படியே அந்தக் கம்பு சாகுபடியைப் பற்றியும் தெரிந்து கொள்ளணும் என்று ஆசைப் படுகிறேன்.''

''அவனிடமும் மன்னிப்புக் கேட்கப் போகிறீர்களா ?''

''ஆமாம் !''

''எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது !''

'' ஏன் ?''

'' ஏதேனும் காரியம் ஆகணும்னு, பணக்காரர்கள் சின்னப் பையன்களிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொள்வார்கள் என்றும், 'பணக்காரர்கள் கெஞ்சினால் மிஞ்சுவார்கள் ; மிஞ்சினால் கெஞ்சுவார்கள் ' என்றும் சிலர் சொல்வது நினைப்புக்கு வருகிறது. அது உங்களைப்பொறுத்த வரையில் உண்மையாக இருக்கிறது. அதை நினைக்கையில் சிரிப்பு வருகிறது !''

''அப்படி என்னை நினைக்காதே! உன் மகன் யார் ? என் தங்கச்சி பிள்ளைதானே ! என் வருங்கால மாப்பிள்ளைதானே ! அவன் நல்ல குணத்தோடும், புத்தி சாலித்தனத்தோடும் இருக்கணும் என்பதில் உன்னைவிட எனக்கல்லவா மிகுந்த அக்கறை உள்ளது. நீதான் குடித்தே சொத்தையெல்லாம் இழந்து விட்டாய். எஸ்.எஸ்.எல். சி· படித்த உன் பிள்ளையாவது உருப்படட்டும் என்று எண்ணித்தான் அவனுக்குக் கோபம் வரும்படியா உன்னைத் திட்டினேன். அவனும் திருந்தி, நல்லபடியா இருக்கான் என்று ஊரில் பலர் சொல்கின்றார்கள். அதைக் கேட்கும் போது அது உண்மையாக இருக்கணும்' அவனுக்கே என் பெண்ணைத் திருமணம் செய்து வைத்து விட்டு நான் நிம்மதியாக இருக்கணும் என்று ஆசைப்படுகின்றேன். எதிர்காலத்தில் என் சொத்துக்கு அவன்தானே சொந்தக்காரனாகப் போகிறான். அவனிடம் நான் மன்னிப்புக் கேட்பது தப்பா ?''



'' நான் போய் நடந்ததைச் சொல்லி வரச் சொல்றேன். அவன் வந்தால் பாருங்கள் ! இல்லாவிட்டால் நீங்களே வந்து கேட்டுக் கொள்ளுங்கள். நீங்களாச்சு ! உங்க மருமகனாச்சு ! பார்த்துக் கொள்ளுங்கள். எப்படியோ போங்கள் !'' என்று கூறிவிட்டுத் தங்கவேலு வெற்றிப் புன்னகையுடன் விடைபெற்றுக் கொண்டார்.

தங்கவேலு நடந்தவைகளை எல்லாம் தன் மகன் தங்கத்திடம் கூறினார். தங்கத்தின் மனம் பண்ணையார் கூறிய நொண்டிச் சமாதானங்களை ஏற்க மறுத்தது. ஆயினும், '' நாடு செழிக்க உனக்குத் தெரிந்த முற்போக்குச் சாகுபடி முறைகளை மற்றவர்களுக்கும் கூற வேண்டும் '' என்று வேளாண்மை வளர்ச்சி அலுவலர் அவனுக்குக் கூறியிருந்தது நினைவு வரவே, ''எச்.பி. வீரியக் கம்பு சாகுபடி முறையை அவருக்குத் தெரிவித்து விட்டு வந்து விடுகின்றேன் '' என்று கூறிப் புறப்பட்டான்.

அவனுடைய தாய் இந்தக் கம்பினாலே பிரிந்த தங்கள் குடும்பம் ஒன்றுபடுகிறதே என்று மகிழ்ந்ததுடன், இதற்கு மூல காரணமாக இருக்கும் வேளாண்மை வளர்ச்சி அலுவலரை மனமார வாழ்த்திக் கொண்டிருந்தாள்.

தங்கம் வருவதைக் கண்டவுடன், பண்ணையார் வியப்புடன் சாய்வு நாற்காலியை விட்டு எழுந்து ''வா மாப்பிள்ளே !'' என்று வரவேற்றார்.



''கம்பு சாகுபடிபற்றி விவரம் கேட்கணும் என்று சொல்லி என்னை வரச் சொன்னீர் களாமே! கேளுங்கள்! சொல் கின்றேன்'' என்றான்.

''உட்காரப்பா'' என்று சோபாவைக் காட்டினார்.

''பரவாயில்லை'' என்று கூறி விட்டு அவருக்கு அருகில் தரையில் உட்கார்ந்தான் தங்கம்.

பண்ணையார் வற்புறுத்தவே தங்கம் சோபாவில் அமர்ந்தான்.

அதைக் கண்டதும் பண்ணையாருக்குப் பரமதிருப்தி. தன்னைக் கண்ட பிறகும் மதிக்காமல் பீடி குடித்துக் கொண்டும், சீட்டாடிக் கொண்டும் இருந்தவனா இன்று இப்படி மாறி விட்டான் என்று வியப்படைந்தார்.

''என்ன மாப்பிள்ளே! ஏதோ புதுசா கம்பு வாங்கி வந்து பயிரிட்டாயாமே! ஊரே உன்னைப் பற்றிப் பேசுது! என்ன கம்பு அது? எவ்வளவு மகசூல் கண்டது? என்ன விலைக்கு விற்றே? அதைப்பற்றிக்கொஞ்சம் சொல்லேன்''.

''ஆமாங்க! எச்.பி. 1. கம்பு என்ற புதிய வீரிய ஒட்டுக் கம்பு விதை ஒரு கிலோவை நம்ம வேளாண்மை வளர்ச்சி அலுவலர் கொடுத்தார். அதை 4 சென்ட் நிலத்திலே நாற்று விட்டு ஒரு ஏக்கரில் நட்டேன் எண்பத்து ஐந்து நாளில் ஏக்கருக்கு 2,250 கிலோ அதாவது 30 மூட்டை கம்பு விளைந்தது. அதிலே 250 கிலோவைச் சாப்பாட்டிற்கு வைத்துக் கொண்டு, மீதியிருந்த 2,000 கிலோவை குவிண்டால் ரூபாய் 60 வீதம் விற்று விட்டேன். அதனால் எங்களுக்கு ரூபாய் 1,200 கிடைத்தது. ஒரு ஏக்கர் கம்பு சாகுபடி செய்ய ரூபாய் 350 செலவாகியது. நிகர இலாபம் ஏக்கருக்கு 850 ரூபாய் கிடைத்தது''.

''எண்பத்து ஐந்து நாளில் ஒரு ஏக்கரில் 850 ரூபாய் நிகர இலாபம் எடுத்துள்ளாயே! பரவாயில்லையே! ரொம்பக் கெட்டிக்காரன்தான்! அது சரி இதைப் பயிரிடணும் என்ற எண்ணம் எப்படி வந்தது?''

''நீங்கள் அப்பாவைத் திட்டியதனால் அப்பாவுக்கு இரத்தக் கொதிப்பு ஏற்பட்டு மயங்கி விழுந்து விட்டார் என்று கேள்விப்பட்டவுடன், உங்கள் கடனை எப்படியாவது அடைப்பது என்ற முடிவுடன், ஏதேனும் வேலை தேட முயற்சிக்கலாம் என்று எண்ணி யோசனைகேட்க நம்ம ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குச் சென்றேன். அங்கே ''காசு பணம் சேர்த்திடக் கம்பு பயிரிடுவீர்!'' என்ற ஒரு விளம்பரச் சுவரொட்டியை நான் கண்டேன். அது பற்றிய விவரத்தை நமது வேளாண்மை வளர்ச்சி அலுவலரிடம் கேட்டேன். பிறகு அப்பாவின் நிலைமையையும் அவரிடம் விளக்கினேன். என்மேல் இரக்கப்பட்டு அவர் எச்.பி. 1. கம்பு பற்றிய முழு விவரமும் கூறிவிட்டு, நமது கூட்டுறவு வளர்ச்சி அலுவலரிடம் அழைத்துச் சென்று விவரம் கூறி எனக்குக் கம்பு சாகுபடி செய்யக் கடன் கொடுத்து உதவும்படி கேட்டுக் கொண்டார். அவரும் மனமுவந்து என்னைக் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக ஆக்கிக் கடன்கொடுக்க ஆவன செய்தார். பிறகு எனக்குக் கடன் கிடைத்தது. விதை, உரம், மருந்து எல்லாம் கொடுத்தார்கள். அது தவிர நானும் கொஞ்சம் கடன் வாங்கிக் கம்பு பயிரிட்டேன். மொத்தம் ரூபாய் 350 செலவாகியது, நாளைக்குப் போய்க் கூட்டுறவுச் சங்கக் கடனையும், மற்றக் கடன்களையும் தீர்த்துவிடப் போகிறேன்.''

''எச். பி. கம்பு சாகுபடி பற்றிக் கொஞ்சம் தெரிவித்தால் நானும் அதைப் போல் சாகுபடி செய்யலாம் என்று எண்ணுகிறேன். அது பற்றிக் கொஞ்சம் சொல்லு மாப்பிள்ளே!''

''எச்.பி. 1, எச்.பி. 3., எச்.பி. 4 என மூன்று வகை ஒட்டுவீரிய கம்பு ரகங்களையும், இறைவையில் பயிரிடலாம். இவைகளை ஐப்பசி, மார்கழி ஆகிய மாதங்கள் நீங்கலாக, மற்றெல்லா மாதங்களிலும் சாகுபடி செய்யலாம். ஆனால், விளைச்சல் அதிகமாக இருக்காது. இந்த ரகங்களை மாசி, பங்குனி, மாதங்களில் விதைத்தால் அதிக மகசூல் எடுக்க முடியும். இந்த ரகங்கள் 80 முதல் 85 நாட்களில் அறுவடைக்கு வந்துவிடும்''.

''நாற்று விட்டுத்தான் நட வேண்டுமா?''

''ஆமாங்க, ஒரு ஏக்கர் கம்பு சாகுபடி செய்ய 1 கிலோ விதையை 4 சென்ட் நிலத்தில் நாற்று விட வேண்டும். 4 சென்ட் நிலத்திற்கு ஒரு வண்டி தொழு எரு போட்டு நன்கு உழுது பாத்திகளாகப் பிரித்துக் கொள்ள வேண்டும். பாத்திகளை 3 அல்லது 4 அங்குல மேடைப் பாத்திகளாக அமைத்துக் கொள்ள வேண்டும். வேளாண்மைத் துறையினர் வழங்கும் சான்றிதழ் பெற்ற தரமான விதைகளைப் பாத்திகளில், 4 அங்குல இடைவெளியில் வரிசை வரிசையாக விதைத்து மண்ணால் மூடி, தண்ணீர் பாய்ச்ச வேண்டும். விதைத்த 3-ஆம் நாள் முளை நீர் பாய்ச்ச வேண்டும். பிறகு 5 அல்லது 6 நாள் இடைவெளியில் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்''.

''சரி நாற்று விட்டாச்சு! நடவு வயல் தயாரிப்பது எப்படி?''

''ஏக்கருக்கு 20 வண்டி தொழு எரு விட்டு, நடவு வயலை இரும்புக் கலப்பையால் நன்கு உழ வேண்டும். பிறகு வயலில் ஒன்றரை அடி இடைவெளிகளில் பார்கள் அமைத்துக் கொள்ள வேண்டும். அல்லது 20 அடி நீளமும், 9 அடி அகலமும் உள்ள பாத்திகளாக அமைத்துக் கொள்ள வேண்டும். ஏக்கருக்கு 18 கிலோ தழைச் சத்து, 14 கிலோ மணிச்சத்து, 9 கிலோ சாம்பல் சத்துக் கொடுக்க 90 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 40 கிலோ யூரியா, 90 கிலோ சூப்பர் பாஸ்பேட், 15 கிலோ மூரியேட்ஆப் பொட்டாஷ் ஆகிய உரங்களை அடியுரமாக இட வேண்டும். அடியுரமிடப் பார்களில் ஒரு பக்கச் சரிவின் அடியில் கூரிய குச்சியால் கோடு கிழித்துக் கொண்டு, அதில் உரங்களை இட்டு மண்ணால் மூடிவிட வேண்டும். பாத்திகளில் நடுவதாக இருந்தால் உரங்களைக் கடைசி உழவில் அடியுரமாக இட்டு, பிறகு பாத்திகள் அமைத்துக் கொள்வது சிறந்தது.''

'' எப்படி நடவு செய்வது?''

''நாற்று விட்ட 18-ஆம் நாள் நாற்றுகளைப் பிடுங்க வேண்டும். நடவு வயலுக்குத் தண்ணீர் விட்டு, பார்களின் சரிவில் உரமிட்ட வரிசைக்கு 3 அங்குலம் மேலே தள்ளி, 6 அங்குல இடைவெளிக்கு ஒரு பயிர் வீதம் வரிசையாக நடவு செய்ய வேண்டும். பாத்திகளில் 1½ அடி இடைவெளியில் வரிசை வரிசையாகவும், வரிசையில் பயிருக்குப் பயிர் 6 அங்குல இடைவெளி விட்டும் நடவு செய்ய வேண்டும். நடவு செய்த 3-ஆம் நாள் உயிர்த் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பிறகு 7 முதல் 10 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் கட்டவும், தூர்கள் கிளைக்கும் காலத்திலும், கதிர்களில் உள்ள தானிய மணிகளில் பால் பிடிக்கும் சமயத்திலும் தட்டுப்பாடின்றித் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். நிலத்தைக் காய விடக் கூடாது.''

'' களை எடுப்பது, மருந்து தெளிப்பது பற்றியும் சொல்லி விடு மாப்பிள்ளை!''

'' நடவு செய்த 20-ஆம் நாள் களையைக் கொத்திவிட்டு, 200 மில்லி லிட்டர் என்ட்ரின் அல்லது 200 கிராம் செவின் (கார்பரில் 50 சதம்) மருந்தை 100 லிட்டர்தண்ணீரில் கலந்து தெளிப்பான் மூலம் தெளிக்கவும். நடவு செய்த 25-ஆம் நாள் ஏக்ருக்கு 10 கிலோ தழைச்சத்து அளிக்க 50 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 25 கிலோ யூரியாவைப் பார் வரிசைகளுக்கு நடுவில் மேலுரமாக, இட்டு, இலேசாகக் கொத்திவிட்டு, உடனே தண்ணீர் பாய்ச்சவும். நடவு செய்த 35-ஆம் நாள் 400கிராம் செவின் அல்லது என்ட்ரின் 200 மில்லி லிட்டரை 200 மில்லி லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். நடவு செய்த 40 முதல் 42 நாட்களில் அதாவது கதிரில் பாலேறும் சமயத்தில் ஏக்கருக்கு 5 கிலோ பி.எச்.சி. 10 சதத் தூளையும், 5 கிலோ டி.டி.டி. 5 சதத் தூளையும் கலந்து கதிர்களில் தூவவும். இதனால் கதிர் நாவாய்ப் பூச்சி, கதிர்ப் புழு, மிட்ஜ் ஈ ஆகிய பூச்சிகளினால் ஏற்படும் சேதம் தவிர்க்கப்படும். நடவு செய்த 62 முதல் 67 நாட்களுக்குள் ஒரே சமயத்தில் எல்லாக் கதிர்களும் அறுவடைக்குத் தயாராகி விடும். வேளாண்மைத் துறையினர் பரிந்துரைக்கும் சாகுபடி முறைகளை எல்லாம் மேற்கொண்டு, சிலர், ஏக்கருக்கு 3,000 கிலோ வரை மகசூல் எடுத்துள்ளனர். நானும் அதே போல் வருகிறமாசி-பங்குனிப் பருவத்தில் ஏக்கரில் எச்.பி. கம்பு 2 பயிரிட்டுப் பெரும் மகசூல் எடுக்க முடிவு செய்துள்ளேன்.''

'' அப்படியா! நானும் ஒரு 5 ஏக்கர் எச். பி. கம்பு சாகுபடி செய்கிறேன்; நீதான் அடிக்கடி விவரம் கூறி உதவ வேண்டும்.''

''சரி, நான் புறப்படுகிறேன்.''

'' என்னங்க ஒரேயடியா பேசிட்டே இருந்துவிட்டு தம்பியைச் சும்மா அனுப்பி வைக்கிறீங்க! சாப்பிட்டுவிட்டுப் போகச் சொல்லுங்க!'' என்று குரல் கேட்டுத் தங்கம் நிமிர்ந்து பார்த்தான். தங்கத்தின் வருங்கால மாமியார் நின்றுகொண்டிடிருந்தார். அவருக்குப் பின்னால் தங்கத்தின் வருங்கால மனைவி பொன்னி மறைவில் நின்று பார்த்துக்கொண்டிருந்தாள். தங்கம்-பொன்னி ஆகிய இருவரின் கண்களும் ஒன்றையொன்று நோக்கின. அந்த ஒரு நொடியில் அவன் உள்ளம் எங்கோ ஓர் இன்ப உலகில் சிறகடித்துப் பறந்தது. ஆனால், அதை மறக்க, அங்கிருந்து விடுவிடென்று நடந்தான் தங்கம். அவன் மனம் '' பணத்திற்கு அடிமையாகிவிடாதே! பணக்காரன் ஆன பிறகு திருமணம் செய்து கொள். அதுதான் உனக்கு மதிப்பு!'' என்று அவனுக்கு அறிவுரை கூறியது.

'' ஏழையைப் பணக்காரனாக்கும் எச்.பி. கம்பு ரகம் பிரிந்த எங்கள் குடும்பம் ஒன்றுபட உறுதுணையாக இருந்ததால், அதை உருவாக்கியவர்களும், அதைப் பயிரிடத் தூண்டிய வேளாண்மை வளர்ச்சி அலுவலரும் வாழ்க'' என அவன் மனம் உள்ளூர வாழ்த்திக்கொண்டிருந்தது.

—ஆர். எம்.

---

## வெண்பாப் போட்டி-54

ஈற்றடி : புகழன்றி உண்டோ பொருள்?

முடிவு நாள் : 15—3—1973

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி :—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி)
''தமிழரசு'' அலுவலகம்,
சென்னை-2.

குறிப்பு :
அஞ்சல் அட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக் கொள்ளப்படும்.



# வெண்பாப் போட்டி

## 51. கண்ணின் மணியனையான் காண்

பார்போற்றும் கல்விதனில் பட்டங்கள் பெற்றாலும்
சீர்போற்றும் நற்பணியே தேடாமல்—ஏர்போற்றி
மண்ணில் மணிநெல்லைக் காணும் இளைஞன்தான்
கண்ணின் மணியனையான் காண்.

—புலவர் இரா. வரதராசன், திருவானைக்கா.

அன்புடையாள் கைகா லழுகித் தொழுநோயால்
துன்புற்ற போதும் துணையிருந்து—தன்வாழ்வில்
கண்போன் றிருந்தவளின், கண்ணீர் துடைப்பவனே
கண்ணின் மணியனையான் காண்.

—புலவர் இரா. சுப்பிரமணியன், காஞ்சி.

தென்னாட்டுக் காந்தியவன், தேன்தமிழின் நாதமவன்
இந்நாட்டார் நெஞ்சத் திருந்திடுவான்—மண்ணாண்ட
அண்ணா, மணிமொழிகள் அத்தனையும் போற்றிடுவோன்
கண்ணின் மணியனையான் காண்.

—சுசீலா கிருட்டிணமூர்த்தி, தேவிகாபுரம்.

நெஞ்சில் உதைத்தான் ; நிமிர்ந்த முகத்துமிழ்ந்தான் ;
அஞ்சாது கன்னத் தறைந்திட்டான் ;—கொஞ்சுநகைப்
பண்ணால் மகிழ்வித்தான் ; பாலறா வாய்ச்சேய்,எம்
கண்ணின் மணியனையான் காண்.

—புலவர் கோம்பைச்சீரான், கோம்பை.

கேட்போர் வியந்தனரே கேளாரும் ஏங்கினரே
வாட்போரைச் சொற்போர்தான் வென்றிடுமே—மீட்போனாய்
மண்ணின் அணைப்பில் மகிழ்ந்துறங்கும் அண்ணனே
கண்ணின் மணியனையான் காண்.

—சைதை சுந்தரமூர்த்தி, பொன்மலை.

தண்டா மரைபாடத் தள்ளாடி வண்டலர
விண்டாழ மண்ணுயர வீழ்படு—மண்டலத்தில்
நண்ணலரைப் போர்க்களத்தில் நாணிடச் செய்தவனே
கண்ணின் மணியனையான் காண்.

—புலவர் இர. கி. பூபதி, கொங்கணாபுரம்.

சொன்னயத்தால் மக்களைச் சொக்கவே செய்திட்ட
தென்னாட்டுக் காந்தியென்ற தீரனும்—மன்னியசீர்
அண்ணாத் துரையென்ற அற்புதப்பேர் பூண்டோனே
கண்ணின் மணியனையான் காண்.

—வெற்றிவேல் வேங்கடேசன், சேலம்-9.

ஏச்சுக்கும் பேச்சுக்கும் எள்ளளவு மஞ்சாது
மூச்சுள்ள காலமெலாம் மூடரின்—தீச்செயலை
நண்ணாம லோட்டியிந் நானிலங் காத்திடுவான்
கண்ணின் மணியனையான் காண்.

—புலவர் சு. முத்துக்கருப்பன், பேரையூர்.

ஈர்த்தலிலே காந்தத்திற் கீடாவான் என்றென்றும்
கூர்த்தமெய்ஞ் ஞானத்தின் கோனாவான்—காத்தலிலே
கண்ணின் இமையனையான் கண்ணோட்டம் கொள்வதிலே
கண்ணின் மணியனையான் காண்.

—கதிரவன், பிரம்மபுரம்.

---

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :—
புலவர் இரா. வரதராசன், தமிழாசிரியர்,
உயர்நிலைப்பள்ளி, திருவானைக்கா, திருச்சி–5.

# வெண்பாப் போட்டி

தத்தி நடந்து, தமிழ்மொழிந்து, தன்னழகால்
எத்துங் கவலை இலாதொழித்து—முத்துநிகர்
வெண்ணகையைக் காட்டும், மிளிர்புதல்வன் தன்தாய்க்குக்
கண்ணின் மணியனையான் காண்.

—சி. சரசுவதி, தேனி.

நெஞ்சில் கனவும், நினைவெல்லாம் காதலுமாய்
வஞ்சிமகள் நாளும் வளர்கின்றாள்—கொஞ்சுமொழிப்
பெண்ணின் மனக்கோட்டை பேணவரும் ஆண்மகனே
கண்ணின் மணியனையான் காண்.

—புலவர் சு. இராமானுசன், ஆ. தெற்கூர்.

'தமிழரசை'க் கையில் தவழவிட்ட நானே
இமையாமல் நின்றிருந்தேன் ஏன்காண்—சமைக்கின்ற
வெண்பாச் சமரிடை வென்ற மதலைஎன்
கண்ணின் மணியனையான் காண்.

—ம. திருமலைச்சாமி, பூலாம்பட்டி.

வெண்நகையால் முத்த,மிழைத் தேன்என்றான் ஊடிட்டேன்
ஒண்கண்ணால் முத்தமிழைத் தேனென்றான்—மண்டியிட்டேன்
விண்ணோர் புகழமுதே என்றான்நீ தோவென்றேன்
கண்ணின் மணியனையான் காண்.

—பா. சிவஞானம், வில்வாரணி.

எல்லையிலே ஈனப் பகையழித்துக் காப்பவனும்
சொல்லைச் செயலாக்கி ஆள்பவனும்—தொல்லையிடை
மண்ணை யுழுதுவள மாக்குமுயர் மண்மகனும்
கண்ணின் மணியனையான் காண்.

—கே. எஸ். பைரோசா, கம்பம்.

பெற்றார் மறுத்தார் ; பிறபேர் வெறுத்தார்கள் ;
உற்றார் செறுத்தார் ; உளம்நொந்தேன்! —சற்றேனும்
கண்டாரில் தாழ்வுயர்வு ; கைப்பிடித்தார் ; என்கொழுநன்
கண்ணின் மணியனையான் காண்.

—ஜெ. மலர்விழி, செந்துறை.

சாதி சமயமெனும் சாக்காட்டில் வீழ்ந்தவர்க்கு
நீதிதனைத் தானெடுத்து நித்தமிங்கு—ஓதிமக்கள்
நன்னிலையில் தான்வாழ நாளுமுழைப் போன்நமது
கண்ணின் மணியனையான் காண்.

—கி. கண்ணப்பன், சென்னை.

விண்ணில் பவனிவரும் வெண்ணிலவே என்னிலையை
எண்ணா தெனைப்பிரிந்த என்தலைவன்—உண்ணினைந்து
கண்ணீரால் நானெழுதும் காவியத்தைக் காண்பானோ?
கண்ணின் மணியனையான் காண்.

— பூங்குழலி, பொருளூர்.

நற்பணிகள் ஆற்றிநிதம் நாட்டை உயர்த்துகையில்
சொற்படினும், சோதனைக் குட்படினும்—சற்றுமே
எண்ணிக் கலங்காம லென்றும் பணிசெய்வோன்
கண்ணின் மணியனையான் காண்.

— அ. காந்தி, தேவத்தூர்.

வாழ்வில் ஒழுங்கும் வருவாயிற் சேமிப்பும்
தாழ்விலாத் தொண்டும் தமிழ்ப்பற்றும்—சூழ்ந்துமேற்
கொண்ட சிறுகுடும்பக் கொள்கையும் கொள்வோனே
கண்ணின் மணியனையான் காண்.

— வித்துவான் வி. வி. நடராசன், சென்னை-34.

ஈன்றோர் மனங்குளிர ஈந்தேதன் கைசிவக்கச்
சான்றோர் அவைநடுவே தானிருந்தே—ஆன்றோர்தம்
மண்ணின் புகழெல்லாம் மாண்படையச் செய்வோனே
கண்ணின் மணியனையான் காண்.

— மல்லை முத்தரசன், அமைந்தகரை.

அண்ணா அடிபற்றி ஆள்வார் ; அரிசனத்துப்
பெண்ணை மகற்கெடுத்துப் பேணிடுவார் ;—தண்ணளியால்
கண்ணளிப்பார் ; தண்டமிழ் காப்பார் ; இவரேநம்
கண்ணின் மணியனையான் காண்.

— ச. விமலாமேரி, திண்டுக்கல்.

ஆற்றல் அணிவளமும் அன்பும் அரும்பண்பும்
போற்றும் பொதுத்தொண்டும் பூத்திலங்கி—ஏற்றமிகு
பண்ணின் இனிப்பூட்டும் பைந்தமிழின் பேச்சாளன்
கண்ணின் மணியனையான் காண்.

— எழிற்கோவன், ஓசூர்.

நெற்றி வியர்வை நிலத்திற் குரமாக,
இற்ற உடல்நோக என்றென்றும்—மற்றவரின்
நன்மைக்கே பாடுபடும் பாட்டாளி நாட்டிற்குக்
கண்ணின் மணியனையான் காண்.

— மீராதாசன், மதுரை-21.

கீற்றுக் குடிசை ; கிழிந்த பழம்பாய் ; கந்தல் ;
சேற்றுத் தரையில் சிணுங்குகின்றார்—மாற்றின்றி ;
அன்னார்க் கவர்தம் அழகில்லா ஆண்மகனே
கண்ணின் மணியனையான் காண்.

— வே. அரங்கராசன், தாராசுரம்.

கண்ணே ! மணியேயென் காதல் மனையாளே !
கண்கள் இரண்டே கருதிடுவாய்—பெண்ணே ! நீ
எண்ணுங் குழந்தை இரண்டே பெறுகவென்றான்
கண்ணின் மணியனையான் காண்.

— இராசேசுவரிராசன், சென்னை-34.

# வெண்பாப் போட்டி

பெற்ருேரை பணிந்து பெரியோரைப் போற்றியே
கற்ருேர் நெறிநின்று கல்வியொடு—முற்றுந்தாம்
நண்ணிய நல்லொழுக்க நற்செயலை நாடிடுவோன்
கண்ணின் மணியனையான் கான்.

—புலவர் வெ. வா. நடராசன், சென்னை-5.

விண்ணிலுள வெண்ணிலவின் மண்ணினையும் கல்லினையும்
மண்ணிலுள மாந்தர் கொடுவந்தார்—மண்ணுலகீர்
விண்ணிற் கலமேவி வெற்றிகண்ட விஞ்ஞானி
கண்ணின் மணியனையான் காண்.

—புலவர் சி. சுப்புராஜ், சிறுகுடி.

நெருப்புப் பொறிபறக்கும் நீளீட்டிப் பாட்டால்
பொறுப்புணர வைத்தான் புதுவைத்—திருப்புலவன் !
மண்ணில் மடமையெலாம் மாய்த்தே பகுத்தறிவுக்
கண்ணின் மணியனையான் காண்.

—புலவர் ந. கருணாநிதி, வங்கனூர்.

இல்லார்க்கு வாழ்வுதரும் எண்ணற்ற திட்டங்கள்
நல்விதமாய் ஓங்கிடவே நம்கலைஞர்—பல்வகையாய்
எண்ணியது திண்ணமாய் எண்ணியாங்குச் செய்திடுவோன்
கண்ணின் மணியனையான் காண்.

—ப. அ. இசுமாயில், மேலப்பாளையம்.

கண்ணில் ஒளியிழந்து கண்ணீரைத் தாம்தேக்கி
மண்ணில் துடிக்கின்ற மாந்தர்க்கே—எண்ணிலாக்
கண்சிகிச்சை நன்முகாம் கண்ட முதல்வரே
கண்ணின் மணியனையான் காண்.

—திருமதி மு. அன்னபூரணி, பசுமலை.

கண்ணுதல் ஈசற்கு மட்டுமே கண்தந்தான்
கண்ணப்பன் என்றகதை கண்டிட்டோம்—கண்ணில்லா
எண்ணிலார் கண்ணைத் திறந்தகரு ணைச்செல்வன்
கண்ணின் மணியனையான் காண்.

—சீ. புனிதவதி, கீழ்நாயகன்பாளையம்.

வண்ண இதழ்குவித்து வாயெல்லாம் தேன்வழியப்
பண்ணிசைத்த மென்மழலைப் பாங்குநடை—ஒண்டொடியே !
எண்ண இனிக்கும் எழிலார்ந்த என்செல்வன்
கண்ணின் மணியனையான் காண்.

—ஆ. தவசிலிங்கம், ஈரோடு-3.

பெற்றதன் தாயின் பெரும்பசி போக்கற்கும்
கற்ருேர் கடிந்தவை நீக்கியே—பற்றுடன்
உண்ண உடுக்கவும் உண்மையே நாடிடுவோன்
கண்ணின் மணியனையான் காண்.

—தி. கி. நாராயணன், கோவை.

...ருளநாடித் தோகையென நீங்கியவன்
ஆழி கடந்தே அலைந்திடினும்—தோழியே ;
நண்ணி வெகுண்டிட நாணுகின்றேன் ; என்தலைவன்
கண்ணின் மணியனையான் காண்.

—சு. பொன்னுராஜ், சின்னவீரம்பட்டி.

இப்பாரில் எப்போதும் எங்குமே கண்டறியா
ஒப்பில் விடுதலைப்போர் உண்டாக்கிச்—செப்பரிய
விண்புகழ் பெற்றிட்ட வீரனும் காந்தியே
கண்ணின் மணியனையான் காண்.

—சீனிவாசம்மாள், சேலம்-9.

அன்னையின்றி யாருமில்லை ! அச்சின்றி வண்டியில்லை !
உண்ணவழி செய்யும் உழவனின்றி—மண்ணுலகில்
எண்ணுங்கால் ஏதுமில்லை ; அன்னவனே இந்நாட்டின்
கண்ணின் மணியனையான் காண்.

—சி. மு. சிவலிங்கம், மதுரை-21.

அள்ளும் சுவையால் அரியபல உண்மைகளைக்
கொள்ளும் படிசொன்னன் கூர்த்தமதி—வள்ளுவனே
எண்ணின் இவன்எம் இனிய தமிழ்மொழியாம்
கண்ணின் மணியனையான் காண்.

—புலவர் மா. முத்துச்சாமி, சாத்தனூர்.

செந்நெற் கதிர்மணியும், சீர்மக்கா, கம்புதினை,
மின்னும் வரகுமணி, ராகி, சோளம்—எந்நாளும்
மண்ணில் உழுதுபணி யாற்றும் உழுபடைக்கே
கண்ணின் மணியானையான் காண்.

—ப. செல்லப்பாண்டியன், கிருட்டிணகிரி அணை.

முந்தும் பகைமுகப்பில் ; மோதும் பனிப்பரப்பில்
சிந்தை கலங்காது தீரமுடன்—எந்நாளும்
மண்ணகம் காக்கின்ற மாவீரன் அன்னவனே
கண்ணின் மணியனையான் காண்.

—புலவர் கா. நா. இலக்குவன், வால்பாறை.

சாவா இலக்கியங்கள் தந்தான் ; தமிழ்வளர்க்க
ஓவா துழைத்தான் ; புரட்சிசெய்தான்—பாவாலே
வண்ணத் தமிழ்த்தாய்க்குப் பாரதிதா சப்புலவன்
கண்ணின் மணியனையான் காண்.

—பா. கு. பொய்யாமொழி, சேர்ந்தநாடு.

நெற்றி வியர்வை நிலத்தினில் வித்தாக்கி
வெற்றிப் பயிரை விளைத்திட்ட—பெற்றியால்
மண்ணில் உயிர்க்குலம் வாழ்த்தும் உழவனே
கண்ணின் மணியனையான் காண்.

—புலவர் இலெ. சி. குப்புசாமி, கோவிந்தாபுரம்.

# மாணவர் அரங்கம்

## திசை காட்டும் கருவி

விலை மதிப்புள்ள பல கருவிகளைப் பயன்படுத்தி அறிவியல் புதுமைகள் கண்டுபிடிக்கும் இக்காலத்தில், கையில் எளிய ஒரு திசை காட்டுகின்ற கருவியை மட்டும் வைத்துக் கொண்டு அறிவியல் சாதனைகளைப் புரிவது விந்தையல்லவா !

இந்த அரிய சாதனையை நிகழ்த்துபவர் ஒரு புவி அமைப்பியலறிஞர் (Structural Geologist). குறிப்பிட்ட இடத்தில் ஆராய்ச்சியைத் தொடங்கக் கருதும் இந்த அறிஞர், அவ்விடத்தில் இதற்குமுன் நடந்துள்ள புவியியல் முன்னேட்ட நில ஆய்வுகளைப் (Preliminary Geological Survey) பற்றிய குறிப்புக்களைத் திரட்டி அப் பகுதியைப் பற்றிய பொதுவான புவியியலை அறிந்து கொள்வார். பிறகு தான் செய்ய வேண்டிய வேலைகளை வரையறுத்துக் கொள்வார்.

மதிய உணவுடன் காலை ஏழு மணிக்குத் தொடங்கும் வேலையை மாலை ஐந்து மணிக்குத்தான் முடிப்பார். கொளுத்தும் வெய்யில், கொட்டும் மழை, வீசும் அனல் காற்று ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல், காடு மலை எல்லாம் நடந்து சென்று வேலை செய்வார். தான் நடந்து செல்லும் போது வழியில் கண்ட பாறைகளை ஆராய்ந்த வண்ணம் செல்லுவார். ஆங்காங்கே தம் கையில் உள்ள சுத்தியலால் காணும் பாறைகளை உடைத்து அவை இன்ன இன்ன பாறை வகையினைச் சார்ந்தன என்று குறித்துக் கொள்வார். தான் நடந்து போகும் திசையிலுள்ள பாறை வகைகளையெல்லாம் தமது புவியியல் நிலப்படத்தில் குறித்துச் செல்வார். பாறையில் கிடைக்கும் கனிமங்களையும் குறித்து வருவார். செல்லும் திசையில் பாறை கனிமங்கள் அளவில் குறைந்தோ அல்லது மிகுதியாகவோ மாறி வருவதையும், ஒரு கனிமம் மற்றொரு கனிமமாக மாறிக் கிடைத்து வருவதையும் புதிதாகக் கிடைக்கும் கனிமங்களையும் குறித்துக் கொள்வார். தான் செல்லும் வழியில் உலோகக் கனிமங்கள் எங்கெங்குக் கிடைத்தாலும் அவற்றைப் பற்றிய முழு இயல்புகளையும் அறிய முற்படுவார். பாறைகளின் இனவகை, கட்டுக்கோப்பு, புவியியலமைப்பு, ஒரு வகையான பாறைக்கும் அதனை அடுத்துள்ள மற்றொரு வகையான பாறைக்குமிடையேயுள்ள தொடர்பு ஆகியவற்றையெல்லாம் உற்றுக் கவனித்துக் குறிப்பு எழுதிக் கொள்வார். நிலப்பரப்பில் தான் கண்டறிந்தவற்றையெல்லாம் எழுதிக் கொண்டும், தேவையான புவியியல் அமைப்புக்களைத் தெளிவாக விளக்கும் படங்களை வரைந்து கொண்டும், குறிப்பிடத்தகும் அல்லது தமது கருத்திற்குச் சான்றான உண்மைகளை வெளிக் காட்டும் பாறை அமைப்புகளை ஒளிப்படம் எடுத்துக் கொண்டும் செல்வார்.



பாறைகளின் கிடை வரை (Strike), சாய்மானம் ( Dip ), கனிம நீட்சி (Mineral Lineation), கனிம இணையமைப்பு (Loliation), பாறைகளில் காணப்படும் சின்னஞ் சிறு மடிப்புக்களின் மைய அச்சுக்கள், பிளவுத் தளங்கள், பொருத்துக்கள் ஆகியவற்றைத் தமது கையிலுள்ள திசை காட்டும் கருவியின் மூலம் அளந்து கொள்வார். இத் திசை காட்டும் கருவியில் சாய்மானத்தை அளக்க ஓர் இரச மட்டமும் பொருத்தப்பட்டிருக்கும் (Climometer Compass). உடனுக்குடன் இந்த அளவுகளையெல்லாம் தனது நிலப் படத்தில் குறித்துச் செல்வார். இவ்வாருக எப்பகுதி முழுவதும் எல்லா இடத்திற்கும் நடந்தே சென்று தமக்குத் தேவையான எல்லா ஆராய்ச்சிக் குறிப்புகளையும் அளவுகளையும் எடுத்துக் கொள்கிருர்.

இக்குறிப்புகளினுல் ஓரிடத்தின்

1. புவியியல் நிலப்படம் உருவாகிறது.

2. புவி அமைப்பியல் தெளிவாகிறது.


3. புவியியல் வரலாறு, பாறைகளின் ஒப்புமை வயது, மலைத் தோற்றவியக்க விசைகள் பற்றிய உண்மைகள் ஆகியவை கிடைக்கின்றன.

4. புதிய கனிமப் படிவுகள் கண்டுபிடிக்க வழி பிறக்கிறது.

எனவே தன்னுடைய குறிப்புகளைக் கொண்டு, தான் ஆராய்ச்சி செய்யும் பகுதியில் கிடைக்கும் பாறைகள் எந்தெந்தத் திசைகளிலிருந்து எந்தெந்த மலைத் தோற்ற விசைகளுடன், எவ்வக் காலங்களில் எல்லாம் அழுத்தப் பட்டிருக்கின்றன என்பன போன்ற விவரங்களைத் தருவார். மற்றும் பிளவுத் தளங்களில் பாறைகள் எவ்வளவு தூரம் எந்தத் திசையில் நகர்த்தப்பட்டுள்ளன. அல்லது உயர்த்தவோ, தாழ்த்தவோ பட்டுள்ளன என்றெல்லாம் கணித்துக் கூறுவார். பிளவுத் தளங்களில் மறைந்து விடும் கனிப் பொருள் படிவு மீண்டும் எந்த இடத்தில் கிடைக்கலாம் என்றும் கூறி விடுவார். மேலும் தான் காணும் பிளவுத் தளத்தில் கனிமப் பொருட்களின் தோற்றம் நிகழ்ந்திருக்கலாமா இல்லையா என்றும் கூறி விடுவார். அவருடைய ஆராய்ச்சி முடிவுகள் புவியியல் வரலாற்றினைத் தொகுக்கவும் கனிமத் தேட்டத்தைத் (Prospecting of mineral Deposits) தொடங்கவும் பெரிதும் பயன்படுகின்றன. மேற்கண்ட சாதனைக்குத் தேவையான குறிப்புகள் பலவும், புவி அமைப்பியலறிஞர் கொண்டு செல்லும் திசை காட்டும் கருவியின் மூலம் அளிக்கப் படுகின்றன. குறிப்பிட்ட ஆராய்ச்சிப் பகுதி முழுவதும் நடந்தே சென்று திசை காட்டும் கருவியின் மூலம் பாறைகளை அளந்து அறியும் புவி அமைப்பியலறிஞர் கருவிகளுமின்றிச் செலவுமின்றி அறிவியல் புரட்சி செய்கிருர்.

—இரா. இராமசாமி

# ரயிலே! ரயிலே!!



ஏறத்தாழ 120 ஆண்டுகளாக, இந்திய இரயில்வேக்கள் நாட்டு மக்களுக்குப் பணி புரிந்து வருகின்றன. ஆசியாவிலேயே மிகப் பெரிய முறையை உடைய இந்திய ரயில்வேக்கள், உலக ரயில்வேக்களில் நான்காவது இடத்தை வகிக்கிறது.

இருப்புப் பாதை வழித்தடங்களின் மொத்தத் தூரம் 60,000 கிலோ மீட்டரைத் தாண்டிவிட்டது. இதில் 29,700 கிலோ மீட்டர் அகல இருப்புப் பாதைத் தொடர்களாகவும், 25,865 கிலோ மீட்டர் தூரம் மீட்டர் கேஜ் இருப்புப் பாதைத் தொடர்களாகவும், 4,476 கிலோ மீட்டர் தூரம் குறுகிய இருப்புப் பாதைத் தொடர்களாகவும் இருக்கின்றன. ரயில் வண்டிகள் ஓடும் மொத்த இருப்புப் பாதையின் நீளம் 71,669 கிலோ மீட்டராகும்.

நாட்டின் மிகப் பெரிய அரசு நிறுவனமாகிய ரயில்வேக்களின் மொத்த மூலதனத் தொகை 4,335 கோடி ரூபாயை எட்டியுள்ளது. நாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாம் நாள் தோறும் ஓடும் 10,800 ரயில் வண்டிகளில், சுமார் 68 இலட்சம் மக்கள் பயணம் செய்கின்றனர்.

நாட்டின் மக்கள் தொகையில் 1·25 சதவிகித மக்கள் நாள் தோறும் ரயில் வண்டிகளில் பயணம் செய்கின்றனர். ஆனால், ஆண்டு ஒன்றுக்கு, இந்தியா முழுவதும் மொத்தம் ஒரு கோடிக்கு மேற்பட்ட மக்கள் டிக்கெட் இல்லாமல் ரயிலில் பயணம் செய்து வருகிறார்கள். இதனால் ஏறக்குறைய 20-லிருந்து 25 கோடி ரூபாய் வரை ஆண்டொன்றுக்கு ரயில்வே துறைக்கு நட்டம் ஏற்படுகிறதாம். ரயில் வண்டிகள் நாள்தோறும் சுமார் 6 இலட்சம் டன் சரக்கை ஏற்றிச் செல்கின்றன. இதற்காகவே 11,100-க்கும் மேற்பட்ட எஞ்ஜின்கள், 3,85,000 வாகின்கள், 35,000 ரயில் பெட்டிகள் ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. நம் நாடு முழுவதிலும் உள்ள மொத்த ரயில்வே நிலையங்கள் 7,065 ஆகும். இந்த மாபெரும் பணியின் மூலம் கிடைக்கும் மொத்த நாள் வருவாய் சுமார் 3 கோடி ரூபாய். மிகவும் விரிவடைந்து வரும் ரயில்வேக்களில், நாள் சம்பள ஊழியர்களையும் சேர்த்து 17·5 இலட்சம் பேர் தற்போது வேலை செய்கின்றனர்.

1960–61-ஆம் ஆண்டில் 15·62 கோடி டன் சரக்குகளை ஏற்றிச் சென்ற ரயில்கள், 1965-66-ஆம் ஆண்டில் 20·3 கோடி டன்கள் மதிப்புள்ள சரக்குகளை ஏற்றிச் சென்றன.

1950–51-ஆம் ஆண்டில் 6,651 கோடியே 70 இலட்சமாக இருந்த பிரயாணிக் கிலோ மீட்டர் 1965–66 ஆம் ஆண்டில் 9,629 கோடியே 20 இலட்சமாக அதிகரித்தது. இது 1971–72-இல் 12,533 கோடிக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது. ஒரு பணியை ஒரு கிலோ மீட்டர் தூரம் ஏற்றிச்செல்வதே ஒரு பிரயாணிக் கிலோ மீட்டர் ஆகும்.

ரயில்வேக்கள் பாசஞ்சர் சர்வீசுகளின் மூலம், ஒவ்வொரு ஆண்டும் 61 கோடி ரூபாய் நட்டமடைந்து வருகிறது. இதில் பம்பாய், சென்னை, கல்கத்தா ஆகிய நகரங்களில் செயல்பட்டு வரும் புறநகர் பாசஞ்சர் சர்வீசுகளின் மூலம் அடையும் நட்டம் 12 கோடி ரூபாய் ஆகும்.

மிக முக்கியமான வழித் தடங்களில் மின் ரயில்கள், மற்றும் டீசல் ரயில்கள் செல்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது சுமார் 3,706 கிலோமீட்டர் தூரத்திற்குப் பல்வேறு வழித் தடங்களில் மின் ரயில்கள் ஓடுவதற்கான பணிகள் நடைபெற்றுவருகின்றன. மேலும் 24,250 கிலோ மீட்டர் தூரத்திற்குப் பல்வேறு வழித்தடங்களில் டீசல் ரயில்கள் செல்வதற்கான பணிகள் முழுவதுமாக அல்லது ஓரளவு நடைபெற்றுள்ளன. மொத்தம் உள்ள பல்வேறு மார்க்கங்களின் தூரத்தில் 47 சதவிகிதத்தூரத்திற்கு டீசல் ரயில்களும் மின் ரயில்களும் ஓடுகின்றன. அது மட்டுமல்லாமல் மொத்தச் சரக்குப் போக்குவரத்தில் 70 சதவிகிதம் இவ்விரண்டு வகை ரயில்களின் மூலம் செல்கின்றன.



சித்தரஞ்சன் எஞ்சின் தொழிற்சாலை தற்போது மின்சார எஞ்சின்களை உற்பத்தி செய்கிறது. கடந்த ஆண்டில் நவம்பர் மாதம் வரை 269 மின்சார எஞ்சின்கள் உற்பத்தியாயின. இதே காலத்தில், வாரணாசியிலுள்ள டீசல் எஞ்சின் தொழிற்சாலை 556 மெயின் லைன் டீசல் எஞ்சின்களை உற்பத்தி செய்தது. ரயில்பெட்டித் தொழிற்சாலை, ஆண்டிற்கு 350 அகல ரயில் பெட்டிகளை உற்பத்தி செய்வதற்கான குறியீட்டை எட்டியபின் தனது உற்பத்தித் திறனை மேலும் அதிகரித்து வருகிறது. கடந்த ஆண்டு நவம்பர் மாதக் கடைசிவரை, ரயில் பெட்டித் தொழிற்சாலை, உட்பகுதி முற்றிலும் கட்டி முடிக்கப்படாத 9,133 ரயில் பெட்டிகளைத் தயாரித்துள்ளது.


**சரக்குப் போக்குவரத்தைச் சமாளிப்பதற்கு ரயில்வேக்**

கள், கொள்கலன் சர்வீசுகள், சரக்குகளைத் துரிதமாக அனுப்புதற்காக மிக விரைவு ரயில் வண்டிகளை விடுதல் ஆகிய பல புதிய முறைகளைக் கையாண்டு வருகின்றன. 1966-ஆம் ஆண்டு தொடங்கிய கொள்கலன் சர்வீசு, மிகவும் பிரபலமடைந்துள்ளது. 1971—72-ஆம்ஆண்டில் மட்டும் 31,934 கொள்கலன்கள் உபயோகிக்கப்பட்டு ரயில்வேக்களுக்கு 1·43 கோடி ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது.

ரயில்வேக்களின் சேமிப்பு இடங்களில் சுமார் 35,000 வகைப் பொருள்கள் உள்ளன. 1955—56-ஆம் ஆண்டு ரயில்வேக்கள் தங்கள் சேமிப்புப் பொருட்களுக்கெனச் செலவிடப்பட்ட 16 கோடியே 20 இலட்சம் ரூபாயில் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் மதிப்பு 25·8 சதவிகிதமாகஇருந்தது.1970-71ஆம் ஆண்டில் இறக்கு மதிப் பொருள்களின் மதிப்பு 8·96 ஆகக் குறைந்தது. அப்போது சேமிப்புப் பொருட்கள் வாங்குவதற்கெனச் செலவிடப்பட்ட தொகை 363 கோடியே 70 இலட்ச ரூபாய்.

1956-ஆம் ஆண்டில் ரயில்வேக்களின் ஊழியர் எண்ணிக்கை 13 இலட்சமாக இருந்தது. 1972ஆம் ஆண்டில் 17·5 இலட்சமாக அதிகரித்துள்ளது. இதே போல் 1950—51 ஆம் ஆண்டில் ரயில்வே ஊழியர் ஒருவருக்குச் செலவிடப்படும் தொகை 1,263 ரூபாயாக இருந்தது. 1971—72 ஆம் ஆண்டில் 3,546 ரூபாயாக உயர்ந்துள்ளது.

ரயில்வே ஊழியர்களின் நலனுக்காக ரயில்வேக்கள் மேற்கொள்ளும் பல்வேறு நடவடிக்கைகளில், நோயுற்றவர்களுக்கு உதவுவது, ஊழியர்களின் குழந்தைகளுக்குக் கல்வி புகட்டப் பள்ளிகள் அமைத்தல், மனமகிழ் மன்றங்கள் ஏற்படுத்துதல், விளையாட்டுத்திடல் வசதி அளித்தல் ஆகிய பல்வேறு செயல்களும் அடங்கும். மேலும் ரயில்வே ஊழியர்களின் பிள்ளைகளுக்காக 747 பள்ளிகளும், 3 கல்லூரிகளும் நடத்தப்பட்டுவருகின்றன.





ரயில்வே ஊழியர்களின் மருத்துவ, சுகாதார வசதிக்கென 10,430 படுக்கைகள் கொண்ட சுகாதாரப் பிரிவுகளும், 651 மருத்துவ மனைகளும் இயங்கி வருகின்றன. 1950—51 ஆம் ஆண்டில் ரயில் ஊழியர் ஒருவருக்கு அளிக்கப்படும் மருத்துவ வசதிக்கான செலவு 32·30 ரூபாயாக இருந்தது. 1970—71-ஆம் ஆண்டில் 197·70 ரூபாயாக அதிகரித்துள்ளது.

மத்தியத் தர நிர்ணய நிறுவனம் விரிவடையும் பொருட்டு 1952-ஆம் ஆண்டில், ரயில்வே பரிசோதனை ஆராய்ச்சி நிலையம் என்னும் தனி நிறுவனம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இந்த நிறுவனம் ரயில்வேக்களின், ஆராய்ச்சிக்காகவும், புதிய வடிவமைப்புகளைத் தயார் செய்வதற்காகவும், தற்போது ரயில்வேக்களிடம் உள்ள கருவிகளை உபயோகிப்பதற்கான வழிகளை ஆராய்வதற்காகவும் முழுமையான தொடங்கப்பட்டது.

மிக எளிய முறையில் துவங்கிய ரயில்வே ஆராய்ச்சி வடிவமைப்பு தர நிர்ணய நிறுவனம் ரயில்வேக்களின் பலதரப்பட்டநடவடிக்கைகளை அறிந்து அவற்றை ஆராயும் திறன் கொண்டதாகத் தற்போது விளங்குகிறது. உலகத்திலுள்ள ரயில்வே ஆராய்ச்சி நிறுவனங்களிலேயே இந்த நிறுவனம் தனித்தன்மை வாய்ந்ததாக உள்ளது. இது ஆராய்ச்சி செய்தல், வடிவமைப்புகளை உருவாக்கல், தரங்களை நிர்ணயம் செய்தல், மேற்பார்வையிடுதல், பொறியியல் துறையில் ஆலோசனை வழங்குதல் போன்ற பல்வேறு செயல்களில் ஈடுபட்டு வருகிறது.

ரயில்வேக்கள் 1955—56-ஆம் ஆண்டில் விலைக்கு வாங்கிய மொத்தப் பண்டங்களின் மதிப்பில்25·8 சதவிகித பொருட்கள் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. ஆனல் 1970—71-ஆம் ஆண்டில் இது 8·96 சதவிகிதமாகக் குறைந்தது.

ரயில்வே தொழிற்சாலைகளில், மின்சக்தி உற்பத்திப் பிரிவு, ரயில்பெட்டிப் பிரிவு, சிக்னல், தொலைத் தொடர்புப் பிரிவு, மின்சாரப் பொறியியல் பிரிவு, ரயில்வண்டிகளின் கூரைகளில் பொருத்தப்படும் கருவிகள் பிரிவு ஆகிய பல்வேறு பிரிவுகள் உள்ளன.



கடந்த 15 ஆண்டுகளில் உள்நாட்டிலேயே டீசல் எஞ்சின்களையும் மின்சார எஞ்சின்களையும் வடிவமைத்து உற்பத்தி செய்யும் திறனை இந்திய ரயில்வேக்கள் பெற்றுள்ளன. முன்னதாக 1950-ஆம் ஆண்டு சனவரி மாதம் 26-ஆம்தேதி சித்தரஞ்சன் என்னுமிடத்தில் இந்தியாவின் முதல் எஞ்சின்உற்பத்திதொழிற்சாலை துவங்கப் பெற்றது. இத்தொழிற்சாலை நீராவி எஞ்சின்களை உற்பத்தி செய்வதற்காகத் துவங்கப்பட்ட போதிலும், தற்போது டீசல் எஞ்சின்களையும், மின்சார எஞ்சின்களையும் உற்பத்தி செய்து வருகிறது. இத்தொழிற்சாலை,நீராவிஎஞ்சின்கள் உற்பத்தி செய்வதைக் கடந்த ஆண்டு சனவரி மாதத்திலேயே நிறுத்தி விட்டது. 1971—72-ஆம் ஆண்டு வரை சித்தரஞ்சன் எஞ்சின் தொழிற்சாலை 2,351 நீராவி எஞ்சின்களையும், 344 மின்சார எஞ்சின்களையும், 121 டீசல் எஞ்சின்களையும் உற்பத்தி செய்துள்ளது.

இத்தொழிற்சாலை 1974-75 ஆம் ஆண்டில் 84 மின்சார எஞ்சின்களை உற்பத்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1971—72-ஆம் ஆண்டில் இது 46 மின்சார எஞ்சின்களையே தயார் செய்தது. மின்சார எஞ்சின்களைத் தயாரிப்பதற்காக வெளிநாடுகளிலிருந்து 1964—65 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்த கருவிகளின் மதிப்பு 53 சதவிகிதமாக இருந்தது, 1971—72 இல் 21 சதவிகிதமாகக் குறைந்தது.

நம்நாடு விடுதலை பெறுவதற்கு முன் இந்திய ரயில்வேக்களிடம் டீசல்எஞ்சினே இல்லை. 1961-ஆம் ஆண்டில் துவங்கிய டீசல்எஞ்சின் தொழிற்சாலை, 1972-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ஆம் தேதி வரையிலான 11 ஆண்டுக் காலத்தில் அகலப் பாதையில் ஓடக்கூடிய 427 டீசல் எஞ்சின்களையும், மீட்டர்கேஜில் ஓடக்கூடிய 80 டீசல் எஞ்சின்களையும் உற்பத்தி செய்துள்ளது.

பி. வி. ஜி.




# தமிழ் நாட்டில் கற்கால மனிதன்

கற்கால மனிதன் சென்னையைச் சுற்றிலுமுள்ள நிலப் பகுதியில் சுமார் 2,00,000 ஆண்டுகளுக்கு முன் வசித்து வந்தான் என்ற உண்மை 1863-ஆம் ஆண்டே வெளியிடப்பட்டது. சென்னையிலுள்ளபல்லாவரத்தில், ஆதிகால மனிதன் பயன்படுத்திய கற்கருவிகளை இராபர்ட் புருஸ் ஃபூட் ( Robert Broce Foote )என்பவர் கண்டெடுத்தார். ஆனால், 1935-ஆம்ஆண்டு வி.டி. கிருஷ்ணசாமி என்னும் புவி இயல் நிபுணர், இவ்வுண்மையை மேலும் அவருடைய அரிய கண்டுபிடிப்புகளால் நிரூபித்தார். அதன் பயனைச் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள பூண்டி நீர்த்தேக்கத்தின் அருகிலுள்ள வட மதுரை, அத்திரும்பாக்கம், நம்பாக்கம், குடியம் போன்ற இடங்களில் கற்கால மனிதன் பயன்படுத்திய கருவிகள் கண்டெடுக்கப்படுகின்றன.

மனித வளர்ச்சியில் கற்காலம் மிகப் பெரும் பகுதியை அடைத்துக் கொள்ளுகிறது. கிட்டத்தட்ட கி. மு. 10,000 ஆண்டுகள் முன்வரை கற்கால நாகரிகம், மனிதனை மேற்கொண்டுவிட்டது. கற்காலத்தில் மனிதன் நாடோடியாகவே திரிந்து வந்தான். இயற்கையாகவே உண்டாக்கப்பட்ட குகைகளில் வசித்தும் அப்போதுக்கப்போது கற்களால் செய்யப்பட்ட கருவிகளின் உதவியால் வேட்டையாடிக் கிடைத்த உணவை உண்டும் வாழ்ந்து வந்தான். தமிழ் நாட்டில் கற்கால மனிதன் வாழ்ந்ததற்கு அடையாளம் அவன் விட்டுச் சென்ற கற்கருவிகளேயாகும். இவ்வாறு தமிழகத்தில் கிடைத்த கற்கால மனிதனின் கருவிகளையும் ஆப்பிரிக்காவிலும், மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் கிடைத்த கற்காலக் கருவிகளையும் ஒப்பிட்டே, தமிழகத்தில் வாழ்ந்த கற்கால மனிதனின் காலத்தை வரையறுக்கிறார்கள். ஒப்புமை ஆராய்ச்சியின் (Typology Research) பயனாகத் தமிழகத்தில் கற்கால மனிதன் சுமார் 2,00,000 ஆண்டுகளுக்கு முன்பே வாழ்ந்தான் என்று தெரியவருகிறது.

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து சுமார் 12 மைல் சுற்றளவிலுள்ள பல இடங்களில் கற்கால மனிதனின் கைக் கோடரிகள் ( Hand Axes ) இறைச்சி கீறும் கத்திகள் ( Cleavers), போன்றவை கண்டுபிடிக்கப்பட்டன.

ஆதிகால மனிதன் பயன்படுத்திய இக் கற்கருவிகளின் பெரும்பாலானவை குவாட்லைட் (Quatlite) என்னும் கற்களில் செய்யப்பட்டவை. இக்கருவிகள் பல உபயோகங்களுக்கு ஏற்றது. உதாரணமாகக் கைக்கோடரி ( Hand Axes ) குத்தவும், வெட்டவும், துண்டு போடவும், பயன்படும்.

இயற்கையாகவே உண்டாக்கப்பட்ட கரடுமுரடான பெரிய கல்லால், மேலே சொல்லப்பட்ட குவாட்லைட்டைக் குறிபார்த்து அடிக்கும்போது அடி விழுந்த இடத்தில் செதிள் பெயரும். செதிள் பெயர்ந்ததால் கூருக்கப்பட்ட பகுதி, மீண்டும் மீண்டும் தேய்க்கப்பட்டுப் பளபளப்புடன், இப்போது நாம் பயன்படுத்தும் சவரக்கத்தியின் கூர்மையை அடைந்துவிடும். ஆதிகால மனிதன் கைக் கோடரியை இரண்டு வகைகளில் பயன்படுத்தினான். கைக் கோடரியின் கனத்தை அடிப்பாகத்தை உள்ளங்கையில் நேரிடையாக வைத்துக் கொண்டு சிறு மிருகங்களைத் தாக்கினான். ஆனால், யானை, காண்டா மிருகம், மிக வேகமாக ஓடும் மான் போன்றவைகளைக் கொல்ல, கைக் கோடரியை மீண்டும் கூராக்கி இதற்கு பாய்ன்ட் ( Point ) என்று பெயர். அதை நீண்ட மரக் குச்சிகளில் கட்டி, எதிரே உள்ள மிருகத்தை நோக்கி எய்தினான். இவ்வாறு கற்கால மனிதன் கற்கருவிகளைப் பயன்படுத்தினான்.

பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து சுமார் 8 மைல் வட கிழக்கே குடியம் (Gudium) என்னும் இடத்தில் கற்கால மனிதன் தங்கிய குகை கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால், இக் குகையில் கற்கால மனிதனின் ஓவியங்களோ அல்லது அவன் இங்கு நீண்ட காலம் தங்கிய அடிச்சுவடோ காணப்படவில்லை.


ஆப்பிரிக்காவிலும், ஐரோப்பிய நாடுகளிலும் கற்கால மனிதனின் காலத்தை அறிய அகழ்வாராய்ச்சியின் (Archaeology) உதவியால் தோண்டி எடுக்கப்பட்ட கற்கால மனிதனின் எலும்புக் கூடு மிகவும் உதவுகிறது.

**அத்திரம்பாக்கம் கற் கருவிகள்**





ஆகவேதான், தமிழ் நாட்டில் கண்டெடுத்தகற் கருவிகளை, ஐரோப்பாவிலும், ஆப்பிரிக்காவிலும் எலும்புக் கூடுகளோடு கண்டெடுத்த கருவிகளோடு, ஒப்புமைசெய்து தமிழ்நாட்டுக் கற்கால மனிதனின் காலம் வரையறுக்கப்படுகிறது.

—த. கி. வரதராசன்.




கதர் கைத்தொழில் அங்காடி

குறளகம்
சென்னை-1




கைவண்ணப் பொருள்களின் களஞ்சியம்






வெளிநாட்டார் போற்றும்
பயன் பொருள்
கலைக்கூடம்

20461
20462 20463
20464 20465





# வெளிநாடு செல்லும்
# பூங்கான் பொருட்கள்








பீங்கான் பொருள்களின் 8வது ஆண்டுக் கண்காட்சியும் விற்பனையும் கடந்த 9-2-73 அன்று ராஜாஜி மண்டபத்தில் சுற்றுலாத் துறை அமைச்சர் திரு க. இராசாராம் அவர்களால் துவக்கி வைக்கப்பெற்றது.

ஒவ்வோர் ஆண்டிலும் நடைபெறும் இந்தப் பொருட்காட்சியில் புதிய புதிய மாதிரிகளை உருவாக்கி, அவற்றை இடம் பெறச் செய்வது தொழில் வணிகத் துறையின் சாதனையாக இருந்து வருகிறது.

இந்த ஆண்டு கண்காட்சியில் 150 புதிய பீங்கான் கலைப் பொருள்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. சென்ற ஆண்டு போர்வீரன் சிலை மக்கள் மனங்களைக் கவர்ந்தது. இந்த ஆண்டு, விடுதலை அடைந்த வெள்ளி விழா ஆண்டாகையால் அதனை நினைத்துப் பார்க்கும் வகையில் கொடி காக்க உயிர்விடும் தியாகியின் உருவச் சிலையை இடம் பெறச் செய்து பெரும் புகழ் தேடிக் கொண்டுள்ளது தொழில்-வணிகத்துறை.





சென்ற ஆண்டுகளைவிட இந்த ஆண்டு விற்பனையில் சிறந்து விளங்கியிருக்கிறது. முதல் வாரத்திலேயே ஏறக்குறைய 65,000 ரூபாய்க்குரிய பீங்கான் பொருட்கள் விற்பனையாகியுள்ளன.

தினமும் காலையும் மாலையும் இந்தக் கண்காட்சியைப் பார்க்க வந்த மக்கள் தொகை ஏராளம், ஏராளம்.

இரவு 7 மணிக்கு மேல் வருகை புரிந்து, கண்காட்சிக் கூடத்திற்குள் செல்ல முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பும் மக்களின் எண்ணிக்கையைக் கணக்கெடுக்க இயலாது.

குறைந்த விலையில் நிறைந்த எழிலுடைய பீங்கான் பொருள்களை மக்கள் வாரிச் சென்ற காட்சி கண்களைவிட்டு அகலாத காட்சியாகும்.

அருமையும் பெருமையும் நிறைந்த இந்தக் கலைப் பொருட்கள், விரைவில் கடல் கடந்த நாடுகளையும் எட்டிப் பார்க்கவிருக்கின்றன என்ற செய்தி நம் செவிகளை எட்டுகிறது. ஒரு முறை இந்தப் பொருட்கள் வெளிநாட்டைத் தொட்டுவிட்டால் போதும் இவற்றிற்குத் தொடர்ந்து வரவேற்புக் கிடைக்கும் என்பது உறுதி! நமது ஏற்றுமதிச் சந்தையில் மிகுந்த முன்னேற்றம் ஏற்படும் என்பது திண்ணம்!





விழாவுக்கு வந்திருந்த பெருமக்களில் ஒரு பகுதியினர்.

# மூதறிஞருக்கு நினைவாலயம்

மறைந்த மூதறிஞர் ராஜாஜி அவர்களுக்கு கிண்டி காந்தி மண்டபத்தின் அருகில் உருவாகும் நினைவாலயத்தின் அடிக்கல் நாட்டு விழா 15-2-73 அன்று மாலையில் நடைபெற்றது. மேதகு ஆளுநர் கே. கே. ஷா அவர்களின் தலைமையில் முதல்வர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் பெருமதிப்பிற்குரிய குடியரசுத் தலைவர் வி. வி. கிரி அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

அனைவரையும் வரவேற்ற முதல்வர் கலைஞர் அவர்கள் ராஜாஜி அவர்களின் பெருமைக்குப் புகழ்மாலை சூட்டினார்கள். முதல்வர் குறிப்பிட்டதாவது :

“ராஜாஜி அவர்களுக்கு இந்த இடத்திலே நினைவாலயம் ஒன்றினை அமைக்க இருக்கிறோம். என்றாலும் அவரது நினைவாலயமாக நமது நெஞ்சமெல்லாம் அமைந்திருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ராஜாஜி அவர்கள் இந்தியாவின் தலைசிறந்த ராஜதந்திரியாகத் தமிழகத்தின் தவப்புதல்வராக- அனைத்துலக நாடுகளின் அரசியல் மேதைகளும் விரும்பத்தக்க வித்தகராக விளங்கினார் – கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தார். இலக்கிய கர்த்தாவாக– எளிய நடையில் தொன்மையான நூல்களைத் தந்த எழுத்தாளராக–எல்லாப் பதவிகளையும் வகித்த நேர்மையாளராக – அன்புக்குப் பாத்திரராகத் திகழ்ந்த மூதறிஞர்

ராஜாஜி அவர்கள் இன்று நம்மிடையே இல்லை என்றாலும் – அவரது தியாகம் – தொண்டு –எளிமை – இனிய சுபாவம் – ஆர்ப்பாட்டமில்லாத அரசியல் நடவடிக்கை ஆகியவை எல்லாம் நம்மை வழி நடத்திச் செல்லும் கொள்கை தீபங்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

தவறாகக் கருதமாட்டீர்கள் என்று கருதுகிறேன். தனிப்பட்ட முறையில், ராஜாஜி அவர்களின் மிகுந்த அன்புக்குப் பாத்திரமானவர்களில் நானும் ஒருவன்.

“இந்த நினைவாலயம் தமிழக அரசின் சார்பில் உருவாக விருப்பதால்-இதனைப் பொறுப்பேற்றுச் செய்து கொண்டிருக்கிறேன். நான் ஆட்சிப் பொறுப்பில் இல்லாதிருந்தாலும்கூட, அவருக்கு இப்படி ஓர் ஆலயம் உருவாக்கவேண்டிய சூழ்நிலை எழுந்திருந்தால், நான் தனிப்பட்ட முறையிலே நினைவாலயத்தை உருவாக்கி இருப்பேன். ராஜாஜி அவர்களுடன் 10, 12 ஆண்டுகள்தான் நான் பழகியிருக்கிறேன் என்றாலும் என்னை மிக மிகக் கவர்ந்திருக்கிறார். என்னிடம் அதிக அன்பினைச் செலுத்தியிருக்கிறார். பேரறிஞர் அண்ணாவின் தொடர்பும் மூதறிஞர் தொடர்பும் தமிழ்நாட்டில் எத்தனையோ மாறுதல்களை உருவாக்கியுள்ளன என்பதை அனைவரும் அறிவீர்கள்.

“அவருக்கும் எனக்கும் இடையே இருந்த நட்புறவு சாதாரணமானதல்ல — பேரவையிலும், மேலவையிலும் நான் இரங்கல் தெரிவித்த போதும் குறிப்பிட்டேன், ‘அவர் மரண முகப்பிலே இருந்த போதுகூட நம்முடைய நட்பு யாராலும் நீக்க முடியாதது என்று சொல்லிய வார்த்தைகள் என் நெஞ்சத்தின் ஆழத்தில் பதிந்திருக்கின்றன’ என்று!.

“40 கிரவுண்டு அளவுள்ள இந்த இடத்தில் நினைவாலயம் அமைய இருக்கிறது. இந்த நினைவு மண்டபம் ராஜாஜி அவர்களின் தியாக வரலாறுகளை உலகுக்கு எடுத்துச் சொல்லும் காவிய மண்டபமாகத் திகழும். முகப்பிலே அவரது முழு உருவச்சிலை ஒன்று அமைக்க விருக்கிறோம். ஆரம்ப மதிப்பீட்டுச் செலவு 5 இலட்சம் ரூபாயாக இருக்குமென்று கணக்கிட்டிருக்கிறோம்.

“இது தவிர, ராஜாஜி அவர்களின் சொந்த ஊரான தொரப்பள்ளியில் அவரது பிறந்த இல்லத்தைத் தமிழக அரசின் சார்பில் வாங்கி நினைவாலயமாக அமைக்க இருக்கின்றோம்.

“கட்டடங்கள் மாத்திரம் அவரது நினைவு இல்லமல்ல என்பதை நான் நன்கு அறிகிறேன். என்றென்றும் நமது நெஞ்சங்களிலே வாழ்கின்ற பெரிய மனிதர்களில் அவர் ஒருவர் !”

அட்டை சொல்லும் கட்டுரை



—இவ்வாறு தமது வரவேற்புரையில் ராஜாஜி அவர்களுக்குப் பாமாலை சூட்டினார் முதல்வர் கலைஞர்.

அதன்பின் மேதகு ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் ராஜாஜியின் பெருமை பற்றி உரை நிகழ்த்தினார்.

மேதகு ஆளுநர் குறிப்பிட்டார்:

"என்னுடைய மனச்சாட்சியின் காவலர் என்று காந்தியடிகளினாலே போற்றப்பட்ட ராஜாஜி அவர்களுக்குக் காந்தி மண்டபத்திற்கு அருகிலேயே நினைவாலயம் ஏற்படுத்துவது மிகப் பொருத்தமானதே! தீர்க்கதரிசியாக விளங்கிய ராஜாஜியின் மறைவு, நாட்டுக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு.

"இந்தியர்களுக்கு ஆளத் தெரியுமா என்று பிரிட்டிஷ்காரர்கள் சந்தேகத்தோடு கேட்ட காலத்தில், சென்னை மாநிலத்தின் முதலமைச்சராக மிகத் திறமையுடனும் கீர்த்தியுடனும் ஆட்சி செய்து காட்டிய சிறந்த நிர்வாகி. அவருடைய வாழ்க்கையே அறிவுச் செம்மலின் தெய்வீக வாழ்க்கையாக விளங்கியது."

அதன்பின் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி அவர்கள் அடிக்கல் நாட்டி உரையாற்றினார்கள்:

"மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்களின் நினைவாக, தமிழக அரசு கட்டும் நினைவாலயத்துக்கு அடிக்கல் நாட்டுவதில் நான் பெருமை அடைகிறேன்.

"நம் நாட்டின் அரசியல், கலாச்சாரம், இலக்கியம் ஆகியவற்றுக்கு ராஜாஜி செய்த முக்கிய தொண்டை யாரும் மறக்க முடியாது. இதன் காரணமாக நம் நாட்டு மக்கள் மட்டும் அல்ல, வெளிநாட்டினரும் அவரிடம் அன்பும், மதிப்பும் வைத்து இருந்தார்கள்.

"என் வாழ்நாளில் ராஜாஜி மறைந்த டிசம்பர் 25-ஆம் தேதியையும் அன்று அவருக்கு நான் எனது கடைசி மரியாதை செலுத்தியதையும் மறக்க முடியாது. ராஜாஜி மறைவினால், என்னுடைய நல்ல நண்பரையும், என் அரசியல் வாழ்வுக்கு வழிகாட்டியாக இருந்த தலைவரையும் இழந்துவிட்டேன்.

"50 ஆண்டுகளுக்கு முன், முதல் முதலாக நான் ராஜாஜியைச் சந்தித்தேன். காலம் செல்லச் செல்ல அவரிடம் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றதுடன், அவர் தலைமையின் கீழ் பணியாற்றும் சந்தர்ப்பமும் கிடைத்தது. பல பிரச்சினைகளில் அவரிடம் ஆலோசனை கேட்டு நான் நடந்திருக்கிறேன்.

"ராஜாஜி புகுத்திய விற்பனை வரி, மற்ற மாநிலங்களுக்கு வருவாயைப் பெருக்க வழிகாட்டியாக அமைந்தது. இந்த விஷயத்தில் பல எதிர்ப்புகளுக்கிடையே ராஜாஜி காட்டிய புத்திக் கூர்மை அனைவரையும் கவர்ந்தது.

"அத்துடன் மில் தொழிலாளர்களுக்குத் திருப்தி தரும் வகையில் ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்பு, மில்லைத் திறக்க அனுமதிக்கக் கூடாது. இதற்காக 144 தடை உத்தரவு போட வேண்டும் என்று கேட்டேன். இதைக் கேட்டு முதலில் ராஜாஜி வியப்புத் தெரிவித்தார். எப்படி இப்படிப்பட்ட தடை உத்தரவு போட முடியும் என்று அவர் கேட்டார். பிறகு இந்தத் தடை உத்தரவைப் போட அவர் சம்மதித்தார்.

"தன்னுடைய முடிவை அவர் ஊட்டியில் இருந்த கவர்னரிடம் தெரிவித்த போது கவர்னர் இதற்குச் சம்மதிக்கவில்லை. உடனே ராஜாஜி அரசின் முடிவை ஏற்காவிட்டால் நாங்கள் அனைவரும் ராஜினாமா செய்வோம் என்று கூறினார். இறுதியில் நாட்டின் வரலாற்றிலேயே முதல் தடவையாக முதலாளிகளுக்கு எதிராக 144 தடை உத்தரவு போடப்பட்டது. பிறகு முதலாளிகள் கீழே இறங்கி வந்து பிரச்னைக்குத் தீர்வு கண்டனர். ராஜாஜி ஒரு முடிவுக்கு வந்துவிட்டால் விளைவுகளைப் பாராமல் செயலாற்றுவார் என்பதற்காக இதைச் சொன்னேன்.

"ராஜாஜி தனி நபராக மட்டும் இருக்கவில்லை. ஒரு நிறுவனமாகத் திகழ்ந்தார். அவர் மறைவில் ஒரு சகாப்தம் முடிந்துவிட்டது. உலக ராஜ தந்திரியாகவும், அறிஞராகவும், அரசியல்வாதியாகவும், தத்துவ மேதையாகவும், எழுத்தாளராகவும், விடுதலைப் போராட்டவீரராகவும், சட்டமன்ற நிபுணராகவும், சிறந்த நிர்வாகியாகவும் திகழ்ந்த ராஜாஜி, நாட்டின் வரலாற்றில் அழியாத சின்னத்தை விட்டுச் சென்று இருக்கிறார்.

"ராஜாஜிக்கு நாம் செய்யும் அஞ்சலி மனித சுதந்திரம், பொது வாழ்வில் நேர்மை ஆகிய நன்னெறியைக் கடைப்பிடிப்பது தான்."

—இவ்வாறு குடியரசுத் தலைவர் வி. வி. கிரி அவர்கள் குறிப்பிட்டார்கள்.

தலைமைச் செயலர் திரு. சபாநாயகம் அவர்கள் நன்றி கூறிய பின், ராஜாஜி நினைவாலய அடிக்கல் நாட்டு விழா இனிது நிறைவேறியது.









# தஞ்சைத் திட்டம்

தமிழகத்தின் இயற்கை எழிலை அறியச் சங்கப் பாடல்களைப் படித்திட வேண்டும் என்பர். அவற்றைப் படித்துத்தான் உணர முடியும். இயற்கை யன்னையின் எழிலை—கோலத்தை—வண்ணத்தை — வகையைத் தஞ்சையை வளைய வளைய வந்தால் கண்டு, உய்த்து, உணர்ந்து மகிழலாம். இயற்கை யன்னையின் எழில் மாடமாக விளங்கும் தஞ்சை மாவட்டம் பற்றிப் ''பஞ்சத்தின் பரம வைரியே தஞ்சை மாவட்டம். வஞ்சிக் கொடி போல வளைந்தோடும் பொன்னியினால் 'வளம்' என்னும் சொல்லுக்கே வளமான பொருள் வழங்கும் களமாகத் திகழ்வது தஞ்சை'' என்பர்.

''நன்செய் கொழிக்கும் அது 'நெற்களஞ்சியம்' மட்டுமல்ல; இலக்கியப் புலவர் பலரைப் பெற்றெடுத்த சொற்களஞ்சியம் மட்டுமல்ல; ஆய கலைகள் அறுபத்து நான்கினுக்கும் தாயகமாகத் திகழும் கலைக் களஞ்சியமும் ஆகும்.'' எனத் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

அது மட்டுமா? சோழரின் வீரம் மணக்கும் தஞ்சையில் உள்ள பெரிய கோவில் தமிழினத்தின் நுண்ணறிவையும், கலைத் திறனையும் வெளிப்படுத்திப் பெரும் புகழ் சேர்த்துக் கொண்டிருக்கிறது. சரசுவதி மகால், கல்வி கரையற்றது என்பதைச் சொல்லிக்கொண்டிருக்கிறது. கல்லணை அன்றையப் பொறியியல்நிபுணத்துவத்துக்குச் சான்றாக நின்றுகொண்டிருக்கிறது. நீண்ட நெடு நாட்களாக இத்தனை பெருமைகளையும் கொண்டிலங்கும் தஞ்சை மாவட்டம் அண்மையில்—சென்ற ஆண்டில் அகில இந்திய அளவில் பெரும் புகழ் ஈட்டிப் பரிசு பெற்றுத்தமிழகத்திற்குச்சிறப்புச் சேர்த்துள்ளது.


வழக்கம் போல் உணவு உற்பத்தியில் வெற்றி பெற்றுப் பரிசு பெற்றதா? விஞ்ஞானத் துணை கொண்டு விளைச்சலில் புதுமை ஏதேனும் ஏற்படுத்திப் பரிசு பெற்றதா? ஓவியம், காவியம், சிற்பம், கல்வி, இவைகளில் எதற்காகவாவது பரிசு பெற்றதா? கலைகளிலே ஏதேனும் புதுமை காட்டிப் பரிசு பெற்றதா? இல்லை....இல்லை.... இத்தனைக்கும் அடிப்படையான —கொஞ்சம் சோர்ந்தால் துயரத்தின் எல்லைக்கே இட்டுச் சென்றுவிடக் கூடிய—நித்த நித்தம் கண்ணுக்குத் தெரிந்து உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் அணு ஆயுதங்களை விடக் கொடியதாக—நஞ்சினும் கொடுமையானதாக இருக்கும் மக்கள் தொகைப் பெருக்கப் பிரச்சினையைச் சமாளிக்க வேண்டிச் செயல்படுத்தப்பட்டு வரும் குடும்ப நலத் திட்ட முனைப்பு இயக்கத்தை நடத்துவதில் புதுமை காட்டிப் புகழ் சேர்த்துக் கொண்டது. ஆம்! நல்வாழ்வு நிலையங்கள் அமைத்து, முனைப்பு இயக்கம் நடத்தும் முறையை —இன்றைக்கு இந்திய நாடே பின்பற்றும் முறையைச் செயல்படுத்தியதற்காக, இந்திய அரசிடமிருந்து பரிசு பெற்றுத் தனக்குத் தானே புகழ் சேர்த்துக் கொண்டதோடு தமிழ் நாட்டிற்கும் புகழ் சேர்த்துள்ளது தஞ்சை மாவட்டம்.

இந்த ஆண்டு (1972–73) தஞ்சை மாவட்டம் தகுந்த முன்னேற்பாடுகளுடன் முனைப்பு இயக்கத்தை நடத்தி முடித்துள்ளது. முனைப்பு இயக்கக் காலத்தில் தஞ்சை மாவட்டம் 30 ஆயிரம் தந்தைமார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்திட வேண்டுமென இலக்கு நிர்ணயித்தது இந்திய அரசு. 15–1–1973-ஆம் ஆண்டு வரை முனைப்பு இயக்கத்தை நடத்தி 38,997 தந்தைமார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்து, இலக்கு மீறிய வெற்றியை ஈட்டிய மாவட்டம் என்ற நிலையை உருவாக்கிக்கொண்டதோடு, இவ்வாண்டு முனைப்பு இயக்கத்தில் தமிழ் நாட்டிலேயே மிக அதிகமான தந்தைமார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்த மாவட்டம் என்ற புகழையும் பெற்றுள்ளது. சென்ற ஆண்டு முனைப்பு இயக்கத்தில், தென் ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்து அளப்பரிய சாதனையை ஏற்படுத்தி, அதற்கெனத் தமிழ்நாடு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களிடமிருந்து பரிசையும் பெற்ற திரு கே. ஏ. நம்பியார் அவர்கள் தான், பல் துறை அலுவலர்கள், அலுவல் சார்பற்றோர் ஆகியோரின் துணையோடு இவ்வாண்டு முனைப்பு இயக்கத்தின் மூலம் தஞ்சை மாவட்டத்தில் பெரும் வெற்றியை ஏற்படுத்தியுள்ளார்.

முனைப்பு இயக்கக் காலத்தில் தந்தைமார்களுக்கான அறுவைச் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்ததோடு அமைந்துவிடவில்லை, மாவட்ட ஆட்சித்தலைவர். குழந்தைகளை நிறையப் பெற்றுக் கொண்டதால், அன்றாடத் தொல்லைகளுக்குள்ளாகின்றவர்கள் தாய்மார்கள் — அடிக்கடி குழந்தை பெறுவதால் உடல் நலக் கேட்டிற் குள்ளாகின்றவர்கள் தாய்மார்கள்— குழந்தைகளின் தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்து மகிழஇயலாத நிலையில் துடித்துக்கொண்டிருப்பவர்கள் தாய்மார்கள்— இப்படிப்பட்ட நெருக்கடிகளை உணர்ந்து குடும்ப நலத் திட்டம் ஏற்க முந்திக்கொண்டிருப்பவர்கள் தாய்மார்கள். அவர்களது நல்லுணர்வு வீணாகிவிடக்கூடாது, விழலுக்கு இரைத்த நீராகி விடக் கூடாது, அவர்களும் முனைப்பு இயக்கத்தின் போது அறுவைச் சிகிச்சை செய்துகொள்ள ஆவன செய்து தராவிட்டால், அவர்களது ஊக்கம் குன்றி, கருகிச் சருகாகி விடும். உணர்வுகள் மங்கிப் போகும். குடும்ப நலத் திட்டத்திற்கான ஆதரவு தாய்மார்களிடையே ஒருமுகப்பட்டு வரும் நேரத்தில் அந்த உணர்வைப் பயன்படுத்திக்கொள்ளத் தவறினால், வெண்ணெய் திரண்டு வரும் நேரத்தில் தாழி உடைந்த கதையாகிவிடும் எனக் கருதித் தஞ்சையிலுள்ள இராசா மிராசுதார் மருத்துவ மனையிலும், கும்பகோணம் அரசினர் மருத்துவ மனையிலும், நாகப்பட்டினத்திலுள்ள தஞ்சை மாவட்டத் தலைமை மருத்துவ மனையிலுமாக மாவட்டத்திலேயே மொத்தம் மூன்று இடங்களில் மட்டும் முனைப்பு இயக்கத்தின் போதே தாய்மார்கள் அறுவைச் சிகிச்சை செய்துகொள்வதற்கான வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தித் தந்தார் மாவட்ட ஆட்சித் தலைவர். வாய்ப்பு வசதிகள்தான் ஏற்படுத்தித் தரப்பட்டதே யொழிய, முனைப்பு இயக்கக் காலத்தில் அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளும் தந்தைமார்களுக்குக் கொடுக்கப் பட்ட ஈட்டுத் தொகையளவுக்கு அல்லாது, சாதாரணக் காலங்களில் வழங்கப்பட்ட முப்பது ரூபாய் தான் முனைப்பு இயக்கக் காலத்திலும் அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட தாய்மார்களுக்கு வழங்கப்பட்டது.

மாவட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த நல்வாழ்வு நிலேயம் ஒவ்வொன்றிலும், அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட தந்தைமார்களின் எண்ணிக்கை நூறு ஆனதும், அவர்களுக்கெனப் பரிசுக் குலுக்கல் ஒன்று நடத்தி முதற் பரிசு பெற்றவருக்குச் சைக்கிளும், இரண்டாவது பரிசு பெற்றவருக்கு 'கை' வாஞெலிப் பெட்டியும் (Transistors Radio), மூன்ருவது பரிசு பெற்றவருக்குப் பாத்திரங்களும் பரிசாக வழங்கியது போல, அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட தாய்மார்களுக்கெனப் பரிசுத் திட்டம் ஒன்றும் செயல்படுத்தப்பட்டது. இப் பரிசுத் திட்டத்தின் கீழ் முதற் பரிசு பெற்ற தாய்க்கு ஒரு பவுனும், இரண்டாவது பரிசு பெற்ற தாய்க்கு அரைப் பவுனும், மூன்ருவது பரிசு பெற்ற தாய்க்குப் பாத்திரங்களும் வழங்கித் தாய்மார்கள் உற்சாகப்படுத்தப்பட்டார்கள்—அவர்களுக்கு ஊக்கமூட்டப்பட்டது.

இத்தனைக்கும் மேலாக இவ்வாண்டு முனைப்பு இயக்கத்தின் போது தஞ்சை மாவட்டம் புதுத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகச் செயல்படுத்தியுள்ளது. நம் நாட்டுத் தாய்மார்கள் இல்லாமைக்கும், இயலாமைக்கும் ஆட்பட்டு, அவதிப்படுபவர்கள் ஆவார்கள். அதனாலேயே அருமையான தாய்மை உணர்வுகளை—தன்னைத் தானே உருக்கிக்கொண்டு ஒளியூட்டும் மெழுகு வர்த்தியின் நிலேயை—புகைந்து சாம்பலாகித் தன்னைத் தானே அழித்துக்கொண்டு மற்றவர்களுக்கு மணம் சேர்க்கும் ஊதுவத்தியின் நிலேயை—தியாக உள்ளத்தை இந்த நாட்டில் எந்தத் தாயும் இழக்கவில்லை. வறுமைத் தேள் கொட்டினாலும், — ஆண்டவன் செயலென்று ஆண்டுதோறும் பெற்று அவதிப்பட்டாலும் பந்த பாசம் விலக்கி, மேலை நாடுகள் போல் நீ யாரோ, நான் யாரோ என்று வாழ முற்படாத நாடு இந்த நாடு. அதனாலேதான் அரசு நடத்தும் சத்துணவுத் திட்டத்தின் கீழ் தன் குழந்தைகளுக்கு என்ன வாய்ப்பு—இலவசக் கல்வித் திட்டத்தின் கீழ் தன் குழந்தைக்கு எது வரை கல்வி புகட்டலாம்—மதிய இலவச உணவுத் திட்டத்தின் கீழ் உணவு பெறத் தன் பிள்ளை தகுதி வாய்ந்தவஞ—நிலப் பட்டா வழங்கும் திட்டத்தில் கொஞ்சம் நிலம் பெற்றுப் பிள்ளைக்கு உரியதாக்க முடியாதா—குடிசை மாற்று வாரியத்தின் மூலம் ஒரு வீடு கிடைத்து அதைப் பிள்ளைக்கு உரியதாக்க மாட்டோமா—இல்லை வீட்டு மனைப் பட்டா கிடைக்கப் பெற்று ஓலைக் குடிசையாவது போட்டு ''கையகல மனையானாலும், அது நம் சொந்த மனை' என்ற நிலேயை நம் பிள்ளைகளுக்கு ஏற்படுத்தித் தர மாட்டோமா''—என்று இப்படியெல்லாம் எண்ணிச் செயல்பட்டுத் தங்கள் குழந்தைச் செல்வங்களை முன்னேற்றத் துடிக்கும் தாய்மார்கள் நிறைந்த நாடாக இருக்கிறது தமிழ்நாடு.



அறுவைச் சிகிச்சைக்குள்ளான தாய்மார்களின் குழந்தைகளைப் பராமரிப்பதற்கான தஞ்சை இராஜா மிராசுதார் மருத்துவ மனையில் இயங்கிய குழந்தைகள் காப்பகக் காட்சி

இலவசக் கண் சிகிச்சை முகாம்களின் மூலம் ஏழைகளின் கண் திறந்து வரும் தமிழ்நாடு அரசு நல்வாழ்வு இல்லங்கள் அமைத்து முதல் கட்டமாகத் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளித்து வரும் தமிழ்நாடு அரசு—நச்சு நாற்றம் நிறைந்த கூவத்தை மணமுடைய தாக்கிப் படகுகள் பழுதின்றிச் செல்லத் தக்கதாக்கி விட்டதைப் போல், தங்கள் வாழ்க்கைப் படகு அமைதியாகச் செல்ல ஆவன செய்யும் என்ற பெருத்த நம்பிக்கையில் இயங்கிக்கொண்டிருக்கும் தாய்மார்கள், அரசுக்குத் துணைபோகும் முகத்தான் கைக் குழந்தையோடு — ஒரு வயது அல்லது இரண்டு வயது நிரம்பிய குழந்தையோடு மருத்துவ மனை சென்று அறுவைச் சிகிச்சை செய்துகொண்டால், குழந்தையை யார் பார்த்துக் கொள்வது—அதன் தேவைகளை யார் நிறைவு செய்வது என்று நினைத்து ஒதுங்கிச் செல்ல நேரிடுகிறது. அவர்கள் அனைவரும் குடும்ப நலத் திட்டம் ஏற்க வேண்டும் என்ற உணர்வு பெற்றதும், அந்த உற்சாகம் மங்கி, மறைவதற்குள் அவர்களை அறுவைச் சிகிச்சைக்குள்ளாக்க—அவர்களது குழந்தைகளை எந்தக் குறையும் இல்லாது பராமரிக்க ஆவன செய்துவிட்டால், துயர் ஏதுமின்றித் தாய்மார்கள் அறுவைச் சிகிச்சைக்கு அதிக அளவில் வருவார்கள் எனக் கருதிய தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவ மனையிலேயே 'குழந்தைகள் காப்பகம்' ஒன்றினை அமைத்து, அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட தாய்மார்களின் குழந்தைகளைக் கவனித்துக்கொள்ளும் முறையை —புதிய திட்டத்தை— இவ்வாண்டுத் தஞ்சை திட்டமாகத் தந்துள்ளார்.

தஞ்சை மாவட்டத்தில் தாய்மார்களுக்கென அறுவைச் சிகிச்சை செய்த மூன்று மருத்துவ மனைகளில் ஒன்ருன தஞ்சை இராசா மிராசுதார் மருத்துவ மனையில் அறுவைச் சிகிச்சைக்குப் பின் தாய்மார்கள் தங்கி ஓய்வெடுத்த பகுதியை ஒட்டியே 'குழந்தைகள் காப்பகம்' ஒன்று அமைக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டது. இதில் குழந்தைகள் தூங்குவதற்கான தொட்டில் முதல், விளையாட்டுச் சாமான்கள் ஈருகப்பல தேவையான பொருள்களும் இருந்தன. இங்கு வரும் குழந்தைகளை முறையாகக் கவனித்துக் கொள்வதற்கென்றே ஒருமுக்கியச் சேவிகாவும், நான்கு பால சேவிகாக்களும் இதில் பணியாற்றினர். அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட தாய், தன் குழந்தையை இக் குழந்தைகள்

காப்பகத்தில் விட்டு வைக்க அனுமதிக்கப்பட்டது. இங்குக் குழந்தைகளுக்கு நல்ல சத்துணவு வழங்கப்பட்டது. காலை, மாலை, இரவு நேரங்களில் நல்ல பாலும், முட்டை, ஆரஞ்சு, வாழைப்பழம் ‘ மாடர்ன் ரொட்டி ’ பிரிட்டானியா ரொட்டி ஆகியவை அனைத்துக் குழந்தைகளுக்கும் வழங்கப்பட்டன. அரசு மகளிர் நலத் துறையின் கீழ் இயங்கும் சேவை இல்லம் உணவு தயாரித்தளித்து உதவியது. காலையில் சிற்றுண்டியும், மதிய உணவும் கொடுக்கப்பட்டன. தாய்மார்கள் மருத்துவ மனையில் அறுவைச் சிகிச்சைக்குப் பின் தங்கியிருந்த ஆறு நாட்களிலும் அவர்களது குழந்தைகள், இக் குழந்தைகள் காப்பகத்தில் வைக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டனர். தங்களது தாய்மார்கள் தங்களை ஒட்டிய பகுதியிலேயே இருந்தபோதிலும், அவர்களிடம் செல்லாது காப்பகத்தில்தான் குழந்தைகள் பெரும் பொழுதை மகிழ்ச்சியாகக் கழித்தன என்பது குறிப்பிடத் தக்கதாகும். அத்தனை கவர்ச்சி மிக்கதாக இக் குழந்தைகள் காப்பகம் இருந்தது. சென்ற ஆண்டு முனைப்பு இயக்கத்தின் போது தஞ்சை மாவட்டத்தில் அமைக்கப்பட்ட நல்வாழ்வு நிலையங்களில் தங்கித் திரும்பிய தந்தைமார்கள் அங்கு வழங்கப்பட்ட நல்ல உணவின் காரணமாக உடல் எடை கூடிச் சென்றது போல், இவ்வாண்டு குழந்தைகள் காப்பகத்திலிருந்து குழந்தைகள் எடை கூடி, நல்ல உடல் நலத்தோடு தங்கள் தாய்மார்களுடன் திரும்பிச் சென்றனர்.

மேலும் இக் குழந்தைகள் காப்பகத்தில் அனுமதிக்கப்பட்ட குழந்தைகளுக்குக் கக்குவான், இருமல் வராமல் தடுக்க ஊசி போடப்பட்டதா, தொண்டை அழற்சி நோயும், இசிவு நோயும் வராமல் தடுக்கத் தடுப்பு ஊசி அல்லது மருந்து கொடுக்கப்பட்டதா எனக் கேட்டறியப்பட்டு —போட்டுக்கொள்ளாத குழந்தைகளுக்குக் குடும்ப நலத் திட்டத்தின் கீழ் அவை இலவசமாகப் போடப்பட்டன. சத்துணவுக் குறைவு காரணமாகத் துவண்டிருந்த குழந்தைகளுக்கு ‘ வைட்டமின் ’ மாத்திரைகள் வழங்கப்பட்டன.

இக் குழந்தைகள் காப்பகத்திற்குத் தேவையான தொட்டில்கள் மருத்துவ மனையிலிருந்தும் விளையாட்டுச் சாமான்கள், ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் இயங்கும் குழந்தைகள் காப்பகங்களிலிருந்தும் பெறப்பட்டன. இக் காப்பகத்தில் தங்கிய குழந்தைகளுக்கு உணவு வகையில் ஆன செலவுக்காக மாவட்டப் பொது நல நிதியிலிருந்து ரூ. 5,000-ஐ ஒதுக்கி, வெள்ளோட்ட அளவில் ‘ குழந்தைகள் காப்பகம்’ அமைத்துத் தாய்மார்களுக்கு அறுவைச் சிகிச்சை நடத்தும் முறையை, வெற்றிகரமாகச் செயல்படுத்தியுள்ளது தஞ்சை மாவட்டம். தஞ்சை தந்த இப் புதுத் திட்டத்தின் பயனாக இராசா மிராசுதார் மருத்துவ மனையில் 933 தாய்மார்கள் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டார்கள். இத் திட்டம் செயல்படுத்தப்படாத கும்பகோணம் அரசினர் மருத்துவ மனையில் 519 தாய்மார்களும், நாகப்பட்டினத்திலுள்ள மாவட்டத் தலைமை மருத்துவ மனையில் 466 தாய்மார்களும் அறுவைச் சிகிச்சை செய்துகொண்டுள்ளார்கள். நல்வாழ்வு நிலையங்கள் அமைத்து முனைப்பு இயக்கம் நடத்துவதால் ஏற்படும் வெற்றியைப் போல், இவ்வாண்டு தஞ்சை மாவட்டம் அறிமுகப்படுத்தியுள்ள, குழந்தைகள் காப்பகம் அமைத்துத் தாய்மார்களுக்கு அறுவைச் சிகிச்சை நடத்தும் முறையைச் செயல்படுத்தினால் பெருவாரியான தாய்மார்கள் அறுவைச் சிகிச்சைக்குள்ளாகி, நிரந்தரக் கருத்தடை செய்துகொள்வதன் மூலம் ‘ சிறு குடும்ப நெறி ’ ஏற்பார்கள் என்பது உறுதி.

—எஸ். முத்துராமலிங்கம்

## மக்கள் குறை தீர்க்கும் மகத்தான பணி

மதுரை மாவட்டத்தின் ஐந்தாவது மனு நீதி நாள் விழா தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்றது. இதற்கு முன்பு ரெட்டியார் சத்திரம், கொட்டாம்பட்டி, வாடிப்பட்டி, சின்னமனூர் ஆகிய ஊர்களில் சிறப்பாக நடந்தது.

“ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக மக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று அவர்களுக்குச் சாதகமான முறையில் குறைகள் நீக்கப்பட்டு வருகின்றன. அரசு அதிகாரிகளே கிராமம் கிராமமாகச் சென்று மக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று வரும் சூழ்நிலை இன்று ஏற்பட்டுள்ளது. மக்களிடமிருந்து பெற்ற மனுக்களை மாதத்தில் ஒரு நாள் மாவட்ட ஆட்சித்தலைவர், தமது அலுவலகத்தில் மனுக்களுக்குரிய சுமுகமான பதில்கள் மூலம் குறைகள் போக்க உத்தரவிடுகின்றார். மக்களே அரசு அதிகாரிகளைக் காண நேரில் சென்று தங்கள் குறைகளைச் சொல்லிவந்த காலம் மாறி, இப்பொழுது அதிகாரிகளே மக்களை நேரில் சென்று மனுக்களைப் பெற்றுவரும் நிலையைத் தமிழக அரசு உருவாக்கியுள்ளது’’ என்று மனு நீதி பற்றி விளக்கிக் கூறும் மாவட்ட ஆட்சித் தலைவர், சில புள்ளி விவரங்களையும் குறிப்பிடுகிறார்.

“1973 சனவரித் திங்களில் 4,006 மனுக்கள் பெறப்பட்டுள்ளன. இந்த மனுக்களில், வீட்டு மனைப் பட்டா, நிலப் பட்டா, முதியோர் உதவித் தொகை, இணைப்புச் சாலைகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, பள்ளி வசதி போன்ற பல வகைப்பட்ட தேவைகளை மக்கள் கேட்டிருக்கிறார்கள். பெறப்பட்ட 4,006 மனுக்களில் 2,160 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டு நல்ல முடிவு அறிவிக்கப்படுகிறது. 327 மனுக்கள் ஆய்வில் உள்ளன. மீதி 1,519 மனுக்கள் தீர்வு செய்யப்பட இயலாத நிலையில் உள்ளன.

“பட்டா செய்யப்பட வேண்டி 1,177 பேர்கள் மனுப் போட்டிருந்தார்கள். இவற்றில் ஒரு மனுவைத் தவிர 1,176 பேர்களுக்குப் பட்டா வழங்கப்படுகிறது. 101 பேர்கள் பட்டா மாற்றம் வேண்டி மனுச் செய்திருக்கிறார்கள். இவற்றில் 76 பேர்களுக்குப் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மீதி 35 பேர்களுக்குப் பட்டா மாற்றம் செய்ய இயலவில்லை. வீட்டுமனைப் பட்டா வேண்டி 600 மனுக்கள் வந்தன. 420 பேர்களுக்கு வீட்டுமனைப்பட்டா கொடுக்கப்பட்டது. 22 பேர்களுக்கு முதியோர் தொகை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ரூ. 4 இலட்சத்து 72 ஆயிரம் செலவில் இப்பகுதியில் குட்டைகள் அமைக்கும் திட்டம் ஒன்று உள்ளது. மதுரை மாவட்டத்தில் இந்த ஆண்டிற்கு இணைப்புச்சாலை அமைக்க ரூ. 50 இலட்சம் செலவிட அரசு நிதி ஒதுக்கியுள்ளது. இந்த ஆண்டு 1,500 மக்கள் உள்ள கிராமங்கள் அனைத்தும் இணைப்புச்சாலைகள் மூலம் இணைக்கப்படும். அடுத்த ஆண்டு 1,000 மக்கள் உள்ள கிராமப் பகுதிகளுக்குச் சாலைப் பகுதிகள் அமைக்கப்படும்.’’

# நல்லது கேட்கின் நலமுறச் சொல்வோம்!

இந்தியாவில் பசுமைப் புரட்சியில் தமிழகத்திற்கு முதலிடம்!

எல்லா
மாநிலங்களுக்கும்
வழிகாட்டியாக அமைந்துள்ள
**மாநிலத் திட்டக்குழுவின் பணிகள்**

*எல்லாச்*
சிற்றூர்களுக்கும்
**சாலை**
இணைப்புகள்!

இவைதனால் உருவாகும் நன்மையினும் பெரிது நாம் அமைத்திடும் அளவான குடும்பமே!

திட்டமிட்ட குடும்பமே நாட்டின் நலம் வளர்க்கும்!

*அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!*

**இரண்டுக்குப்பிறகு எப்போதும் வேண்டாம்!**

குடும்ப நலத்துறை, தமிழ்நாடு அரசு

தமிழரசு

# குழந்தை வியப்பு!

நீலக் கடற்கன்னி நெஞ்சில் துயில் தோய்ந்த
காலே இளங்கதிரோன் கரும்போர்வை மேலகற்றி
செக்கச் செவேரென்னக் கண்தான் சிவந்திடவே
பக்க மலேகளெலாம் பவளத் திரளாக்கிக்
கீழ்த்திசையில் நாணிக் கிளர்ந்தெழுந்த போதினிலே
வாழ்த்திசைக்கப் புள்ளினங்கள் வானிற் சிறகடிக்கச்
சோலே மரங்களெலாம் சுந்தரப்புன் னகைஉதிர்க்க,
ஆலே விளிசங்கு அலறி எமைஅழைக்க
வேலேக்குச் செல்லும் விரைவாரும் சிந்தையுடன்
நாளிதழ் ஒன்றை நயமாகக் கைபுரட்ட.
இத்தரையின் விந்தைகளை எளியேன் துருவிநின்றேன்.
அத்தருணம் கிண்கிணியின் அழகார் ஒலிகொஞ்சப்
பாதச் சதங்கை பல்வே றிசையொலிக்க
நாதத்திற் கேற்ப நடன நடை பயின்று
ஐந்துவய தின்னும் அரும்பாத என்பெயரன்
சிந்தூர வாயிதழில் தித்திக்கும் நீரூற
தாவி எனேயடைந்து 'தாத்தா' எனக்கூவி
ஆவி உருக அன்போ டெனேத்தழுவி
'வாங்கோநீ' இங்கென்றே மலர்க்கரத்தால் என்கையைப்
பாங்குடனே பற்றிப் பரிவோ டெனேயிழுத்து
வீட்டினது பின்புறத்தே விளங்கிப் பொலிகின்ற
தோட்டத்திற் கென்னேத் தொடர்ந்தே அழைத்திட்டான்!
காதலியைப் பின்தொடர்ந்து செல்லுமொரு காதலன்போல்
ஏது மறியாமல் என்பெயரன் பின்சென்றேன்
அன்பின்பின் செல்லார் அவனியிலு முண்டுகொலோ,
பச்சை உடையணிந்து பாவைநடம் செய்வதொப்பப்
பாகற் கொடியொன்று படர்ந்து தளிர்விட்டு
மென்காற்றில் ஆடி மேவிநின்ற அவ்விடத்தில்
என்பெயரன் சென்றுன், எனே இழுத்துக் கொண்டாங்காண்
'பாருங்கோ தாத்தா பாருங்கோ' என்றிசைத்தே
சுட்டுவிர லாற்பாகல் சுருள்கொடியைக் காட்டிநின்றுன்.
நேற்று வரைபூவா, நெடிய கொடியதுதான்
காற்றில் களித்துக் கன்னி நகைப்பதுபோல்,
பொன்னிறத்துப் பூவொன்றைப் பூத்துச் சிரிக்கின்ற
காட்சியதைக் கண்டேன்; கருவண் டனேயவிழி
கொண்டஎன் பேரன் குதித்துக் களித்தாடி
'பூப்பூப்பூ', என்றே பொன்மொழிகள் தானுதிர்த்தான்
அண்டத் ததிசயங்கள் அனேத்தும் அறிந்தான்போல்
'அப்பப்பா', இந்த அறியாக் குழந்தையுளம்
எப்போ தெனக்கிங்(கு) இயற்கை அளிப்பாளோ,
ஏதேதோ தேடி இவ்வுலகில் நாமலேந்து
தீது பலவும் தினமும் இயற்றி மிகச்
சாதல் புரிகின்றேம் எனவென் மனச்சான்று
ஓதல் புரிவதனே உள்ளம் உணர்ந்ததுவால்!

— பா. சொ. லிங்கம்



# 'மினி' செய்திகள்!

கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் எம்.சி.யு-7 என்னும் அதிகப் பருத்தியை உற்பத்தி செய்யக் கூடிய ஒரு புதிய உயர் ரகம் உருவாக்கப்பட்டுள்ளது. இது 135 நாட்களிலேயே பலன் கொடுக்க ஆரம்பிக்கிறது.





1972-73-ஆம் ஆண்டின் முதல் ஆறு திங்களில் 12,241 பேர்களுக்குக் கருத்தடைச் சாதனங்கள் பொருத்தப்பட்டன.

1971-72-ல் அரக்கு ஏற்றுமதியின் மூலம் இந்தியாவுக்கு 6 கோடியே 59 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் வருவாய் கிடைக்கிறது. இந்தியாவிடமிருந்து சுமார் 100 நாடுகள் அரக்கு வாங்குகின்றன. அரக்கு வர்த்தகத்தில் இந்தியா முன்னணியில் நிற்கிறது.





இந்தியாவில் இன்று சராசரி நாளொன்றுக்கு ஒரு படம் வீதமும் இரண்டு நாட்களுக்கு ஒரு துண்டுப் படம் வீதமும் தயாரிக்கப்படுகின்றன.

**கி.பி. 2000 ஆண்டில் உலக மக்கள் தொகை 590 கோடி.**

கி.பி. 2000 ஆண்டில் உலகின் மக்கள் தொகை இப்போதைய 370 கோடியிலிருந்து 590 கோடியாக உயரும்.

தமிழ்நாடு அரசு, மத்திய அரசுத் தானியக் களஞ்சியத்திற்குச் சுமார் 1 இலட்சம் டன் அரிசியை இலவசமாக வழங்க முன் வந்துள்ளது.



இந்தியாவில் தற்போது 4 கோடி டன் பாலைச் செலவிட வேண்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தற்போது 2 கோடி டன் பாலே உற்பத்தி செய்யப்படுகிறது. 1980-இல் 6 கோடி டன் பால் தேவைப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அஞ்சல்துறை தற்போது பல வேறு விதமாக 2125 படிவங்களை உபயோகித்து வருகிறது. இவற்றின் எண்ணிக்கையைக் குறைப்பதன் மூலம் ஆண்டொன்றுக்கு ரு.1 கோடி மீதமாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

கருத்தடைச் சாதனம் பொருத்தும் பணியில் தமிழ்நாடு முதல் இடத்தைப் பெற்றுள்ளது. — தொகுப்பு. கிரி

# தாடி வந்த கதை

பூங்கொடி

தம்பி, தங்கைகளே, நீங்கள் ஆபிரகாம் லிங்கனைப் பார்த்திருக்கிறீர்களா? இதோ, படத்தைப் பாருங்கள். இவர்தாம் ஆபிரகாம் லிங்கன். இவர் அமெரிக்கா என்ற நாட்டின் குடியரசுத் தலைவராக இருந்தவர்.

ஆரம்பத்தில் இவர் தாடியே வைத்துக் கொள்ளவில்லை. தாடி வைத்துக் கொள்ளவும் இவர் விரும்பவில்லை. ஆனால், இவர் அமெரிக்காவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் தாடி வளர்க்க ஆரம்பித்து விட்டார். ஏன் தெரியுமா? அது ஒரு கதை!

அமெரிக்காவில் ஒரு சிறுமி இருந்தாள். அவள் பெயர் கிரேசுமிடல். அவள் அழகானவள்; அறிவு மிக்கவள். ஒரு நாள் அந்தச் சிறுமி தன் தகப்பனாரிடம் பேசிக் கொண்டிருந்தாள். அப்போது அவரிடமுள்ள ஒரு படத்தை அவள் உற்றுப் பார்த்து அந்தப் படத்திலுள்ளவர் யார் என்று தெரிந்து கொண்டாள்.

சிறிதுநேரம் அந்தப் படத்தையே பார்த்துக்கொண்டிருந்த கிரேசு, ''லிங்கனுக்குத் தாடி இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?'' என்று எண்ணினாள். லிங்கனுக்குக் கடிதம் எழுதி, தாடி வளர்த்துக் கொள்ளச் செய்ய வேண்டும் என்று முடிவு செய்தாள்.

உடனே அந்தச் சிறுமி லிங்கனுக்குக் கடிதத்தை எழுதத் தொடங்கினாள். அந்தக் கடிதத்தில் அவள், ''தங்கள் முகம் மிகவும் இளைத்துப் போயிருக்கிறது. அதை மறைத்துக் கொள்ள, தாடி வளர்த்துக்கொண்டால் முகம் அழகாக இருக்கும். நீங்கள் தாடி வளர்த்துக் கொண்டால் சுலபமாக அமெரிக்காவின் தலைவராகவும் ஆகிவிடலாம்! ஆமாம்! ஆமாம். தாடி வைத்துக்கொண்டால்தான் நான் உங்களுக்கு ஓட்டுப் போடும்படிச் சொல்வேன்'' என்று எழுதி, லிங்கனுக்கு அனுப்பி விட்டாள். என்ன துணிச்சல் அவளுக்கு!




அந்தச் சமயம் அமெரிக்காவில் தேர்தல் காலமாக இருந்தது. அமெரிக்கத் தலைவர் பதவிக்குப் பலர் போட்டியிட்டார்கள். ஆபிரகாம் லிங்கனும் அந்தப் பதவிக்குப் போட்டியிட்டார். அதற்கான தேர்தல் வேலைகளிலும் தீவிரமாக ஈடுபட்டார். அவரது அலுவலகத்தில் தேர்தல் சம்பந்தமாகப் பலர் வேலை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது கிரேசுமிடல் எழுதிய கடிதம் அங்கு வந்தது.

ஆபிரகாம் லிங்கனுக்கு மிகவும் வேண்டிய ஒருவர் அக் கடிதத்தை பிரித்துப் படித்தார். ஒரு சிறுமி எழுதியிருப்பதைக் கண்டு அவர் சிரித்தார். மற்றொருவன், அக்கடிதத்தைக் கிழித்துக் குப்பைக் கூடையில் போடும்படி சொன்னான். அப்போது ஆபிரகாம் லிங்கன் அங்கு வந்தார். அவர்கள் பேசிக் கொண்டிருப்பது அவர் காதில் விழுந்தது. அவர் என்ன என்று விசாரித்து, அந்தக் கடிதத்தை வாங்கிக் கொண்டு படிக்க ஆரம்பித்தார். உடனே கடிதத்திற்குப் பதிலும் எழுதி அனுப்பினார்.

லிங்கன், அந்தக் கடிதத்தில், ''அன்புள்ள கிரேசு! உன் கடிதம் கிடைத்தது. நீ என்னைத் தாடி வளர்க்கும்படி கூறியிருக்கிறாய்! நான் எப்போதுமே தாடி வளர்த்துக் கொண்டதில்லை. இப்போதும் நான் தாடி வளர்க்க விரும்பவில்லை. அப்படி வளர்த்துக் கொண்டால் என்னைப் பார்த்து பைத்தியக்காரன் என்றும் சொல்லுவார்கள்! இருந்தாலும் பரவாயில்லை!'' என்று எழுதியிருந்தார்.

சில திங்கள் கழித்து ஆபிரகாம் லிங்கன் அமெரிக்காவின் குடியரசுத் தலைவரானார். அப்போது ஒரு சமயம் அவர் இரயிலில் போய்க் கொண்டிருந்தார். ஒரு இரயில் நிலையத்தில் இரயில் நிற்க நேர்ந்தது. ஆபிரகாம் லிங்கன் வந்திருப்பதைக் கண்ட பொது மக்கள் திரளாகக் கூடிவிட்டார்கள். சிறுமி கிரேசும் அங்கு தன் பெற்றோர்களுடன் வந்திருந்தாள்.

இரயில் நிலையத்துக்கு அருகில் ஒரு பொதுக் கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்தில் ஆபிரகாம் லிங்கன் பேசிக் கொண்டிருந்தார். அவர் பேசும்போது, '' இந்த ஊரில் கிரேசுமிடல் என்ற ஒரு சிறுமி இருந்தாள். அவள் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தாள். அந்தக் கடிதத்தில் என்னை தாடி வளர்த்துக்கொள்ளும்படி கூறியிருந்தாள். அவளால்தான் நான் தாடி வளர்த்துக் கொண்டேன். அவள் இந்தக் கூட்டத்திற்கு வந்திருக்கிறாளா?'' என்று கேட்டார்.

இதைக் கேட்டதும் கிரேசு துள்ளிக் குதித்துக்கொண்டு மேடைக்கு ஓடி வந்தாள். உடனே ஆபிரகாம் லிங்கன் அவளை அப்படியே அணைத்துக் கொண்டார். ''என்னைத் தாடி வளர்த்துக் கொள்ளும்படி வற்புறுத்தியவள் இந்தச் சிறுமி தான்!'' என்று கூறி அவளைக் கூட்டத்தினருக்கு அறிமுகப் படுத்தினார்.



கிரேசுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

லிங்கனின் முகத்தை உற்றுப் பார்த்த கிரேசு, "இப்போது உங்கள் முகம் எவ்வளவு அழகாக இருக்கிறது தெரியுமா?'' என்றாள் மகிழ்ச்சியாக.

ஒரு சிறுமியின் வேண்டுகோளுக்கு மதிப்புக் கொடுத்து, ஒரு நாட்டின் தலைவர், ஒரு மாமேதை தாடி வளர்த்துக் கொண்டார்! இது விந்தையாக இல்லையா?

இப்போதும் கூட அந்தச் சிறுமி எழுதிய கடிதம் அமெரிக்காவில் உள்ள ஒரு மாளிகையில் வைக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவிற்குச் செல்லும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அந்தச் சிறுமியின் கடிதத்தைப் படித்துப் பார்த்து ரசித்து மகிழ்கிறார்கள்.




ஆசிரியர், வெளியிடுபவர்: செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர்; தமிழ்நாடு அரசு அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை அண்ணாசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-2.




Criterion CO 2883

# வளம் நிறைந்த வருங்காலம்!



அவனுக்காக
சேமித்து வைக்க

இன்றே வாங்குங்கள்

## தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

முதல் பரிசு: ரூ. 1,00,000 (ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும். மற்றும் ஏராளமான இதர பரிசுகள்.

குலுக்கல் நாள் 12-3-1973

**பரிசு சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/-தான்**




கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2
விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி,
மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9.

2 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.